REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 16 யூலை - ஆகஸ்ட் 2009 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 124

# மக்களுக்கு பதில் கூற வேண்டும்!







வடக்கின் யாழ் மாநகர சபை வவுனியா நகர சபை ஆகிய தேர்தல்களோடு அரசியல் இயலாமையுடன் ஒதுங்கி நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்கள் முன்னிலைக்கு மீண்டும் வந்துள்ளனர். தமிழ் மக்களை வரலாறு காணாத பேரவலங்களுக்கு உள்ளாக்கி அரசியல் வனாந்தரத்தில் விடுவதற்குப் பங்களித்த இத் தமிழ்க் கூட்டமைப்பினர் எத்தகைய குற்ற உணர்வோ வெட்கமோ இன்றி தமிழ் மக்களிடம் வந்து நிற்பது தான் விசனத்திற்குரியதாகும்.

தமிழ் மக்கள் மத்தியில் மேட்டுக்குடி உயர் வர்க்க அரசியல் ஆதிக்கத்தை வாரிசு உரிமையாகப் பெற்றுக் கொண்டவர்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். இக் கூட்டமைப்பில் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர். எல்.எவ், ரெலோ, புலிகள் இயக்கம் இணைந்திருந்தன. இக் கூட்டமைப்பே 2002 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 22 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று புலிகள் இயக்கத்தை தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகளாகவும் ஏற்று நின்றனர். அத்துடன் தமிழீழம் வென்றெடுக்கப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்களிடம் கொள்கையாகவும் நடைமுறைப் போராட்டங்களாகவும் முன்னெடுத்து வந்தவர்களும் இவர்களே. இடைக்காலத்தில் ஆளும் அரசாங்கங்களின் பக்கம் சென்ற ஈ.பி.டி.பி. புளொட், வரதர் அணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன ஏற்கனவே தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டிருந்தன. அவ்வாறே இடைக் காலத்தில் அரசாங்கத்துடன் இணைந்து இருந்து வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ என்பன 2004ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டமைப்பின் ஊடாகப் பாராளுமன்றப் பதவிகள் பெறுவதற் காகப் புலிகள் இயக்க த்தின் தலைமையை ஏற்றுக் கொண்டனர்.

இவ்வாறான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ்த் தேசிய இனத்திற்கும் வடக்கு கிழக்கிற்கும் எத்தகைய அரசியல் வழிகாட்டலையும் தலைமைத்துவத்தையும் வழங்கினர் என்பது தான் கேட்கப்பட வேண்டிய கேள்வியாகிறது.

தமிழீழம் என்ற சாத்தியமற்ற கொள்கையை முன்வைத்ததிலும் அதனை வைத்துப் பாராளுமன்றப் பதவிகள் பெற்றதிலும் தமிழ் மக்களுக்கு அடைய முடியாத நம்பிக்கைகளை வளர்த்ததிலும் இக் கூட்டமைப்பினருக்குரிய பங்கும் பாத்திரமும் எவ்வகையிலும் குறைந்த ஒன்றல்ல. அவர்களே தமிழீழ எண்ணக் கருவின் மூல கர்த்தாக்கள்.

தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி பின்பு தோற்றம் பெற்ற தமிழ் இளைஞர் இயக்கங்கள், இறுதியாகப் போர்க்களத்தில் நின்ற புலிகள் இயக்கம் ஆகிய அனைத்தினதும் அடிப்படை தமிழ்த் தேசியவாதமே ஆகும். அது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முற்போக்கான தேசியமாகத் தன்னை வெளிப்படுத்தியது கிடையாது. பழமையும் பிற்போக்குத் தனங்களும் மேட்டுக்குடி உயர்வர்க்க சிந்தனைகளும் ஏகாதிபத்திய ஆதரவும் கொண்ட தமிழ்க் குறுந் தேசியவாதமாகவே அது இருந்து வந்துள்ளது.

இத்தகைய குறுந்தேசியவாதம் வழிகாட்டிய தமிழீழத்திற்கான போராட்டம் என்பது கடந்து முப்பது வருட காலத்தில் வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்டதன் மூலம் மிகப்பெரும் அழிவுகளையும் அவலங்களையும் தமிழ் மக்களும் கூடவே முஸ்லிம் மக்களும் அனுபவிக்க வேண்டியதாயிற்று. இப்போது திட்டவட்டமான புள்ளி விபரம் எதுவும் கிடையாது. ஒரு குத்து மதிப்பாகப் பார்க்கும் போது வடக்கு கிழக்கில் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கொலப்பட்டனர். சுமார் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் மடிந்துள்ளனர். ஏற்கனவே இடம்பெயர்ந்தவர்கள் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டவர்களாக உள்ளனர். இதில் ஒரு லட்சம் பேர் முஸ்லீம் மக்களாவர். இவற்றுக்கும் அப்பால் கடந்த மூன்று வருட வன்னிப் போரின் போதும் இறுதியாக முல்லைத்தீவின் போர்க்களத்திலும் மடிந்து போன மக்களின் தொகை பல பத்தாயிரம் வரை என்றே நம்பப்படுகிறது. இவற்றுக்கும் அப்பால் மூன்று லட்சம் மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

2ம் பக்கம் →

## சம்பள உயர்வு மோசடியாகவே இருக்கும்!

தோட்டத்தொழிலாளர்களின் சம்பளவுயர்வு தொடர்பான பொறுப்பு யாரைச் சாரும் என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். கூட்டு ஒப்பந்தத்தின் சம்பளவுயர்வு தொடர்பான சரத்துக் காலம் முடிவடைந்து நான்கு மாதங்களாகி விட்டன. இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகளில் கம்பெனிகள் 12% சம்பளவுயர்வுக்கு இணங்கியுள்ளன. அதாவது நாளொன்றுக்கு கிட்டத்தட்ட 30/= ஆகும். ஊவா தேர்தல் முடிந்ததும் 30/= ஐ சம்பளவுயர்வாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

அரசாங்கம் தனியார்துறைகளின் சம்பளம் அல்லது அதன் வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் கட்டுப்படுத்தவும் அழுத்தம் கொடுக்கவும் அதிகாரம் கொண்ட அமைப்பாகும். அது மட்டுமல்லாது கம்பெனிகளுடன் கூட்டு பேரத்தில் ஈடுபடும் பெரிய தொழிற்சங்கங்களில் இ.தொ.காவும் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டியும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றன. இதனால் அரசாங்கம் சம்பளவுயர்வை பெற்றுக்கொடுக்கும் அதன் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடியாது.

ஐ.தே.கட்சியின் தொழிற்சங்கமான இலங்கை தேசிய தொழிலாளர் சங்கமும் கூட்டுப்பேரத்தில் ஈடுபடும் அமைப்பாகும். எனவே சம்பளவுயர்வு தொடர்பில் ஐ.தே.கட்சியும் அதன் பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது. அதனால் அரசாங்கத்தரப்பும் எதிர்த்தரப்பும் குற்றம்சாட்டி தப்பிக்கொள்ள முடியாது. ஊவா தேர்தல்வரை காத்திருக்காது பேச்சுவார்த்தை முடிவுகளை வெளியிட வேண்டும். 30/= சம்பளவுயர்வை தொழிலாளர்கள் மீது திணிக்கக்கூடாது. அது வெறும் அற்ப காசு மட்டுமே.

நாட்சம்பளம் தொடர்பில் 500, 600 என ஒருவருக்கொருவர் முரண்பட்ட சம்பளத்தொகையை முன்வைக்காமல் அனைவரும் இணங்கி வாழ்க்கைச் செலவை எதிர்கொள்ளக் கூடிய நாட்சம்பளத்தை அறிவிக்க வேண்டும். சில தொழிற்சங்கங்கள் கூட்டு ஒப்பந்தத்தை நிராகரித்து வேறு மாற்றுவழியைத் தேடவேண்டும் என்கின்றனர். அப்படியெனில் சம்பளவுயர்வு தொடர்பில் கதைக்கக்கூடிய மாற்று அமைப்பாக சம்பள நிர்ணய சபையை நாடவேண்டி வரும். கூட்டு ஒப்பந்தம் சம்பள நிர்ணய சபை என்பது தொடர்பில் கூடிய தெளிவை பெற்றுக்கொண்டு இரண்டில் எந்த வழி சம்பளவுயர்வை பெற்றுக்கொள்ள இலகுவானதென அறிய பொதுக் கலந்துரையாடலொன்று அவசியமாகிறது.

அத்துடன் கூட்டு ஒப்பந்தத்தில் அனைத்து தொழிற்சங்கங்களையும் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். சம்பளவுயர்வை பெற்றுக்கொடுப்பதில் மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து தொழிற்சங்கங்களும் அரசியல் அமைப்புகளும் புத்தி ஜீவிகளும் பொதுவான உடன்பாட்டிற்கு வந்து குரல் எழுப்ப வேண்டும். அதேபோல அரசாங்கம் எதிர்கட்சி என்பவற்றுக்கும் சம பொறுப்புண்டு. அனைவரினதும் பங்களிப்புடனும் கம்பெனிகளுக்கு அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டும்.

விசேடமாக மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற்சங்கங்கள் அரசியல் அமைப்புகளிடையே சம்பளவுயர்வு தொடர்பில் பொது இணக்கப்பாடு ஏற்படுத்தவும் நியாயமான சம்பளத்தை தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்க போராடக்கூடிய வெகுஜன அமைப்புக்களை உருவாக்க அனைவரும் முன்வரவேண்டும். அதுவே காலத்தின் தேவையுமாகும்.

## அடுத்த கட்ட நகர்வு

தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட தமிழீழக் கோரிக்கைக்கான போராட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. எனவே அடுத்த கட்ட அரசியல் போராட்ட நகர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்ற விவாதம் பல நிலைகளிலும் எழுந்துள்ளது. எனவே வென்றெடுக்கக் கூடியதான கோரிக்கையும் சாத்தியமாகக் கூடிய வகையிலான வெகுஜனப் போராட்டப் பாதையும் தான் தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய தேசிய இனங்களினதும் இனவிடுதலைக்கான நிகழ்ச்சி நிரலாக இருக்க முடியும்.

அவ்வாறு நோக்கும் போது இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழ் மக்கள் ஆகிய தேசிய இனங்களின் இனவிடுதலைக்கான அல்லது சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் போராட்டம் இனிமேல் உயர்வர்க்கத் தினரது அல்லது சிறுமுதலாளித்துவ வர்க்கத் தலைமையில் முன்னெடுக்கப்படக் கூடியதல்ல என்பது பலவிதமான இழப்புகளுக்குப் பின்னர் கிடைத்துள்ள பட்டறிவாகும். அதே போன்று உழைக்கும் வர்க்கத்தினதும் இடதுசாரிகளினதும் தலைமையிலான அடுத்த கட்ட அரசியல் போராட்ட நகர்வே மக்கள் முன்னாலுள்ள ஒரே தெரிவாகும் எனப் புதிய-ஜனநாயகக் கட்சி கூறுகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதப் போராட்டம் இலங்கை இராணுவத்தினால், இந்திய உதவியுடன் முறியடிக்கப்பட்ட பின்னர் ஏறக்குறைய எல்லாத் தமிழ்க் கட்சிகளும் அரசாங்கத்துடன் இணைந்து போகிறபோக்கையே ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. சிலர் பழைய பல்லவி பாடி வருகிறார்கள். புலம் பெயர்ந்தவர்கள் மத்தியிலுள்ள ஒரு சிலர் ''நாடுகடந்த தமிழீழ அரசு'' என்ற கோட்பாட்டுடன் செயற்படலாம் என்று கூறுகின்றனர். ஆனால் பெரும்பாலான புலம்பெயர்ந்தவர்கள் நடுவே இடதுசாரிகளுடனான கூட்டு நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல்கள் தேவை என வலியுறுத்தப்படுகிறது.

இந்நிலையில் 1997இல் நடைபெற்ற புதிய-ஜனநாயகக் கட்சியின் மூன்றாவது தேசிய மாநாட்டு அரசியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் நான்காவது கட்டம் பற்றிய கருத்து முன்மொழிவினைக் கலந்துரையாடுவது பிரயோசனமாக இருக்கும்.

புதிய-ஜனநாயகக் கட்சியின் (1991இற்கு முன்னர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஸ்தாபகச் செயலாளர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தினை நான்கு கட்டங்களாக வகைப்படுத்தியிருந்தார். அதன்படி முதலாவது காலகட்டம் பொன்னம்பலம் இராமநாதன் சகோதரர்கள் காலம் தொடக்கம் 50இற்கு 50 கோரிக்கை முன் வைக்கப்பட்ட காலம். இரண்டாவது கட்டம் சமஷ்டி கோரிக்கை முன்வைக்கப்பட்ட காலம். மூன்றாவது தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து பாராளுமன்ற அரசியலும் ஆயுதப் போராட்டமும் நடத்தப்பட்ட காலகட்டம். எனவே நான் காவதாக அமைய வேண்டியது தொழிலாளர் வர்க்கத்தினதும் இடதுசாரி சக்திகளினதும் தலைமையிலான போராட்டக் காலகட்டமாகும்.


2ம் பக்கம் →

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



## விடுதலை செய் அல்லது விசாரணை செய்!





எமது கட்சித் தோழர்களான ஆர்.ஜெயசீலன், எஸ்.சுகேசனன், நி.பிரதீபன் ஆகிய மூவரும் புனையப்பட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் பயங்கரவாத சந்தேகக் குற்றச்சாட்டின் கீழ் முதல் இரண்டு தோழர்கள் இரண்டரை வருடங்களாகச் சிறை வைக்கப்பட்டுள்ளனர். மூன்றாவது தோழர் கடந்த ஆறு மாதங்களாகச் சிறையில் இரு்‌து வருகிறார். இவர்கள் மட்டுமன்றி ஆய ்‌த்திற்கும் மேற்பட்ட தமிழ் சிங்கள அரசியல் கைதிகள் இவ்வாறு சிறை வைக்கப் பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் விடுதலையும் இல்லை. விசாரணையும் இல்லாத நிலைதான் நீடித்து வருகிறது. அண்மையில் படைகளில் இருந்து தப்பி ஓடித் தலைமறைவாகிய நிலையில் கைது செய்யப்பட்ட 1800 பேர் ஜனாதிபதி யால் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் வெறும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட எமது தோழர்களும் ஏனைய அரசியல் கைதிகளும் மட்டும் தொடர்ந்து சிறையில் இருக்க வேண்டியுள்ளது என்ன நியாயம், மனித உரிமை இது தான் ஜனநாயகம். இது தான் ''மும்மணிகளால்'' ஆசீர்வதிக்கப்பட்டதாகக் கூறப்படும் இலங்கையின் அவலநிலை.

### அடுத்தகட்ட நகர்வு

1ம் பக்க தொடர்ச்சி

அத்தகைய கால கட்டம் எவ்வாறு அமையலாம் என்பது பற்றி புதிய- ஜனநாயக கட்சி அதன் மூன்றாவது மாநாட்டு அரசியல் அறிக்கையில் விபரித்திருக்கிறது.

சுயநிர்ணய உரிமைக்கும் தேசிய விடுதலைக்குமான நான்காவது கட்டப் போராட்டம் தொழிலாளர் வர்க்கத் தலைமையிலும் வழிகாட்டலிலும் ஐக்கிய முன்னணி ஊடாக மேற்கொள்ள வேண்டும். மேலும் உழைக்கும் சிங்கள மக்கள் மத்தியில் செயற்படும் இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு சக்திகள் அவற்றின் நிகழ்ச்சி நிரலிலும், விஞ்ஞாபன த்திலும் அடக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கான ஒத்துழைப்பை ஒன்றிணைக்க வேண்டும். அதேபோன்று தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காக செயற்படு கின்ற தமிழ் அமைப்புகள் இதுவரை காலமும் தமிழ் மக்களின் போராட்டத்திலிருந்து வந்த முதலாளித்துவ தலைமையை நிராகரித்து, அதற்கு மாற்றாக புரட்சிகரப் பாதையில் பயணிக்கும் உழைக்கும் வர்க்க இடதுசாரி சக்திகளுடன் கூட்டிணைய வேண்டும். இதுவே சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான சாத்தியமான ஒரே பாதை என்பதை ஏற்று செயற்பட முன்வரல் வேண்டும். அத்துடன் முஸ்லிம் மக்களின் தேசிய அபிலாஷைகளுக்கான கோரிக்கை அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் முஸ்லிம் மக்களும் மத அடிப்படைவாத பாதையிலன்றி இடதுசாரி, முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் கூட்டிணைந்தே அவர்களின் உரி மைகளை வென்றெடுக்க முடியும் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளும், வர்க்க ரீதியான உரிமைகளும் பாரம்பரிய தொழிற்சங்க, பாராளுமன்ற பாதையிலன்றி உழைக்கும் வர்க்க, இடதுசாரி சக்திகளின் தலைமையிலேயே வென்றெடுக்கப்பட முடியும்.

மேற்படி விடயங்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடி சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சியை வென்றெடுப்பதற்கான நான்காவது கட்டப் போராட்டத்திற்குரிய மூலோபாயம், தந்திரோபாயம் உட்பட குறுகியகால, நீண்டகால பொது வேலைத்திட்டம் வகுக்கப்பட வேண்டுமென புதிய-ஜனநாயக கட்சி அனைத்து இடதுசாரி, முற்போ க்கு, ஜனநாயக சக்திகளுக்கும் அறைகூவல் விடுக்கிறது.

இவ்விடயத்தில் தமிழ் அமைப்புகள் திறந்த மனத்துடனான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, மக்களின் பக்கத்தில் நின்று செயற்பட வேண்டும். அடக்கு முறையாளர்களின் கைகளில் அகப்படாமல் பட்டம், பதவி, சுய சௌகரியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மக்களின் உரிமைகளை வென்றெடுக்க பரந்த ஐக்கியப்பட்ட பொது உடன்பாட்டுடன் செயற்படுவதற்கு முன் வரவேண்டும். இதுவே அடுத்த கட்ட நகர்வாக இருக்க முடியும்.

### மக்களுக்கு பதில் கூற

1ம் பக்க தொடர்ச்சி

இத்தகைய அவல நிலையின் மத்தியில் இவற்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தமிழர் கூட்டமைப்பினர் தான். தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்குவதாகவும் வழி நடத்துவதாகவும் கூறிக் கொண்டே தமிழ் மக்களுக்குத் மேற்படி பேரவலங்களைத் தேடித் தந்தனர். யாவற்றையும் புலிகளின் தலைகளில் சுமத்தி விட்டு எவ்வகையிலும் இவர்கள் தவறிக் கொள்ள முடியாது. தமது தவறான தலைமைத்துவத்தையும் தமிழீழக் கோரிக்கை என்ற அழிவுகரமான கொள்கையையும் வெற்றி பெற முடியாத போராட்ட தந்திரோபாயத்தையும் முன்னெடுத்த சகல தமிழ்த் தேசியவாதத் தலைமைகளும் தமிழ் மக்கள் முன் குற்றவாளிகளாகவே நிற்கின்றனர்.

தமிழ் மக்களின் அழிவுகளுக்கும் பேரவலங்களுக்கும் மூன்று தரப்பினர் காரணமானவர்கள் என்பது பட்டறிவின் தெளிவாகும்.

1 ஆட்சிக்கு வந்த அனைத்துப் பேரினவாத முதலாளித்துவ அரசாங்கங்களும் அவர்கள் முன்னெடுத்த இன ஒடுக்கு முறைகளும் இராணுவ நடவடிக்கைகளும் யுத்த வழிமுறைகளும்.

2 தமிழ் மக்கள் மத்தியில் மேட்டுக்குடி உயர் வர்க்க சிந்தனை வழியிலான ஆதிக்க அரசியலை முன்னெடுத்த அனைத்துத் தமிழ்த் தேசியவா தத் தலைமைகள்.

3 பிராந்திய மேலாதிக்க வல்லரசான இந்திய ஆளும் வர்க்கமும் - அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளும்.

மேற்கூறிய மூன்று தரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் உதவுவது போன்ற கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி வந்தவர்களே. இதனால் பாதிக்கப்பட்டு அழிவுகளுக்கு உள்ளானவர்கள் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் தமிழ் மக்களாகவே இருந்தனர். இன்றும் அவர்களே சிலுவை சுமக்கும் மக்களாக இருந்து வருகின்றனர்.

இத்தனைக்கும் பங்குதாரியான தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எவ்வித சுயவிமர்சனமோ அன்றி மக்களுக்கு உரிய விளக்கமோ அல்லது மன்னிப்போ கோராது வழமையான தமிழ் மேட்டுக்குடி அரசியல் ஆதிக்க வழி நின்று மக்களிடம் வாக்குக் கேட்கிறார்கள். இதனைத் தமிழ் மக்கள் எவ்வாறு விளங்கிக் கொள்கிறார்கள். என்றென்றும் எத்தனை அரசியல் தவறுகளைச் செய்தாலும் எவ்வளவு அழிவுகளைக் கொண்டு வந்தாலும் "நாமே தமிழ் மக்களின் அரசியல் மேய்ப்பர்கள்'' என்ற ஆதிக்கத் திமிருடன் தான் தமிழ்க் கூட்டமைப்பினர் மீண்டும் ஏமாற்றத் தலைப்பட்டுள்ளனர். தமிழர் தன்மானம், தமிழ் உரிமை, உலகம் தேர்தலைப் உற்று நோக்கி நிற்கிறது என்ற பழைய பல்லவி யைப்பாட ஆரம்பித்துள்ளனர்.

அவர்கள் தமிழீழக் கோரிக்கைக்குப் பதில் கூறாது இப்போது பிரதேச சுயாட்சி மாநில சுயாட்சி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை, புனரமைப்பிற்கு ஒத்துழைப்பு என்றவாறு பேசத் தொடங்கியுள்ளனர். இவை பற்றி எங்கே முடிவு செய்தார்கள். மக்கள் முன்னிலையில் அல்லது அரசியல் அரங்கில் விவாதத்து விடயங்களைக் கூறுகிறார்களா? அல்லது தான் தோன்றித்தனமாகவும் சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்றவாறும் பேசுகிறார்களா?

இவை பற்றி முன்பு பேசிவர்களைத் துரோகிகள் என்று பட்டம் சூட்டிய இக் கனவான்கள் தான் இப்போது தமது தியாகிகள் வேடத்தைக் கலைந்து நிற்கிறார்கள். நீ செய்தால் தவறு அல்லது துரோகம் அசுனை நான் செய்தால் நியாயம் தியாகம் என்பது தமிழ்த் தேசியவாத ஆதிக்க அரசியல் அகராதியில் அன்று முதல் இன்றுவரை தொடரும் கதையாகும்.

ஆதலால் இத்தகைய ஆதிக்க அரசியலைத் தொடர்ந்து முன்னெடுக்க மீண்டும் அரங்கிற்கு வந்துள்ள தமிழர் கூட்டமைப்பினரையும் ஏனைய தமிழ்த்தேசியவாதத் தலைமைகளையும் தமிழ் மக்கள் நியாயம் கேட்க முன் வர வேண்டும். அதற்கான அரசியல் விழிப்புணர்வு இளந்தலைமுறையினர் மத்தியில் உருவாக வேண்டும். கடந்த காலத்தின் கொள்கை நடைமுறை போராட்ட தந்திரோபாயம் போன்ற ஒவ்வொன்றைப் பற்றியும் ஏன், எதற்காக, எப்படி, எதிர்காலத்திற்கு உகந்ததா, தூரநோக்கில் எத்தகைய விளைவுகளைக் கொண்டு வந்திரும், எதிரி யார், நண்பன் யார் போன் றவற்றை முன்வைத்த விவாதம் தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுவது இன்று அவசி யமானதாகும். அவ்வாறு செய்யப்படுவதன் மூலமே தமிழ்த் தேசிய இனத்தின் இன்றைய அவல ங்களையும் எதிர்கால இருப்பையும் உறுதி செய்ய முடியும். அதற்கான மக்கள் சார்புக் கொள்கையும் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான தூரநோக் குடைய நிலைப்பாடும் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட முடியும் என்பதே நமது உறுதியான நம்பிக்கையாகும்.

**புதிய பூமி சந்தா சேருங்கள் ~ நிதி உதவி தாருங்கள்!**

புதிய பூமி தொடர்ந்து வெளிவருவதற்கு வாசகர்கள் நண்பர்கள் ஆதரவாளர்களிடமிருந்து சந்தா மற்றும் நிதி உதவினை நாடி நிற்கிறது. மாற்று அரசியல் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் புதிய பூமியின் கருத்துக்களும் கண்ணோட்டமும் அவசியம் என்பதால் அதனைத் தொடர்ந்து வெளிவர ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகிறோம்.

சந்தா ஒரு வருடம் - 400 ரூபா, ஆறு மாதங்கள் - 200 ரூபா (தபாற் செலவு உட்பட)

**வெளிநாடுகள்**

ஐரோப்பா - 30 ஈரோ அமெரிக்க நாடுகள் - 40 டொலர் ஏனைய நாடுகள் - 25 டொலர் வங்கி மூலம் அனுப்புவோர் **S. Thevarajah, Bank of Ceylon A/C No 452868 Central Super Market Branch Petta.** என்பதற்கு அனுப்பவும். தபால் நிலையம் மூலம் அனுப்புவோர் **K. Senthivel** என்ற பெயரில் **Grandpass** தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பவும். புதிய பூமியின் தொடர் வரவிற்கு தங்களின் மேலதிக நிதி உதவி பங்களிப்பாக அமையும் என நம்புகிறோம். நன்றி.

**The Manager Puthiya Poomi**
**47, 3rd floor, C. C.S. M Complex, Colombo- 11 Sri Lank.**

## நாளும் நடக்கும் உலகிலே நற்குணன்

### நன்றி மறவாமை

''நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி
என்று தருங்கொல் என வேண்டா'' —

என்று ஔவையாரின் நீதி வெண்பா ஒன்று சொல்லுகிறது. இருபத்தேழு ஆண்டுகள் முன்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் இல்லாமலே மேலும் ஆறு ஆண்டுகள் ஆளுவதற்கு சனாதிபதி உதவினார். இப்பொழுது பாரளுமன்றம் அதே உதவியைச் சனாதிபதிக்குச் செய்து அவரை மேலும் ஆறு ஆண்டுகட்குப் பதவியில் அமர்த்தத் திட்டமிடப்படுகிறது. வேறு சனாதிபதி! வேறு பாராளுமன்ற உறுப்பினர்கள்! இருந்தாலும் என்ன? ஒரே விதமான விளையாட்டு! ஒரே விதமான அளாப்பல்!

### வெக்கங் கெட்ட பிறவி

இந்திய ஆட்சியாளர்களால் மிகவும் அவமதிக்கப்பட்ட இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருந்தால் அவர் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனாகவே இருப்பார். ஆனாலும் இந்திய மேலாதிக்கத்தின் இந்த அடிமைக்கு எதுவுமே உறைக்காது. விடுதலைப் புலிகளின் காலடியில் விழுந்து பாராளுமன்றப் பதவி பெற்ற இந்த வெட்கங் கெட்ட மனிதர், இப்போது தனது இந்தியத் துதிப் பாடல்களை உரத்துப் பாடத் தொடங்கியிருக்கிறார். இவர் இந்தியாவின் மேலாதிக்கத் திட்டங்களை அறியாதவரல்ல. இந்தியா 1987 – 1989 கால இடைவெளியிற் செய்த அட்டுழியங்களை அறியாதவரல்ல. அண்மையில் தமிழ் மக்களின் இன அழிப்புக்கு இந்தியா ஆற்றிய பங்களிப்பை அறியாதவருமல்ல. ஆனாலும், தான் மண்டியிடுவது போதாமல் தமிழர் எல்லாரையும் மண்யிடும்படியல்லவா வேண்டுகிறார். தனது தொகுதியிலே மிக அருமையாகவே காலடி பதிக்கிற இந்தப் பாராளுமன்ற உறுப்பினரைப் பெறுவதற்குத் திருகோணமலை என்ன புண்ணியஞ் செய்ததோ தெரியவில்லை.

### கறுப்புச் சனாதிபதி வெள்ளை அதிகாரம்

றொண்டுராஸ் மத்திய அமெரிக்க நாடு. அங்கு தான் அமெரிக்கா 1960களில் ஒரு பயங்கரமான ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தியது. அதன் பின்பு அந்நாடு மத்திய அமெரிக்காவில் நடத்தப்பட்ட அத்தனை மக்கள் விரோத வன்முறைகட்கும் ஒரு தளமாக்கப்பட்டது. அண்மையில் நிலைமைகள் மாறின. நாட்டுக்கு ஒரு புதிய அரசியல் யாப்பை அமைப்பதற்கான ஒரு சர்வசன வாக்கெடுப்பை யூலை முதல் வாரத்தில் மேற்கொள்ளப் போவதாக நாட்டின் சனாதிபதி அறிவித்தார். அதற்கிடையில் 28 யூன் அன்று ராணுவச் சதி மூலம் பதவியினின்று விலக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சதியை அமெரிக்கா கண்டித்து அறிக்கை விடுத்தாலும் இதில் மறைமுகமான அமெரிக்கக் குறுக்கீடு உள்ளது என்பதில் ஐயமில்லை. அமெரிக்கா இந்த ஆட்சிக் கவிழ்ப்பையிட்டு எதுவுஞ் செய்யாது. ஐ நாவும் எதுவுஞ் செய்யாது.

ஒபாமா தான் யாருடைய சனாதிபதி என்பதை வேகமாகவே நிரூபித்து வருகிறார். அமெரிக்கப் பெரு முதலாளிகளின் நலன்கட்கும் அமெரிக்க மேலாதிக்க நோக்கங்கட்கும் மாறாக அவரால் எதையுமே செய்ய இயலாது, அவர் எதையுமே செய் முயலவும் மாட்டார் என்பதைக் கால விரைவில் உணர்த்தும். கட்சி வேறு, நிறம் வேறு. ஆனால் அமெரிக்கச் சனாதிபதிப் பதவி எப்போதும் ஒன்றே தான்!. நமது புலம்பெயர்ந்த தமிழ்த் தேசியவாதிகள் இதை மனதிற் கொள்வார்களா?

### சிறப்பு விருந்தினர்கள்

இந்து நிறுவனத்தின் புறொண்ட்லைன் சஞ்சிகையில் முல்லைத்தீவுக் கடற்கரையோரத்தில் நடந்து முடிந்த போரின் இறுதி நாட்களைப் பார்வையிட இந்தியாவின் அரச தொலைக்காட்சி, வானொலி நிறுவனங்களினதும் இந்து பத்திரிகை நிறுவனத்தினதும் செய்தியாளர்கள் தடையின்றிச் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட்டதாக முரளிதர ரெட்டி என்பவர் எழுதியிருந்தார். வேறெந்த அயல் ஊடக நிறுவனமும் அனுமதிக்கப்படாத இடத்திற்கு இந்திய அரசு ஊடகத்தினர் அனுமதிக்கப்பட்டது நமக்கென்ன கூறுகிறது? அதினுஞ் சிறப்பாக ''இந்து'' என்கிற தனியார் நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது?

இறுதி நாட்களில் நிகழ்ந்தவை பற்றி நமது அரச ஊடகங்கள் சொன்னவற்றிற்கும் மேலாக முரளிதர ரெட்டியால் எதுவுமே சொல்ல இயலவில்லை என்றால் அவர் இந்து நிறுவன எசமானால் தனக்கு இடப்பட்ட பணியைச் சொன்னபடியே நிறைவேற்றியுள்ளார் என்று கொள்ளலாமா?

### எந்த இடதுசாரிகள்?

சிலகாலம் முன்பு வரை விடுதலைப் புலிகளை மெச்சி எழுதி வந்த ஒரு மூத்த ''தகைமை சால்'' பேராசிரியர் இப்போது விடுதலைப் புலிகளின் போராட்டமே தவறு என்றும் இடதுசாரிகளுடன் சேர்ந்து போராடித்தான் எதையும் பெறலாம் என்றும் ஓரிருவரிடம் தெரிவித்திருக்கிறார். ஆனால் அதை அவர் இன்னும் எழுதவில்லை. எனவே எந்த இடதுசாரிகள் என்ற கேள்வி எழுகிறது. நிச்சயமாகத் தனது ஊன்றுகோல்களில் ஒன்றாக இருந்து வரும் சாயங் கழன்ற பாராளுமன்ற இடதுசாரிக் கட்சி ஒன்றை மனதில் வைத்துத் தான் பேசியிருப்பார்.

### கட்சி தாவல்கள்

இப்போது தமிழர் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவசர காலச் சட்ட நீடிப்பிற்கு எதிராக வாக்களிக்காமல் தவிர்த்திருக்கிறார். அவர் ஆளுங் கட்சியில் இணையலாம் என்று சொல்லப்படுகிறது. இன்னொருவர் பற்றியும் இவ்வாறே சில மாதங்கள் முன்னர் கூறப்பட்டது. அதைவிடக், கிழக்கில் த.ம.வி.பு. இயக்கத்திலிருந்தும் ஆளுங் கட்சிப் பக்கம் தாவுகிறார்கள். முப்பது ஆண்டுகள் முன்பு துரோகம் என்று கூறப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட ''குற்றங்கள்'' விடுதலைப் போராட்டங்கள் பலவற்றுக்குப் பின்பு இப்போது வழமையான நடத்தையாகி விட்டனவா?

# மலையக இளைஞர்களும் தலைமைகளும்

கிட்டு

சமூகத்தின் இருப்புக்கும் அசைவியக்கத்துக்கும் இளைஞர்களின் பங்கு அளப்பரியதாகும். வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்ட சமூக மாற்றங்களை முனைப்படுத்துவதிலும், அதற்காக போராடுவதிலும் இளைஞர்கள் முன்நின்றார்கள். அதேபோல மலையகத்தில் இடம்பெற்ற பொருளாதார அரசியல் பண்பாட்டு ஒடுக்கலுக்கெதிரான போராட்டங்களிலும் இளைஞர்களின் பங்களிப்பு மிகப் பெரியதாகும். மலையக இளைஞர்களின் எழுச்சிக்குப் பெருமளவில் அடித்தளமாக அமைந்தவை 1960களின் பின்னே முனைப்புப் பெற்ற திராவிட இயக்கத்தினதும் இடதுசாரி இயக்கத்தினதும் செயற்பாடுகளாகும். அவர்களை சிந்தனை ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் ஆக்கபூர்வமாக வழிநடத்தியதில் அன்றைய புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதன் தலைமையிலான தொழிற் சங்கங்களுக்குப் பாரிய பங்குண்டு.

1978ஆம் ஆண்டு டெவன் நீர்மறிப்புக்கு எதிரான போராட்டமும், அதன் போது காவல்துறையினரின் துப்பாக்கிக்கு இரையாகி தியாகியான சிவனு லெட்சுமணனின் கொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட ஹைலன்ஸ் கல்லூரி மாணவர்களின் போராட்டமும் மலையகத்தின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமானவையாகும். 2000ம் ஆண்டுக்குப் பின்பு நடத்தப்பட்ட ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி போராட்டம், மேல்கொத்மலைத் திட்டத்துக்கெதிரான மக்கள் இயக்கம் முன்னெடுத்த போராட்டங்கள், 3179 ஆசிரிய நியமனங்களுக்காக நடத்தப்பட்ட போராட்டங்களும் அண்மையில் மலையக அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவை. இவ்வாறான போராட்டங்களில் இளைஞர்கள் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து தோள்கொடுத்து உயிர்ப்புடன் செயற்பட்டனர்.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலையைப் பார்த்தோமெனில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டதாய், நாட்டை மீட்டு விட்டதாய் கூறும் போரின் வெற்றிக் கூச்சல் அடங்காத நிலையில் இருக்கிறோம். ஆயினும் இன்னும் சிறுபான்மை மக்களுக்கெதிரான அச்சுறுத்தல் தொடர்கிறது. கைது, கடத்தல், கொலை என்பன முடிவுக்கு வரவில்லை. இன பிரதேச வேறுபாடுகள் கடந்து அனைத்து சாதாரண மக்களும் பொருளாதார அரசியல் ரீதியாக தேக்கத்தையும் ஒடுக்குறையையும் சந்திக்கின்றனர். சாதாரணமாய் மறியல் போராட்டம் செய்வது கூட கொழும்பில் அச்சத்தால் அருகிப் போன சூழல்.

இவ்வாறானதொரு இக்கட்டான சூழலில் மலையகப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் மற்றும் மாகாணசபை பிரதிநிதிகள் தொழிற்சங்கவாதிகளின் செயல்கள் நகைப்புக்குரியதாகவே உள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தற்போது இளைஞர் படைக்கு புதிய தளபதியாக ஒருவரைக் கும்பகோணத்திலிருந்து இறக்குமதி செய்திருக்கிறது. மலையக மக்கள் முன்னணியின் பழைய தளபதிகளும் இருக்கின்றனர். கட்சிகளும் அரசின் அமைச்சரவையில் அங்கம் வகித்து மலையக மக்களுக்குச் சலுகைகளைப் பெற்றுத் தருவதாய் கூறிக் கொள்கின்றன.

இந்த இருபெரும் கட்சிகளிலிருந்து உடைப்பு ஏற்படுத்தி வெளியேறிய கட்சிகளும் தொழிற் சங்கங்களும் இவற்றக்கு மாற்று எனக் கூறிக் கொண்டாலும் கடந்த மாகாணசபைத் தேர்தலில் அவற்றின் சுயரூபம் வெளிப்பட்டது, சாராயம் கொடுத்து வோட்டு வாங்கி பதவியில் அமர்ந்து கொண்டவர்களும் உண்டு.

இவ்வாறானதொரு சூழலில் மலையக இளைஞர்கள் தாம் சார்ந்த சமூக முன்னேற்றத்திற்கு என்ன செய்யப் போகிறார்கள்? என்ன செய்யலாம்? தலைமைகள் என்ன செய்யப் போகிறார்கள் எனும் கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

அத்துடன்

- மலையகத் தலைமைகள் எதற்காக இளைஞர்களை திரட்டினார்கள், எதற்காகப் பயன்படுத்தினார்கள்?
- அவர்களின் வளர்ச்சிக்குத் தலைமைகள் என்ன செய்தார்கள்? எதை நோக்கி வழிநடத்திச் சென்றார்கள்? என்பவற்றையும் பார்க்க வேண்டும்.

பாராளுமன்ற அரசியலை நம்பி சீரழிந்து போன எல்லா மலையகக் கட்சிகளும் தேர்தலை மிக லாபகரமான வியாபாரமாகவே கருதுகின்றன. அவற்றின் முதலீடுகள் பெரும் தொழிற்துறைகளைப் போல தேர்தலில் முதலிடப்படுகின்றன. பெரும் கட்சிகளும் அதன் உதிரிகளும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மலையகத்தில் அரசியல் செய்பவர்களும் தமது தேர்தல் வியாபாரத்தின் அங்கமாகவே இளைஞர்களைப் பயன்படுத்துகின்றனர்.

தமது தேர்தல் பிரச்சார வேட்டைக்காகவும், அடியாட்களாகவுமே அவர்களைப் பயன்படுத்துகிறார்கள். தாம் பதவிகள் பெறவும் தம் சுற்றம் சுகமாக வாழவும் சாதாரண இளைஞர்களை ஏணியாகப் பயன்படுத்தினர். மேலே போனதும் எத்தி தள்ளிவிடுவர். சலுகையை எதிர்பார்த்து அரசியல் சக்திகளை அண்டிப் பிழைப்பவர்களாகவும் தமது ஆளுமைகளை இழந்து விட்டவர்களாகவும் தான் இன்றைய பெரும்பாலான இளைஞர்கள் உள்ளனர். வேலை பெற்றுத் தருவதாயும் இன்னும் பல சலுகைகளைப் பெற்றுத் தருவதாயும் ஆசை காட்டியும், அல்லது பொய்யாக அரசியல் வார்த்தை ஜாலங்களால் மயக்கியும் இளைஞர்களைத் தம் பிடிக்குள் வைத்துள்ளனர்.

இளைஞர் சக்தியை சிந்தனை செயற்பாட்டு ரீதியாக மிகவும் பின்னுக்குத் தள்ளியதில் பிற்போக்கு அரசியல் சக்திகளின் பங்கு மிகப் பெரியது. அதைவிட படித்த தொழில் செய்யும் இளைஞர்களும் அனேகமாய் சலுகை பெற அரசியல்வாதிகள் பின்னால் அலைபவர்களாகத் தான் உள்ளனர். அப்படியெனில் மலையகத்தில் மாற்றுச் சக்திகள் முற்போக்குச் சக்திகள் இல்லையா? அதனோடு இளைஞர்கள் இணைந்து நிற்கவில்லையா? எனும் கேள்வி எழுவது இயல்பு - இருக்கிறார்கள் ஆயினும் அவர்கள் மிகச்சிலரே.

மலையக மக்களின் ஒவ்வொரு போராட்டங்களிலும் தம்மை பிணைத்துக் கொண்ட மக்களோடு மக்களாய் இணைந்து நின்று அரசியல் செய்யும் புரட்சிகர சக்திகள் இருக்கிறார்கள். மனிதர்களை எல்லாவித ஒடுக்கலிலும் இருந்து விடுவிக்க சமூக மாற்றம் ஒன்றே வழி என்று போதிக்கும் சக்திகள் இருக்கிறார்கள். அவர்கள் தமது நடைமுறையில் இளைஞர்களுக்கு கல்வியூட்டி சிந்தனை செயற்பாட்டு ரீதியாக வளர்த்து அவர்களை வழிநடத்தியவர்கள். அவர்கள் தமது சுயலாபத்துக்காக இளைஞர்களைப் பயன்படுத்தவில்லை. இதே குணாம்சங்களை பிற்போக்கு தொழிற்சங்க அரசியல் சக்திகளிடம் இருக்கும் என நம்பி அவர்களது முதலாளித்துவ ஏகாதிபத்திய அடிவருடிச் சிந்தனைக்கு துணைபோவதை இளைஞர்கள் நிறுத்த வேண்டும். கெட்ட சக்திகளை நிராகரித்து நல்ல சக்திகளை நோக்கி மலையக இளைஞர்கள் திரள வேண்டும்.

மலையக இளைஞர்களை சிந்தனை ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் வளர்த்தெடுக்கும் பொறுப்பு சமூக மாற்றம் கோரி நிற்கும் புரட்சிகர சக்திகளையே சாரும். மேலும் தமதணியில் இளைஞர்களைத் திரட்டிக் கொள்ள களத்தில் இறங்க வேண்டும். சமூக மாற்றம் ஒன்றுதான் விடுதலைக்கான வழி என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அமைப்பு ரீதியில் அணிதிரண்டு மலையக மக்களின் விடுதலைக்கான பாதையில் செல்ல வேண்டும். இதில் இளைஞர் யுவதிகளின் பங்கும் பணியும் முக்கியமானவையாகும்.

# சர்வதேச நாணய நிதியத்திடம் அடிபணிந்த மஹிந்த சிந்தனை

இலங்கை மத்திய வங்கி 1950ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. 1950இல் சர்வதேச நாணய நிதியத்தில் இணைந்து கொண்ட இலங்கை அடுத்த நாளான ஆகஸ்ட் 29ம் திகதி அதன் முதலாவது ஒதுக்கீட்டை அந் நிதியத்திடமிருந்து பெற்றது. அவ் வேளை ஐ.தே.கட்சி பதவியில் இருந்தது.

சர்வதேச நாணய நிதியம் அபிவிருத்திக் கடன் வழங்குவதில்லை. அபிவிருத்திக் கடனை வழங்கும் பொறுப்பு உலக வங்கியிடம் உள்ளது. சென்மதி நிலுவையில் கஷ்டங்களை எதிர்நோக்கும் நாடுகளுக்கு அவற்றின் நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்காகவே சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குகிறது. அதே வேளை தமது ஏகாதிபத்திய உள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கிறது.

ஒருவருக்கு என்று ஒரு வங்கியில் கடனுக்கு மனுச் செய்தால் அந்தக் கடனை வழங்குவதற்காக ஏகப்பட்ட பத்திரங்களை நாம் பூர்த்தி செய்ய வேண்டும். கடனுக்கான நிபந்தனைகள் கண்ணுக்குத் தெரியாத சிறிய எழுத்துக்களில் இருக்கும். அந்த நிபந்தனைகள் அனைத்தையும் நாம் வாசித்துப் பார்ப்பதில்லை, வாசிக்கவும் முடியாது. எமக்குத் தேவை கடன். பிரதான நிபந்தனைகள் என்ன என்பதை மட்டும் தெரிந்து கொண்டு பத்திரங்களில் ஒப்பமிட்டு கடனைப் பெற்றுக் கொள்வோம். இதை ஒத்ததே சர்வதேச நாணய நிதியம் என்ற வங்கியும். நிபந்தனைகள் எதுவும் இன்றிக் கடன் பெற்றோம் என்று கூறுவது மக்களை முட்டாளாக்குவதாகும்.

அந்த வங்கியின் நிர்வாக இயக்குனர் டொமினிக் ஸ்ரஸ் கானின் கூற்றுப்படி "கடினமான நடவடிக்கைகளை" எடுப்பதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது. அந்த "கடினமான நடவடிக்கைகள்" என்ன என்பதை நாம் எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதியில் நடைமுறையில் தெரிந்து கொள்வோம்.

எவ்வாறாயினும் நிபந்தனைகளில் ஒன்று இலங்கை நாணயமான ரூபாய் மிதக்க விடப்படும். அதன் மூலம் வெளிநாட்டு நாணயம் சேகரிக்கப்படும். வேறு வகையில் சொல்வதானால் இலங்கை நாணயம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளது. அதனைப் பாதுகாக்க மத்திய வங்கி முற்படாது. இது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் ஒன்று.

இருபது கோடி டொலர் பெறுமதியுள்ள இராணுவத் தளபாட கொள்வனவுக் கட்டளையை அரசாங்கம் ரத்துச் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை அரசு இராணுவச் செலவை மட்டுப்படுத்த வேண்டும் என்பதும் நிபந்தனைகளுள் ஒன்றெனக் கூறப்படுகிறது. அரசாங்கம் எவ்வாறு இராணுவச் செலவை மட்டுப்படுத்தப் போகிறதென்பதையும், பொறுத்திருந்து பார்ப்போம். இராணுவத்திற்கு மேலதிகமாக ஐம்பதாயிரம் பேரை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை தொடருமா என்பதும் இனிமேல் தான் தெரியவரும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் மற்றொன்று புதிதாக மக்களுக்கு மானியங்கள் வழங்கக்கூடாது என்பதாகும். யூன் மாதத்தில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டன. கோதுமை மா இறக்குமதியாளருக்கு வழங்கிய சலுகையை இரத்துச் செய்ததன் மூலம் யூலை நடுப்பகுதியில் கோதுமை மாவினால் தயாரிக்கும் உணவுப் பண்டங்கள் விலை அதிகரித்தன. பின்னர் விலை ஒரு ரூபாவால் அதிகரித்தது.

சர்வதேச சந்தையில் பால் மாவின் விலை குறைந்த போதும் அது பயனாளிகளிடம் செல்வதைத் தடுக்கும் வண்ணம் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டன. உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவெனக் கூறி பம்பாய் வெங்காயத்திற்கும் புதுத் தீர்வை விதிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியம், மின்சாரம் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கடன்பளு படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் பெற்றோலியப் பொருட்கள் மின்சாரம் தொடர்பாக மக்கள் அரசாங்கத்திடமிருந்து மானியத்தை எதிர்பார்க்க முடியாது. இதுவும் நிபந்தனைகளில் ஒன்று. இதன் ஊடாக இரு நிறுவனங்களும் தனியார் மயப்படுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டளவில் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்திகள் ஐந்து வீதத்திற்குட்பட வேண்டும் என்றும் ஒரு நிபந்தனை.

புதிதாக வரி மன்னிப்பு வழங்கப்படக் கூடாது. வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செலவினத்தை மட்டுப்படுத்த வேண்டும். வரி செலுத்துவோரிடமிருந்து வரியை அறவிட தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும். வரி விதிப்பு விஸ்தரிக்கப்படும். மொத்தத்தில் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். படிப்படியாக வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும். மக்கள் தியாகம் செய்ய வேண்டுமெனவும் இப்போதே கூறத் தொடங்கி விட்டார்கள்.

இழுபறியில் இருந்த சர்வதேச நாணய நிதியத்தின் கடனை வழங்குவதற்கு சடுதியாக முடிவெடுத்ததில் இந்தியா அதன் அழுத்தத்தைப் பிரயோகித்ததாகவும் அறிய முடிகிறது. 13வது திருத்தத்தை அரசு முழுமையாக அமுல் நடாத்தும் என்ற உறுதியின் பேரில் அழுத்தம் மேற் கொண்டதாக அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் அமெரிக்கா, பிரிட்டன, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்பதும் இங்கு கவனிக்கப்படல் வேண்டும். வீட்டோ அதிகாரமும் பிரயோகிக்கப்படவில்லை.


இது ஒரு புறமிருக்க முன்பு கொழும்பில் மூடப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் காரியாலயமொன்று திறக்கப்படவுள்ளது. சர்வதேச நாணய நிதியம் இலங்கையில் ஒரு செல்வாக்கான பாத்திரத்தை வகிக்கவுள்ளது என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அரசுக்குமிடையேயான உடன்பாட்டில் இலங்கை அரசின் சார்பில் பதில் பிரதி அமைச்சர் ரன்ஜித் சியாம்பலபிட்டியவும் மத்திய வங்கியின் ஆளுனர் நிவாட் கப்ராலும் கைச்சாத்திட்டனர்.

மொத்தமாக வழங்கப்படவுள்ள 260 கோடி டொலர் கடனில் ஒரு பகுதியான சுமார் 31 கோடி 30 இலட்சம் டொலர் ஏற்கனவே வழங்கப்பட்டது. மிகுதித் தொகை காலாண்டுத் தவணை அடிப்படையில் இருபது மாதங்களுக்குள் வழங்கப்படும் என இணங்கிக் கொள்ளப்பட்டது. நிபந்தனைகள் அடுத்த மூன்று மாதத்தில் நிறைவேற்றப்படாவிட்டால் தவணைத் தொகை வழங்கல் தாமதமாகலாம்.

எவ்வளவு உயரத்திற்கு கம்பத்தில் நின்று கரணம் அடித்துக் காட்டினாலும் காசு வாங்கக் கீழே தான் வர வேண்டும் என்பதற்கு இணங்க அமெரிக்க மேற்குலகம் பார்த்திருந்தது. வெறும் வாய் வீச்சு நடாத்திய மகிந்த சிந்தனை அரசாங்கம் இறுதியில் மேற்குலகப் பிடியில் உள்ள சர்வதேச நாணய நிதியத்திடம் மண்டியிட வேண்டியதாயிற்று. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாகும். இதன் மோசமான சுமைகளை நாட்டு மக்களே சுமக்கப் போகிறார்கள். வரி வட்டி திறை யாவும் மக்கள் தலைகள் மீது சுமத்தப்படும் என்பதே உண்மை. அதற்கு மக்கள் எத்தகைய பிரதிபலிப்பைக் காட்டப் போகிறார்கள் என்பது தான் கேள்வியாகிறது.

ஜி.எஸ். (30-7-09)

## த.சிதம்பரப்பிள்ளையின் மறைவுக்கு அஞ்சலி



வடபுலம் கரவெட்டிப் பிரதேசத்தின் பொதுவுடைமை முன்னோடிகளில் ஒருவராகவும் இறுதி மூச்சுவரை கூட்டுறவுத்துறை ஊடாக மக்கள் சேவை செய்தவருமான த.சிதம்பரப்பிள்ளை தனது 78வது வயதில் இயற்கை எய்தினார். அவர் ஆசிரியராகவும், கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 40 வருடங்களாகத் தன்னலமற்ற சேவையாற்றி அதன் தலைவராகவும் பதவி வகித்து சமூக நலனை முன்னுறுத்தி மக்கள் சேவை செய்தவராவார். பொதுவுடைமை வழிநின்று தனது மனித நேய வாழ்வையும் கூட்டுறவுத் துறையின் ஊடாக பல்வேறு முன்னுதாரண செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்திய சிதம்பரப்பிள்ளை அவர்களின் மறைவு பெரும் இழப்பாகும். அன்னாரது மறைவுக்குப் புதிய பூமி தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் கூட்டுறவாளர்கள் மற்றும் மக்களுக்கும் புதியபூமி தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# வன்முறைகளும் மலையகத்தில் அதன் தாக்கங்களும்

**வன்முறைச் சம்பவங்கள்** இலங்கையில் மிகவும் சாதா ரணமான சம்பவங்களாகி விட்டன. அன்றாடம் செய்தித் தாள்களில் கொடுமையான வன்முறைச் சம்பவங்கள் சிலதைப் படித்து விடலாம், ஆயினும் நாம் அதைப் பற்றிய கரிசனை ஏதுமின்றி வாழ்ந்து கொண்டிருக் கிறோம். இலங்கையில் இனமுரண்பாடு போராக வடிவெடுத்த பின் அரச படைகளதும், போரா ளிக் குழுக்களதும் ஜனநாயக மறுப்பு நடவடிக்கை களும் அதே போல பாதாளக் குழக்களின் வன்முறைச் சம்பவங்களும் கணிசமாக அதிகரித்துள்ளன.

இவை எமது வாழ்வுக்கும் அசைவியக்கத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளதைப் போலவே தனிப்பட மனிதர்களுக்கிடையில் அல்லது ஒருத்தரால் இன்னொ ருவருக்கு இழைக்கப்படும் வன்முறைகளும் பெரும் அச்சுறுத்தலானவையாகும். மலையகத்தைப் பொறுத் தளவில் பரவலாகவே இதை போன்ற வன்முறைச் சம்பவங்களும் துஷ்பிரயோகங்களும் நடந்து கொண்டு தானிருக்கின்றன. இவ்விடத்தில் எடுகோளாக இரண்டு பிரதேசங்களில் நடந்த கொடுமையான சம்பவங்கள் மூன்றைப் பர்ரக்கலாம்.

● கெடபுலா நடுப்பிரிவு தோட்டத்தின் கணக்குப் பிள்ளை, அவரது மனைவி மகள் ஆகியோரின் கொலையாகும். அவர்கள் வீட்டிற்குக் கொள்ளையடிக்க வந்தவர்களாலேயே மேற்படி கொலைச் சம்பவம் நடந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

● டெம்பள்ஸ்டோ தோட்டத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்பவர் அவரது சகாக்களால் வெட்டிக் காயப்படுத் தப்பட்டுள்ளார்.

● மேற்படி தோட்டத்தைச் சேர்ந்த சாரதியான ஜெய சீலன் என்பவர் தனிப்பட்ட கோபங்களுக்காக அதே தோட்டத்தைச் சேர்ந்த சிலரால் கொலை செய்யப்ப ட்டுள்ளார். இந்த நபர் மகேந்திரனை வெட்டிய சம்பவத்தில் சந்தேக நபராகவும் சிலகாலம் விளக்கமறி யலில் இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

● அத்துடன் பெண்கள், சிறுவர் மீதான பாலியல் அச்சுறுத்தல்களும் வன்முறைகளும் அதிகரித்த அளவில் நடைபெறுகின்றன. வன்முறைகளுக்கெ திரான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்களதும்; வேறு அமைப்பு க்களினதும் விழிப்புணர்வு கருத்தரங்குகளும் பரவ லாகவே நடக்கின்றன. ஆயினும் இந்த சம்பவங்களை எதுவும் கட்டுப்படுத்தவோ அல்லது தடுக்கவோ முடியவில்லை.

● ஏன் இந்த வன்முறைகள் நடக்கின்றன என்பதை ஆராய வேண்டும்.

● மனிதர்கள் சிறு முரண்பாடுகளைக் கூட தீர்த்துக் கொள்ள முடியாமல் கொலை செய்யுமளவிற்கு ஏன் செல்கின்றனர்.

● ஏன் கொள்ளையடிக்கும் தேவை ஏற்படுகிறது?

● ஏன் தமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடி யாமல் அவற்றிற்கு ஆட்பட்டு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்?

இதற்குப் பிரதானமான இரண்டு காரணங்களைச் சொல்லலாம்.

1. தற்போது நிலவும் பொருளாதார அமைப்பில் பொரு ளாதார விமோசனம் இல்லாமை, அடிப்படைத் தேவை களைப் பூர்த்தி செய்யுமளவிற்கு பொருளாதார வளர் ச்சி இல்லாமை அத்துடன் அரசியல் அடக்குமுறை.
2. இந்த பொருளாதார அமைப்பு தனக்கெதிராகக் கிளம்பக் கூடிய மனிதர்களை மழுங்கடிக்கும் வகை யில் செய்யும் நச்சுக் கலாச்சாரப் பிரச்சாரம் பண்பாட்டு ரீதியாக மனிதர்களின் மூளையை ஆக்கிரமித்துள்ளது. சீரழிந்த ஊடகங்கள் குறிப்பாக தொலைக் காட்சி சினிமா சின்னத்திரை போன்றவற்றின் பங்கு இதில் மிகவும் ஆழமானதாகும். ஆக்கபூர்மான மனிதர்களுக்கு பதில் எதையும் புதிதாய் உருவாக்கத் திராணியில் லாத மனிதர்களையே தோற்றுவிக்கிறது.

எனவே இந்த வன்முறைச் சம்பவங்களை இல்லா தொழித்து நல்ல சமூகச் சூழலை உருவாக்குவது எப்படி என சிந்தித்தல் வேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு காரணமான பொருளா தார அரசியல் கலாச்சார நிலைமைகளை அழித்து ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்த அனைவரும் ஒன் றுபட வேண்டும். வேறுபாடுகள் களைந்து மனித நேயப் பதாகையைத் தூக்கிப் பிடிக்கும் வெகுஜன அமைப்புகளை சமூக அரசியல் பண்பாட்டு ரீதியில் கட்டியெழுப்பி இவற்றுக்கெதிராகப் போராடுவது காலத்தின் தேவையாகும்.

கிட்டு -




## பதுளை தேர்தலும் பஞ்சப் படியும்

பதுளை மாவட்டத்தில் பிரசாரங்கள் வெகுஜோர். ஊவா மாகாணத்தில் பதுளை, மொனரா கலை மாவட்டங்கள் இருந்த போதும் பதுளை மாவட்டத்திலேயே தோட்டத் தொழிலாளர்கள் கணிசமாக வாழ்கின்றனர். அவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள எல்லா கட்சிகளிலும் தமிழ் வேட்பாளர்களின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இதன் நோக்கம் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதிலுள்ள போட்டியாகும். எல்லா யூனியன்காரர்களும் பதுளையை ஆக்கிரமித்துள்ளனர். மலசலகூடங்களுக்கும், தண்ணீர் பைப்புகளுக்கும் வேட்பாளர்கள் அடிக்கல் நாட்டுகிறார்கள்.

யூனியன்காரர்களின் பல நூறு வாக்குறுதிகளுக்கு மத்தியில் 'சம்பள உயர்வும்' ஒன்றாக இருக்கிறது. மாகாண சபை தேர்தல்களுக்கும் சம்பள உயர்வு கோரிக்கைகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை.

கம்பெனிகளிடம் அல்லது அதனை பிரதிநிதித்துவம் செய்யும் முதலாளிமார் சம்மேளனத்துடன் தான் சம்பள உயர்வு பற்றிப் பேச வேண்டும். அது தொழிலாளர்களுக்கும் தெரியாமல் இல்லை. ஆனாலும் நாள் சம்பளத்தை ரூபா 500/= ஆக அதிகரித்துத் தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி என்பன தெரிவிக்கின்றன.

இதனை உறுதி செய்யும் வகையில் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. அதாவது சம்பள உயர்வு பற்றிய பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட யூனியன்கள் தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை ரூபா 500 ஆக உயர்த்தித் தரும்படி கேட்டுள்ளன. அதனை தோட்டக் கம்பெனிகளின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இலங்கை முதலாளிமார் சம்மேளனம் நிராகரித்து விட்டது. அதற்குப் பதிலாக 12-1/2 வீத சம்பள உயர்வை மட்டுமே தரலாம் என்று கூறியுள்ளது. அதாவது நாளொன்றுக்கு 30 ரூபாவை அதி கரித்துத் தரவே இணக்கம் தெரிவித்துள்ளது. இதனை கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வரும் மூன்று தொழிற்சங்கங்களும் நிராகரித்ததை அடுத்து சம்பள உயர்வுக்கான பேச்சுவார்த்தை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆக, சம்பள உயர்வுக்கான பேச்சுவார்த்தை ஊவா மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு அதாவது ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதிக்கு முன்பு நடைபெறமாட்டாது. அதனால் அதில் தொழிற்சங்கங்கள் புரியப் போகும் சாதனை ஊவா மாகாண சபைத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால் நாளாந்த சம்பளம் 500 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை தேர்தல் பிரசாரத்தில் ஒரு ஏமாற்றாகப் பயன்படுத்தப்படலாம்; 500 ரூபா கோரிக்கை ஒரு தேர்ல்தல் விளையாட்டு என்பதை விளங்கிக் கொள்ள முடியாமல் இல்லை.

பேச்சுவார்த்தையில் முடிவேதும் எடுக்கப்படாத படியால் சம்பள உயர்வு தொடர்பாக அடுத்த கட்டமாக செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஏனைய தொழிற்சங்கங்களுடன் பேச் சுவார்த்தை நடத்தப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார். இது இன்னொரு தந்திரோபாயம். நான் இவ்வளவு தான் வாங்கிக் கொடுப்பேன். இதற்கு மேல் முடிந்தால் யாரும் வாங்கிக் கொடுக்கட்டும் என்று இம்முறை சவால்விட முடியவில்லை என்பதையே காட்டுகிறது.

சில வருடங்களுக்கு முன்பு அட்டன் மல்லிகைப்பூ சந்தியில் நடத்திய நாடகம் போல் நாடக மொன்றை நடத்தி மக்களை வீதிக்கு இறக்கி வேடிக்கை பார்த்துவிட்டு, காட்டிக் கொடுப்பதும் இலகுவானதல்ல. சென்றமுறை தலைவர்களின் தயக்கத்தினால் தன்னெழுந்தவாரியாகத் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். அவற்றை கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத சங்கங்கள் அவற்றின் அரசியல், தொழிற்சங்க வளர்ச்சிக்காக பயன்படுத்திக் கொண்டன. தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டனர். இம்முறை தொழிலாளர்களுடன் போராட்ட சக்திகளும் மௌனமாகவே இருக்கின்றன.

சம்பள உயர்வை, தொழிலாளர்களின் உழைப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, தொழிற்துறை வருமானம் என்பவற்றைக் கணக்கில் எடுத்து தீர்மானிக்கப்பட வேண்டும். வழமைபோல் தோட் டக் கம்பெனிகள் 'நட்டப் பாட்டையே' பாடுகின்றன. தோட்டக் கம்பெனிகளுக்கு வரிச்சலுகையை மட்டுமல்ல 2007ஆம் ஆண்டு 197 மில்லியன் ரூபாய் மானியத்தையும் அரசாங்கம் வழங்கியுள்ளது. கம்பெனிகள் அரசாங்கத்திற்கு வழங்க வேண்டிய இத்தகைய வாடகைப் பணத்தையும் செலுத்தாமல் இருக்கின்றன. தர்க்க ரீதியாக நட்டம் என்று கூறி சம்பள உயர்வை வழங்க முடியாதென கம்பெனிகள் சமாளிக்க முடியாது. அந்த சமாளிப்பை ஏற்றுக் கொண்டு சம்பள உயர்வுக் கோரிக்கையைக் காட்டிக் கொடுத்து விட்டு தொழிலாளர்களின் முன்னே வருவதற்குத் தொழிற் சங்கங்களுக்கு இயலுமாக இராது. இவ்விடயத்தில் "புதிய தலைவர்களுக்கும்" விமர்சனங்களைச் செய்து கொண்டு மலசலகூடங்களைக் கட்டிக் கொடுத்து தண்ணீர் பைப் போட்டுக் கொடுத்துக் கொண்டு வெகுதூரம் செல்ல முடியாது.

அரசாங்கத்திடமே தோட்டங்களின் சொத்துரிமை இருப்பதால் தோட்டத் தொழிலார்களுக்கு நியாயமான சம்பள உயர்வை உறுதி செய்வதில் அரசாங்கத்திற்கு இருக்கும் பொறுப்பிலிருந்து அது விலகிக் கொள்ள முடியாது. அரசாங்கம் தலையிட வேண்டும். கேட்க வேண்டிய சம்பள உயர்வு தொடர்பாக தொழிற்சங்கங்களிடையே பொது இணக்கப்பாடு வேண்டும். அதனை வென்றெடுப்பதில் பொது அணுகுமுறை தேவை. அதற்கு அரசாங்கத் தலையீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தோட்டக் கம்பெனிகள் இணக்கம் தெரிவிக்காவிட்டால் தோட்டங்களை விட்டு கம்பெனிகளை வெளியேற்றி தோட்டங்களைப் புதிய நிர்வாகத்திற்குள் கொண்டு வர வேண்டும். தொழிலாளர்கள், தனியார், அரசாங்கம் என்பன இணைந்த கூட்டுறவு முகாமை த்துவத்தில் தோட்டங்கள் நடத்தப்பட வேண்டும். ஊவா மாகாணசபைத் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு சம்பள உயர்வை வென்றெடுக்க முடியும் என்பது பொய்.

மாகாணசபை அபிவிருத்தித் திட்டங்களில் பெருந்தோட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை. இது மாகாண சபையிலுள்ள குறைபாடு மட்டும், மன்றி உள்ளூராட்சி சபைகளிலுமுள்ள குறைபாடாகும். மாகாணசபைகளுக்கும், பிரதேச சபைகளுக்கும், பாராளுமன்றத்திற்கும் வாக்களிக்கும் உரிமை மட்டுமே தோட்டத் தொழிலாளர்களுக்கு இருக்கிறது. அதன் அபிவிருத்தி திட்டங்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை சட்டத்தில் இல்லை. அந்த தேர்தல்களில் வெற்றி பெறத்தான் மலையகத்தின் பழைய, புதிய தலைவர்கள் இந்த சுத்து சுத்துகிறார்கள்.

தோட்டங்களில் பாதைகளையும், படிகளையும் அமைத்த உடபலாத்த பிரதேச சபையும் அதன் தலைவரும் சட்ட முரணாக நடந்ததாகக் கூறி மத்திய மாகாண முதலமைச்சர் அப்பிர தேச சபையின் இயக்கத்தை இடைநிறுத்தியுள்ளார். இந்நிலையில் பிரதேச சபைகள், மாகாண சபைகளின் வரையறையை விளங்கிக் கொண்டு அவற்றின் செயற்பாட்டு எல்லை பெருந்தோட் டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட அரசியல் ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ●

### சிறையில் இருந்து ஒரு கடிதம்

# ஒரு கம்யூனிஸ்டின் மன உறுதி

என்றும் அன்புடன்,

தோழர்களே நான் இன்று சிறை வந்து ஆறு மாதங்கள் சென்று விட்டன. ஆனால் இதுவரை நான் எதற்காக கைது செய்யப்பட்டிருக்கிறேன் என்பது பற்றி என்னை கைது செய்த பொலிஸாரும் சொல்லவில்லை விசார ணை செய்தவர்களும் சொல்லவில்லை. அவர்கள் என்னிடம் கேட்ட கேள்விகளுக்கும் எனக்கும் எதுவித தொடர்புகளும் கூட எனக்குக் கிடையாது. அத்துடன் நான் புதிய-ஜனநாயகக் கட்சியின் கொள்கைகளையும் தத்துவங்களையும் மிகவும் அவதானத்துடனும் ஒரு கம்யூனிஸ்ட் தோழரின் நேர்மையுடனும் கடைப்பிடித்து வருபவன். ஆதனால் நான் போராட்டம் என்று சொல்லித் திரியும் பிற்போக்கு சக்திகளுடன் அணிசேர வாய்ப்பும் கிடையாது.

ஏனெனில் இயங்கியலை மாக்சிய, லெனினியத்தை மிகவும் அவதானத்துடன் கற்றவைகளிலிருந்து இங்கு பிரச்சனைக்குரியது வர்க்கப் போராட்டமே அடிப்படை யான பிரச்சினை என்பதை மிகவும் ஆழமாக நம்புகிற வன். அத்துடன் வரலாறுகளை தூக்கிப் பார்த்து தேசிய வாதிகளும், ஏகாதிபத்தியவாதிகளும் இனம், மதம், மொழி என்பவற்றைப் பிரயோகம் செய்து வந்திருப்பதும் தெரிந்த விடயம்.

ஒருவன் கூப்பிட்டு மிரட்டுகிறான். இன்னொருவன் சுட வருகிறான், இன்னொருவன் ஊழல் செய்கின்றான், மற்றுமொருவன் வறுமைப்பட்ட பாடசாலை பிள்ளைகளு க்கு வரும் உணவுக்குரிய பொருட்களை விற்கிறான் இவையெல்லாம் எமக்குத் தெரிந்தும் நாம் கேட்கப் போகுமிடத்து பிரச்சினைகள் வருகின்றன. ஆனால் நாம் கேட்காமல் இருக்கவும் முடியாது. ஏனெனில் நாம் கட்சி, மக்கள் என்று சொல்லிக் கொண்டு மக்க ளின் பிரச்சினைகளில் மக்களுக்கு உதவாமல் வழிகாட் டாமல் இருக்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு விடய ங்களிலும் மக்களுடன் கட்சி நிற்கின்றது. கலந்து ரையாடுகின்றது. புதிய பூமி விநியோகம் செய்கின்றது, தாயகம் விநியோகம் செய்வது அனைத்து பணிகளை யும் செய்து கொண்டு நாம் மக்களுக்குரிய பிரச்சினைக ளிலிருந்து விலகியிருக்க முடியாது. அதுமட்டுமன்றி நாம் மக்களின் எஜமானர்களாக இருந்து செயற்பட்டது கிடையாது. அவர்களின் பிரச்சினைகளுக்கு உதவும் நண்பனாய் வழிகாட்டியாய் இருந்திருக்கின்றோம். அத்துடன் ஒரு பிரச்சினையை எப்படி அணுக வேண்டும் என்பதிலும் நாம் தெளிவாகவே செயற்பட்டது உண்டு. நான் கம்யூனிசத்தை ஓர் கவர்ச்சிக்காகவோ அல்லது தம்பட்டம் அடிப்பதற்காகவோ ஒரு போதும் ஏற்றுக் கொண்டது கிடையாது. ஏனெனில் கம்யூனிசம் ஓர் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை. அது மக்களை ஏய்க்கும் முட்டாள்களின் மூளைகளுக்கு விளங்கப் போவது கிடையாது. ஏனெனில் எல்.ரி.ரி.ஈ என்பது ரஷ்யாவில் அன்று இருந்த நரோடியத்துக்குச் சமமானது. அது தோற்றும் போய் விட்டது. இந்தப் போராட்டம் தோற்கும் என்பதும் அது தமிழ் மக்களுக்குரிய விடுதலையைத் தராது என்பதும் எப்போதோ தமிழ் மக்களுக்கு எங்க ளது கட்சியால் கூறப்பட்டது தானே. அது மட்டுமன்றி ஏகாதிபத்தியத்தை எதிர்க்காமல் ஒருபோதும் விடு தலையை வெல்ல முடியாத என்பது போராடியவர் களுக்கு ஏன் புரியவில்லை என்பது அதுவரை எனக் குப் புரியவில்லை. அதுமட்டுமன்றி ஏகாதிபத்தியத்தை யும், தமிழர் தேசியத் தன்மையையும் சரியான பார்வை யில் மாக்சிய பார்வையில் விமர்சனம் செய்தது இன்று மெய்ப்படவில்லையா? அதுமட்டுமன்றி இந்தியாவின் வருகை என்பது ஏகாதிபத்திய நோக்கம் என்று கூறியது புதிய-ஜனநாயகக் கட்சி மட்டுமே.

இன்று எமது சக மக்கள் வேதனையிலும் துன்பத் திலும் முகாம்களில் மிதிபட்டுச் சாகின்றார்கள். அன்று தனித் தமிழீழ வட்டுக்கோட்டைப் பிரகடனம் செய்தவர் கள் இந்தியாவிலும், ஐரோப்பாவிலும் இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் இந்தியாவின் அமெரிக்காவின் சொல்லுக்கே ஆடப் போகிறார்கள் என்பதும் வெளிச் சம். அதனால் நாம் மக்களுடன் நெருங்க வேண்டும். மக்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் மக்களு க்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போது தான் நாம் மக்களின் தோழர்கள் என்பதை நிலை நிறுத்து வோம். அது மட்டுமன்றி வெகுஜனப் போராட்டத்திற் குரிய திசைக ளையும் அறிதல் வேண்டும். அதற்குரிய வேலைக ளையும், பணிகளையும் முன்னரை விடவும் அதிகமாக வவுனியா புதிய-ஜனநாயகக் கட்சி கிளை செய்யும் செய்தும் நிற்கும். அதற்குரிய விதை நாட்ட ப்பட்டு அது ஒரு செடியாக முளைத்துள்ளது. அது நிச்சயம் விருட்சமாய் கிளை பரப்பும்.

நான் அடிக்கடி நினைத்துக் கொள்வது ஒன்றுதான் வாழ்ந்தால் இறுதிவரை ஒரு கம்யூனிஸ்ட் தோழராய் வாழ வேண்டும் அல்லது மடிந்து விட வேண்டும். சமரசமாய் போக மட்டும் இறுதிவரை என்னால் முடி யாது. ஏனெனில் எனக்கு உண்மைகள் நிறையவே தெரிகிறது.

அத்துடன் மன உறுதிக்கு முன்பு அடியும், உதையும் கம்யூனிஸ்ட் தோழர்களை ஒன்றும் செய்து விடாது. ஏனெனில் நான் "தூக்குமேடைக் குறிப்பு" படித்திருக்கி ன்றேன். அதில் வரும் பாத்திரத்தில் உள்ள தோழரின் நூறில் ஒரு பங்காவது எனக்கு இருக்காதா? ஆனாலும் என்னை சும்மா சிறையில் வைத்திருக்கிறார்கள் என்பதில் தான் எனக்கு கவலை, வேறொன்றும் கவலை கிடையாது.

என்றும் இனிய அன்புடனும் தோழமையுடனும் எனது இச் சிறிய மடலை நிறைவு செய்கின்றேன்.

தோழமையுடன்
பிரதீபன்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 16யூலை - ஆகஸ்டு 2009 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 124
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org

# மக்கள் போராட்டம் 'அழிச்சாட்டமாக' இராது

## (Peoples Struggle would not be Foul Game)

கழுத்தில் துண்டு (சால்வை) போர்ட்டிருக்கும் ஒரு ஆசிரியர் தாடி வைத்திருக்கும் மாணவனைப் பார்த்து 'விமல் 12வது எண்ணுக்கு அடுத்த எண் என்ன?' என்று கேட்கிறார். அதற்கு அம் மாணவன் 14 என்கிறார். அந்தளவுக்கு அம் மாணவனுக்கு 13ஐ பிடிக்கவில்லை. இது கேலிச் சித்திரமாக சிங்கள நாழிதழ் ஒன்றில் வெளியாகி இருந்தது. கேள்வி கேட்டவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பதிலளித்தவர் ஜே.வி.பியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரும் தேசிய சதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச. ஜனாதிபதியுடன் நெருக்கமான விமல்வீரவன்ச 13வது திருத்தச் சட்டத்திற்கு காட்டும் எதிர்ப்பையே அக் கேலிச் சித்திரம் எடுத்துக் காட்டுகிறது.

இன்னொரு கேலிச் சித்திரத்தில் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் லால் காந்த யுத்தத்தை நடத்தி முடித்து வைக்கும் வரை அரசாங்கம் சரியாகவே நடந்தது. அதற்கு பின்னர் அதாவது யுத்தத்திற்குப் பின்னர் எந்த நடவடிக்கையையும் சரியாக முன்னெடுக்கவில்லை என்று கூறுகிறார். அதற்கு மக்களில் ஒருவர் "அரசாங்கத்தை யுத்தத்திற்கு தள்ளியது போன்று யுத்தத்திற்கு பின்னரான நடவடிக்கைகளுக்காகவும் அரசாங்கத்தை தள்ளுவது தானே'' என்கிறார்.

முன்னாள் ஜே.வி.பி.தலைவர்களும் சரி, தற்போதைய ஜே.வி.பி தலைவர்களும் சரி அரசாங்கம் 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி விடுமோ என்ற அச்சத்தில் இருக்கிறார்கள் என்பதையே மேற்படி கேலிச்சித்திரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஜே.வி.பியின் இறந்த காலத் தலைவர்களும், நிகழ்காலத் தலைவர்களும் 13வது திருத்தத்தை கடுமையாக எதிர்ப்பதுடன், எந்த விதமான அதிகாரப் பகிர்விற்கும் இடமளிக்கப் போவதில்லை என்றும் கூறிவருகின்றனர்.

இதைவிட ஜே.வி.பியின் தலைவர் அண்மையில் பகிரங்க கூட்டமொன்றில் பேசும் போது "1976ம் ஆண்டு சிறையில் இருக்கும் போதே பிரிவினைவாதத்தை எச்சரித்து அதன் ஸ்தாபக தலைவர் ரோஹன விஜேவீர நூலொன்றை எழுதியதாகவும் ஜே.வி.பி என்ற ஒரு கட்சியில்லாவிட்டால் இவ்வேளை நாடு பிரிந்திருக்கும். இலங்கை பிரிவதை ஜே.வி.பியே தடுத்து நிறுத்தியது. 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை எதிர்த்தும், இந்திய இராணுவம் இங்கு வந்ததை எதிர்த்தும் ஜே.வி.பி ஆயுதப் போராட்டத்தை நடத்தியுள்ளது'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவர் மதிக்கும் இரண்டு பிரமுகர்களின் பெயரைக் குறிப்பிட்டு அதற்கான காரணங்களையும் தெரிவித்துள்ளார். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிவினைவாதத்திற்கு எதிராகச் சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தை மாற்றியதற்காக அவரைப் பிடிக்குமாம். வடக்கையும் கிழக்கையும் பிரித்து தீர்ப்பளித்தமைக்காகவும்' சந்திரிகா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டினால் உருவாக்கப்பட்ட சுனாமிக் கட்டமைப்பை செல்லுபடியற்றதென தீர்ப்பளித்ததற்காகவும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை பிடிக்குமாம்.

அதிகாரப் பகிர்விற்கு எதிரானவர்கள் ஜே.வி.பியின் மதிப்பிற்குரியவர்களாகவும் நண்பர்களாகவும் இருக்கின்றனர். அவ்வாறெனின் ஹெல உறுமய அதன் நட்பிற்குரிய அமைப்பாகும். இவர்களுடன் கூட்டமைத்துள்ள மஹிந்த ராஜபக்ச எப்படி நண்பனாகினார்?

"இலங்கையில் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை அதனை அனுமதிக்க மாட்டேன். அதிகாரங்களை எந்தவொரு இனத்திற்கும் பரவலாக்க வேண்டிய தேவையும் இல்லை''என்று ஜனாதிபதி சொல்வதால் ஜே.வி.பியின் நண்பனாகும் தகுதியை கொண்டிருக்கிறார். இருந்த போதிலும் 13வது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதி அமுல்படுத்தி விடுவாரோ என்ற அச்சம் ஜே.வி.பிக்கு இருக்கிறது. இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பாகமாகிவிட்ட மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைக் கையளிக்கும் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தவிர்க்க முடியாததாகும். அரசியலமைப்பில் உட்கிடையாக இங்கு பல சமூகங்கள் வாழ்கின்றன என்பதை அங்கீகரிக்கிறது. தேசிய மொழிகளான சிங்களமும் தமிழும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவை 13வது திருத்தச் சட்டத்திலேயே அரசகரும மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவை போதாதென்றே போராட்டங்கள் நடந்தன.

தேசிய இனங்களிடையே ஐக்கியம் நிலை நிறுத்தப்பட வேண்டுமென்றால் ஒரு இனம் இன்னொரு இனத்தின் மீது மேலாதிக்கம் செலுத்தாத வகையில் அவற்றிடையே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. அதனடிப்படையிலான கோரிக்கைகள் தமிழ் மக்கள் தரப்பில் முன் வைக்கப்பட்ட போதும் அவை உதாசீனம் செய்யப்பட்டு அதற்கான போராட்டங்கள் ஒடுக்கப்பட்ட நிலையிலேயே தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தமிழ் மக்கள் மீது பொலிஸ், இராணுவ அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டதால் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுத நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டதனால் ஆயுதப்போராட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு காரணமான தேசிய இனப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதற்கு தீர்வு அதிகாரங்களையாவது பகிர்ந்தளிப்பதாகவே இருக்க முடியும். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை மறுத்து 1950களிலிருந்து கூறிய அதே பதிலையே ஏறக்குறைய எல்லா பேரினவாத தலைவர்களும் கூறிவந்தனர். ஆனால் ஜே.ஆர் ஜயவர்த்தனவால் அதே பதிலை கூறமுடியவில்லை. 13வது திருத்தச் சட்டத்தை சட்டமாக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. 2000ஆம் ஆண்டு இன்னும் சில மைல் தூரம் போக வேண்டிய நிர்ப்பந்தம் சந்திரிகாவிற்கு ஏற்பட்டது. அது ஐக்கிய தேசியக் கட்சியின் துரோகத்தனத்தால் நிறைவேற்ற முடியாது போனது. அதே ஐக்கிய தேசியக் கட்சி 2002இல் சமஷ்டி முறையான தீர்வை நோக்கி செல்வதென எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

தற்போது மஹிந்த ராஜபக்சவின் மனதில் இருக்கும் தீர்வை அவரிடம் சில கேள்விகள் கேட்டு அறியத் தேவை உண்டு. அவர் 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் திடசங்கற்பத்தை அறிவிப்பதாகவும் இல்லை. அதற்கு அப்பால் செல்வது பற்றி சிந்திப்பதாகவும் இல்லை என்பதை தெரிவதற்கு பெரிய மதிநுட்பம் தேவை இல்லை. ஐக்கிய தேசிய கட்சியும் தற்போது அதனது சமஷ்டி தீர்விற்கான இணக்கத்தை கைவிட்டு ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வையே வலியுறுத்துவதாக புதிய கொள்கைப் பிரகடனம் செய்துள்ளது. அரசாங்கம், எதிர்க்கட்சி எல்லாமே ஒரே வரிசையில் நின்று நியாயமான அதிகாரப் பகிர்வையும் தீர்வையும் எதிர்க்கின்றன. அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளை ஆதரித்தது போன்று அரசாங்கத்தின் அரசியல் தீர்வு நிலைப்பாட்டை எதிர்க்கட்சி ஆதரிக்கிறது. ஆனால் அரசாங்கத்தினை நேரடியாகவும், மறைமுக மாகவும் ஆதரிக்கும் கட்சிகள் வேறுபல கதைத்து திரிகின்றன.

யுத்தம் நடைபெறுகின்ற போது ஒரு உதைபந்தாட்டப் போட்டியை விசில் ஊதி முடிவிற்கு கொண்டு வருவது போன்று யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வர முடியாதுஇ என்று யாரோ சொன்னதாக ஞாபகம். அதேபோன்று அரசியல் போராட்டங்களை – அரசியல் போராட்டங்களில் ஈடுபடும் மக்களை எல்லா வேளைகளிலும் (Foul Game) நடைபெற்றதாக கூறி உதைபந்தாட்ட வீரர்களை மைதானத்திலிருந்து வெளியேற்றுவது போன்று அரசியல் தளத்திலிருந்து தொடர்ந்து வெளியேற்றிக் கொண்டிருக்க முடியாது. மக்கள் பங்கெடுக்கும் போட்டியில் 'அழிச்சாட்டத்தை' காரணம் காட்ட முடியாத நிலை ஏற்படும். ஏனெனில் அது அழிச்சாட்டமாக இராது. ஆக, அரசியல் விருப்பமும், திடசங்கற்பமும் கொண்டு அடக்கப்படும் தேசிய இனங்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

**ஆசிரியர் குழு**

# வடக்கின் தேர்தலும் கட்சிகளின் நிலையும்

**வெகுஜனன்**

வடக்கே வவுனியா நகர சபைக்கும் யாழ்ப்பாண மாநகர சபைக்கும் தேர்தல் இடம்பெற இருக்கிறது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8ம் திகதி நடைபெற உள்ள இத்தேர்தலில் தமிழ்த் தேசியவாத நிலைப்பாடுடைய கட்சிகள் தமக்குள் பிரிந்து கூட்டணி அமைத்துப் போட்டியிடுகின்றன. ஒன்று தமிழர் கூட்டமைப்பில் நின்று வீடு சின்னத்தில் (இது தமிழரசுக் கட்சியின் சின்னம்) மற்றையது தமிழர் விடுதலைக் கூட்டணி உதயசூரியன் சின்னத்திலும் (இது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னம்) போட்டியிடுகின்றன, மற்றொரு தமிழ்த்தேசியவாதக் கட்சியான ஈ.பி.டி.பி அரசாங்கப் பேரினவாதக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகிறது. அடுத்து மற்றொரு பேரினவாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டி யிடுகிறது. சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. யுத்தம் முடிந்த சூட்டோடு சூடாக மேற்படி தேர்தலை அரசாங்கம் அவசர அவசரமாகத் தமிழ் மக்கள் மீது திணித்து நிற்கிறது. அதில் தமிழ்க் கட்சிகள் என்பன பங்கு கொள்கின்றன.

இவ் அவசரத்திற்குள் அடங்கியிருக்கும் உள்நோக்கம் தெளிவானதாகும். வெளி உலகிற்கு வடக்கே ஜனநாயகப் பயணம் ஆரம்பித்து விட்டது என்பதைக் காட்டுதல் வேண்டும். அடுத்து வடக்கே பேரினவாத உள்கிடக்கைகளுடன் முன்னெடுக்கவுள்ள திட்டங்களுக்கு ஒரு பரீட்சார்த்த மருந்தைக் கொடுத்துப் பார்ப்பதாகும். அதாவது. கிழக்கின் உதயத்திற்கு எவ்வாறு மட்டக்களப்பு மாநகரசபை, மாகாணசபை வெற்றிலைச் சின்னத்தின் ஊடாக உதவி வருகிறதோ அவ்வாறே வடக்கிலும் செய்ய அரசாங்கம் முனைந்து நிற்கிறது. அதாவது ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் தெற்கில் இருந்து வடக்கு வரை அரசாங்கத்தின் கொடி ஆட்சிக் கொடியாகப் பறப்பதைக் காணவே மகிந்த சிந்தனை அரசாங்கம் விரும்புகிறது. அதற்காக அரசாங்க வளங்கள் யாவற்றையும் பயன்படுத்தி தேவையான போது மிரட்டல்களும் விடுத்தே தேர்தல் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. சலுகைகள் வாக்குறுதிகள் வழங்கப்பட்டு மக்கள் அவல நிலைகளின் கீழ் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். எல்லாம் "வல்லான் வகுத்த வழியாகவே'' நடாத்தப்படுகின்றன.

இவ்வாறான சூழலில் தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் என்னதான் இடம்பெற்றாலும் நாங்கள் தான் உங்களை ஆளத் தகுதியுடைய ஆண்ட தேர்தல் பரம்பரையினர் என வரிந்து கட்டிக் கொண்டு தேர்தல் களத்தில் நிற்கின்றனர். இவர்களிடம் மக்களின் நிலை பற்றிய எத்தகைய கவலைகளையோ அன்றி துயரங்களையோ காண முடியவில்லை. கடந்த முப்பது வருடத் தொடர் அழிவுகளிலும் அதன் உச்சமான இன்றைய மனிதப் பேரவலங்களிலும் தமக்குள்ள பங்கையும் பாத்திரத்தையும் பற்றிய எத்தகைய குற்ற உணர்வும் இன்றியே இத் தேர்தலில் பங்கு கொள்கின்றனர். எத்தனை ஆயிரம் தமிழர்கள் இறந்து தொலைந்தாலும் எத்தனை லட்சம் மக்கள் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் அடைத்து வைக்கப்பட்டாலும் இத் தமிழ்த் தேசியவாதத் தலைமைகளுக்கு அது பற்றிய ஆதங்கமோ அக்கறையோ ஏற்படமாட்டாது. ஏனெனில் அவர்களது மேட்டுக்குடி வாழ்வும் வளமும் பாராளுமன்றச் சுகமும் என்றும் தமக்குரியதாக இருப்பதையே முன்னிறுத்தி வந்துள்ளனர். அவர்களது அரசியல் தமிழ் மக்களை ஏமாற்றி மேய்க்கும் குறுந் தேசியவாத அரசியலே அன்றி மக்களது பிரச்சினைகளுக்கான அரசியல் அல்ல. அன்று தமிழ்க் காங்கிரஸ் தமிழரசு, பின் தமிழர் விடுதலைக் கூட்டணி, அதன்பின் விடுதலை இயக்கங்கள் அவற்றுள் உச்சம் பெற்ற புலிகள் இயக்கம் என வந்த சகல தமிழ்த் தேசியவாத இயக்கங்களும் ஒரே அரசியல் குட்டையில் ஊறிய மட்டைகளாகவே உள்ளனர். இவர்களில் ஒரு கட்சியோ இயக்கமோ கூடத் தம்மை மறு மதிப்பீட்டிற்கு உள்ளாக்கியது கிடையாது. சுய விமர்சனம் செய்யத் தயாராக இல்லை. புதிய அரசியல் பாதையைத் தேர்ந்தெடுக்கத் தயாராகவும் இல்லை. பழையனவற்றைக் கொதிப்பித்து வெறும் அனுதாப வசனங்களாலும் மக்கள் படும் அவலங்களுக்கு வெறும் கண்ணீர் வடித்தும் வாக்குப் பெற்று பதவி பெறவே முற்பட்டுள்ளனர். இவர்களின் முழுக் கவனமும் பதவிகள் பெறுவதிலேயே இருந்து வருகிறது. இப்பதவிகளை பரந்து பட்ட தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்கள் மற்றும் உழைக்கும் மக்களுக்காகப் பயன்படுத்தியது கிடையாது. எல்லாம் தமிழன், தமிழ் மொழி, தமிழ் இனம் என்ற இன உணர்வுக்குள் மக்களை வைத்து ஏமாற்றுவதே தமிழ் தேசியவாதத் அரசியலாகக் கொண்டுள்ளனர்.

உண்மையில் தமிழ் மக்கள் மீது நேர்மையான அரசியல் அக்கறை கொண்டவர்களாக இருப்பின் சகல தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் இயக்கங்களும் ஒன்றிணைந்து இத் தேர்தலைப் புறக்கணித்து ஒட்டுமொத்த எதிர்ப்பைக் காட்டியிருந்தால் ஒரு எதிர் அதிர்வு ஏற்பட்டிருக்கும். உள்நாட்டில் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளவும் வெளிநாடுகளில் தமிழர் உரிமைகளைப் பற்றிய கவனம் ஏற்படவும் ஒரு சூழல் தோன்றியிருக்கும். சரியான தீர்மானத்தால் பழைய பாவங்களைக் கழுவி இருக்கவும் முடிந்திருக்கும். ஆனால் அதனைச் செய்வதற்கு இப் பிற்போக்குப் பழைமைவாத வழிவந்த தமிழர் தலைமைகளுக்கு மனம் வரவில்லை. அதற்கான அரசியல் துணிவும் கிடையாது. நாம் தேர்தலில் நிற்காது விட்டால் மாற்றுத் துரோகக் கட்சிகள் பதவிக்கு வந்து விடுவார்கள் என்பது அவர்களது வாதமாகும். இது பாராளுமன்ற விளையாட்டில் தொடரும் தியாகி துரோகி ஆட்டமே யாகும். இப்போது தமிழர் மத்தியில் யாரும் தியாகிகள் கிடையாது. எல்லாத் தமிழ்த் தேசியவாத தலைமைளும் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்தவர்களே. ஜககளில் கறை படிந்தவர்களே. இதனைத் தமிழ் மக்கள் உணராமல் இல்லை. இருப்பினும் அரசியல் விழிப்புணர்வின் மூலம் உணர்ந்து கொள்வதே அவசியமானதாகும்.

தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் என்றும் பதவிகள் பெறுவதில் தேர்தல்களில் வரிந்து கட்டி முன் நிற்பார்கள். அதற்காக மக்கள் மத்தியிலான பிரிவுகள் முரண்பாடுகள் யாவற்றையும் தத்தமது வெற்றிக்குப் பயன்படுத்துவர். வர்க்கம், சாதி, பெண் ஒடுக்குமுறை யாவற்றையும் மறைத்து இன உணர்வாக தமிழ் மொழி, தமிழன் என்றவாறு முழங்குவார்கள். அதற்குரிய மெத்தப் படித்தவர்களையும் பரம்பரை மேய்ப்பர்களையும் தேடி எடுத்து இவர்கள் தான் தமிழர்களை மீட்க வந்த தலைவர்கள் என்பார்கள். அடிப்படையில் ஆதிக்க அரசியல் தலைமையை தமிழ் மக்கள் மீது திணித்துக் கொள்வார்கள். மக்களிடமும் மாற்று அரசியல் சிந்தனை முறை இல்லாத வறுமை நிலை தான். அவர்களிடம் பழைமைவாதத்தின் தொடர்ச்சியும் மதம் பண்பாடு மீதான ஒருவகைக் குருட்டு நம்பிக்கையும் நீடிப்பதானது இத் தமிழ் தேசியவாதத் தலைமைகளுக்கு வசதியாகியுள்ளது. ஆதலால் தமிழ் இன உணர்வின் பெயரால் ஏமாற்றும் தமிழ்த் தேசியவாதத் தலைமையை மட்டும் கண்டித்துப் பயன் இல்லை. மீண்டும் மீண்டும் புதிய புதிய பெயர்களில் வரும் அரசியல் தலைவர்கள் எனப்படும் பாராளுமன்ற வாதிகளால் ஏமாறும் மக்களும் தமது நிலையைச் சிந்தித்து செயற்பட முன்வரல் வேண்டும். அதற்கான புதிய அரசியல் விழிப்புணர்வு தமிழ் மக்கள் மததியில் எற்பட வேண்டும். அதற்குரிய கேள்விகளை தமிழ் மக்கள் எழுப்ப வேண்டும். உரிய விளக்கங்கள் கோர வேண்டும். கேள்வி கேட்டு நியாயம் கோராத எந்த சமூகமும் முன் செல்ல முடியாது. அதற்கு யார் எவர் என்று பார்க்கக் கூடாது. ஆதலினால் தான் நாம் கோருகின்றோம் தமிழ்த் தேசியவாதத் தலைமை எதுவாக இருந்தாலும் அதனிடம் நியாயமான கேள்விகளையும் நியாயங்களையும் மக்கள் கேட்க வேண்டும். அதன் மூலம் புதிய அரசியல் பாதையில் பயணிக்க முற்பட வேண்டும்.

இத் தேர்தலில் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் மட்டுமன்றி ஆளும் அரசாங்கத் தரப்பும் அதனோடு இணைந்து நிற்பவர்களும் சரி அல்லது மற்றொரு பேரினவாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் எந்த முகத்தோடு மக்கள் முன்சென்று வாக்குக் கேட்க முடியும். கடந்தகாலத்தில் அடிஅடியென அடித்தவர்களான இவர்கள் செய்தவற்றையும் அழித்தவற்றையும் இன்றும் மக்களைக் கொடுமைப்படுத்தல் செய்பவற்றையும் மக்கள் மறந்துவிடவில்லை. ஆனால் அதிகாரம் பணபலம் அரசியல் ஆதிக்கம் என்பவற்றை வைத்துக் கொண்டு மக்களை நிர்ப்பந்தித்து வருகின்றனர். அல்லது மறைமுகமாகவும் நேரடியாகவும் மிரட்டி வருகின்றனர். இதற்கு மறுபெயர் தான் ஜனநாயகம்.

யுத்தத்திற்குப் பின்னான அரசின் நடவடிக்கைகளையும் தீட்டப்படும் திட்டங்களையும் நோக்குமிடத்து தமிழ்த் தேசிய இனத்தின் மீதான நோக்கிலும் போக்கிலும் பேரினவாதப் பிடி மேலும் இறுக்கப்படுவதற்கான உள்நோக்கங்களே காணப்படுகின்றன. அதற்கான ஒரு முன்னோட்ட நடவடிக்கையாகவே வடக்கின் வவுனியா- யாழ் மாநகர சபைத் தேர்தல்கள் நடாத்தப்படுகின்றன. இவற்றில் மக்கள் எத்தகைய பிரதிபலிப்பை வெளிக்காட்டப் போகிறார்கள் என்பதைப் பார்க்கச் சிலர் காத்திருக்கின்றனர். ஆனால் அவ்வாறான ஒரு கணிப்பை நியாயமானதொன்றாக எதிர்பார்க்க முடியுமா என்பது கேள்விக்குரியதேயாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டத் தொழிலாளர்களுக்கு மலங்கழிக்கும் உரிமையும் இல்லையா?

பெருந்தோட்ட சமூக அராசங்கத்திற்கு வாக்களிக்காவிட்டால் தோட்டப் பகுதிகளில் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா ஊவா மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

"பதுளை மாவட்ட தோட்டப் பகுதியில் 1500 மலசல கூடங்களை அமைத்துக் கொடுப்பதற்காக ஒப்பந்தகாரர்களுக்குக் காசோலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அரசாங்கத்திற்கு அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிக்காவிட்டால் அக் காசோலைகள் மீளப் பெறப்படுவதுடன், அம் மலசலகூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட மாட்டாது" என்று கூறியுள்ளார்.

இது தேர்தல் வாக்குறுதியல்ல. மிரட்டல். இவ்வாறான மிரட்டல்கள் தேர்தல் சட்டங்களுக்கு முரணானது ஆகும். தேர்தல் சட்டங்களை மதித்து தான் தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுப்பதில்லையே. அதனால் நிமால் சிறிபால டீ சில்வாவின் அப் பேச்சு தேர்தல் சட்டங்களுக்கு முரணானவை என்று விவாதிப்பதில் நேரத்தில் செலவிடத்தேவை இல்லை எனலாம்.

ஒரு பிரஜையின் சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு போன்றனவற்றை அரசாங்கம் உறுதி செய்தே ஆக வேண்டும். இதற்கும் ஒரு பிரஜை தேர்தலில் யாருக்கு வாக்களிக்கிறார் என்பதற்கு எவ்வித சம்பந்தமும் இருக்க முடியாது.

தோட்டப் புறங்களில் நீர்ப்பாசன, மலசலகூட, வீட்டு வசதிகள் இன்னும் இல்லை. அரசாங்கம் மலசல கூடங்களைக் கட்டிக் கொடுக்கா விட்டாலும் தொழிலாளர்கள் அவர்களாகவே மலசல கூடங்களைக் கட்டிக் கொள்வதற்குக் கூட உரிமை இல்லை. அப்படிக் கட்டினால் கட்டிய தொழிலாளியின் வேலை பறிபோகும் என்பதுடன் அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது தோட்டப் புறங்களில் இருக்கும் பொதுவான நடைமுறை.

ஒரு தேசிய இனமான மலையக் தமிழ் மக்களின் முக்கிய பாரிய பிரிவினரான தோட்டத் தொழிலாளர்களின் வீடு, காணி, மொழி போன்ற உரிமைகள் பற்றிய கோரிக்கைகள் மேலோங்கி இருக்கும் போது அரசாங்கத்திற்கு வாக்களிக்கா விட்டால் மலசல கூடங்களைக் கட்டித் தர முடியாது என்று அர்சாங்கத்தின் அமைச்சர் ஒருவர் கூறுவது மலையக் தமிழ் மக்களை மலையக சமூகத்தை அவமதிப்பதாகும்.

மறுபுறத்தில் அப் பேச்சானது மலையகத் தமிழ் மக்களுக்கு மலசல கூடங்களைக் கூட அமைத்துக் கொடுக்க அரசாங்கம் தயாரில்லை என்பதும் மலங்கழிக்கும் இயற்கை தேவையை மறுத்து வாக்கு சுதந்திரத்தைப் பறிக்கும் அல்லது அரசாங்கத்தின் மேலாதிக்கப் போக்கையே வெளிப்படுத்துகிறது.

இப்பேச்சு பற்றி ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் மலையக புதிய தலைவர்கள், பழைய தலைவர்கள் போன்ற எல்லோருமே அலட்டிக் கொள்வதாக இல்லை. ஏனெனில் அவர்களும் மலசல கூடம் அமைத்துக் கொடுத்துத்தானே வாக்கு கேட்கிறார்கள்.

## சுதந்திரம்

சுதந்திரம் சுதந்திரம்
இலங்கைத் திருநாட்டுக்கு இன்னுமொரு சுதந்திரம்
அள்ளி அளித்திருக்கிறார் ஆளும் வர்க்கத்தார்.

நாட்டை உயர்த்திட உழைத்திடும்
பல்லினத்துப் பாட்டாளியும் விவசாயியும்
நடுத் தெருவில் அடிமைகளாய்த் திண்டாட
ஆளும் வர்க்கத்து எஜமானர்
அள்ளிக் கொடுக்கின்றார் சுதந்திரத்தை.

உழைக்கும் மக்களை ஒன்றுபட விடாது
ஆளும் வர்க்கத்துப் பிசாசுகள்
அள்ளித் தெளிக்கும் சுதந்திரம்! சுதந்திரமா?
ஆளும் வர்க்க ஆசாமியே
ஓர் வாசகத்தை மட்டும் நினைவில் கொள்.

நீ
எங்களைத் தினமும் கூர்மைப்படுத்துகின்றாய்
எங்கள் வறுமை கூடக் கூட
ஆயிரமாய் லட்சமாய் ஐக்கியப்படுவோம்.

ஏனெனில்
இழப்பதற்கு எதுவுமே இல்லாத
ஸ்பாட்டகஸ்சின் வழித் தோன்றல்களாய்
இப்போதும் நாம் இருப்பது தான்.
அப்போது
செவ்வொளி வீசிய புதிய பரிதியாய்
பூகோளம் நிலைமாறும்
உழைப்பவனுக்கே உலகென்பது மெய்ப்படும்.

அதுவரை
வெடி கொழுத்து கொடி பிடி
ஆடு பாடு கொண்டாடு!

-நி. பிரதீபன் -
20-05-2009

# அன்புள்ள தோழருக்கு

## தோழமையுடன் செண்பகன் எழுதும் மடல்

**மக்கள், மக்கள்,** மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்திகளாவர் என்று கடந்த கடிதத்தில் நிறைவு செய்தேன். அந்த மக்கள் யார். எங்குள்ளார்கள். எப்படியுள்ளார்கள். எங்கு புதையுண்டார்கள்.

பகலில் நாம் மனிதர்களை எந்த வெளிச்சத்தின் உதவியுடன் தேடலாம். மனிதர்கள் போல் உடலுறுப்புக்களுடன் உலவும் சகலரும் மனிதர்களா? முதலில் நாம் மனிதர்களை அடையாளம் காணப் பழக வேண்டும். பயிற்சி பெற வேண்டும்.

வள்ளுவர் முதல் மாஓசேதுங் வரை மக்கள் யார் என்பதைக் கண்டறிந்து சொல்லியுள்ளனர். மரம் போல்வர், கயவர் என்போர் மக்களல்ல.

உயர்குடிப் பிறந்து உயர்வர்க்க மனப்பாங்குடன் எல்லோரையும் விடத் தான் உயர்ந்தவன் என்ற மமதையுடன் அரசர்கால மன்னர், பிரபுக்களுடன் தன்னை ஒப்பிட்டு, உலகப் பணக்காரர்களையும் ஆடம்பரப் போகிகளையும் உதாரண புருஷர்களாகக் கணக்கிட்டு பணத்தையே அளவு கோலாக்கி அதனையே மூலதனமாக்கி முழுமையின்பம் பெறும் கோடீஸ்வர மனப்பாங்குடையோர் மக்கள் அல்ல. அவர்களே மரம் போலும் கயவர். ரோமன் காலத்து எசமானர்களாக அவர்கள் தம்மைத் தாமே ஆக்கிக் கொள்வர். மற்றையோரை அடிமைகளாகக் கருதி அவர்களைத் தம்மைப் போல மனிதர்கள் என்று மதிப்பிடார். ஆண்டான்-அடிமை மனப்பாங்கில் புளகாங்கிதமடைவர். தமிழ்ச் சினிமா நட்சத்திர நாயகர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்வர். மக்களுக்கு உதவுவது என்பது கூட அவர்களின் அந்தஸ்தையும் அகங்காரத்தையும் விளம்பரப்படுத்தி அரியாசனம் அமரும் பேராசையின் வெளிப்பாடேயாகும்.

அண்மையில் வன்னிப் பிரதேசத்தில் பேரினவாதப் படுகொலையில் பலியாகிப் போன பல்லாயிரக் கணக்கான மக்கள் இத்தகையவர்களுக்கெல்லாம் ஒரு பொருட்டேயல்ல. ஊர் பெயர் தெரியாது புதையுண்டு போன தமிழ் மக்கள், தமிழ் உயர்வர்க்க மனப்பாங்கில் ஐ.நா கடவுளின் அருளுக்காக வேள்விக்கு நேர்ந்து விடப்பட்ட மனிதர்களின் புள்ளி விபரக் கோவையின் ஒரு பகுதியாகினர்.

மஹிந்த என்ற மாமன்னனின் தோற்றத்துக்காக சிங்கள இராணுவ வீரர்கள் பலியிடப்பட்டதும் எஞ்சிய தமிழ் மக்கள் அடிமைகளாக முட்கம்பி வேலிகளின் உள் முடக்கப்பட்டதும் ஆண்டான் அடிமைச் சமுதாயச் சிந்தனையின் வெளிப்பாடுகளே. கொல்லப்பட்ட இராணுவ வீரர்களும் கொல்லப்பட்டுப் புதையுண்ட தமிழ் மக்களும் இவர்களின் அகராதியில் அடிமைகளே. அவர்கள் மக்கள் என்ற மகுடத்தில் பேசற்குரியவரல்ல. எண்ணிக்கையின் குறியீடுகளே. இங்கேதான் தமிழ்-சிங்கள ஆளும் வர்க்கத்தின் கூட்டுச் சதியும் வர்க்கச் சமரசமும் மக்கள் விரோத நிலைப்பாடும் வெட்ட வெளிச்சமாகின்றன.

தனிமனிதனுக்குணவில்லையெனில் ஜகத்தனை அழித்திடுவோம்' என்று பாரதி சொன்ன சனநாயகத்தின் அளவுகோல் தனிமனிதன் என்ற இலக்கணத்தை இன்னும் எமது நாடும், உயர்வர்க்கமும் உணர்ந்து கொள்ளவில்லை.

போலிப் புனைவுகள் உண்மையாகத் திரிக்கப்பட்டுள்ளன. உண்மைகள் போலிகளாக்கப் பட்டுள்ளன. இலட்சக்கணக்கான மனிதர்கள் அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். நூற்றுக் கணக்கான பகற் கொள்ளைக்காரர்கள் ஜனநாயகம் என்ற பேரில் உள்ளூர் சபைகள் முதல் பாராளுமன்றம் வரை பதவிகளில் அமர்ந்து உயர்வர்க்க நலன் காக்கும் கடவுள்களாக உருமாற்றப்பட்டுள்ளனர்.

ஜனநாயகம் என்பது கொலனியம் காட்டிய பட்டம், பதவி, ஆசனம் என்பனவும் அவற்றின் ஊது குழல்களான அச்சு, இலத்திரனியல் ஊடகங்களுமாகியுள்ளன. ஏமாற்று, வஞ்சகம், மோசடி, சண்டித்தனம், பிச்சையிடுதல் என்பன ஜனநாயகமாக உருமாறியுள்ளன.

மண்ணில் உழைப்போர், உழைத்து உழைத்து கடனாளிகளாக மாறியோர், வாழ்வின் அன்றாடத் தேவைகளைக் கூட ஈடுசெய்ய இயலாது திண்டாடுவோர், ஏமாற்றப்பட்டு பொய்களுக்குப் பலியாகிப் போலித் தனமின்றி மாய்வோரே மக்களாவர். வேற்றார் உதவியின்றி, சொந்த உழைப்பில் தன்னைத் தான் நம்பி வாழ்வோரே மக்களாவர். மற்றவர் உழைப்பை மதித்து தன்னில் நம்பிக்கை வைத்து வாழ்வோரே மக்களாவர். எனினும் அவர்கள் கொத்தடிமைகளாக, முதலாளியின் மூலதனத்தின் கூலிகளாகச் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் கிராமங்களிலேயே முக்கால்வாசி மக்கள் வறுமையில் உழல்கின்றனர். மேல்மாகாணத்தில் மட்டும் இலங்கையின் மக்களில் நாலில் ஒரு பங்கு மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் பலர் அரச, தனியார் நிறுவனங்களில் தொழில் புரிந்து 'உத்தியோகஸ்தர்'கள் என்ற மயக்கத்தில் 'தொழிலாளர்' என்ற உணர்வை இழந்துள்ளனர். கொலனிய நகர மயமாக்கலில் தங்களைப் பலியிட்டுள்ளனர்.

நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்தோர் வளர்ச்சி பெற்ற மேற்குலகில், ஐரோப்பிய கண்டங்களில் வாழ்வோர் தம்மைத் 'தொழிலாளர்களாக' கருதுவதற்குப் பதிலாகத் தங்களைக் கறுத்த தோலுடைய உயர் மக்களாக 'வெள்ளையர்' என்ற போலி மனப்பாங்குடன் வாழ முயற்சிப்பதை வெளிநாட்டுத் தமிழ் வணிகர்களின் விளம்பரத்தில் நடைபெறும் தமிழ் வானொலியின் உரையாடல்கள் வெளிப்படுத்துகின்றன. உயர்குடித் தமிழர்களுக்கெல்லாம் தமிழ் ஈழம் அமைக்கும் வணிக மனப்பாங்கில் வெளிநாட்டுத் தமிழ் மக்களில் பலர் தாங்கள் உழைப்பாளர்கள் என்ற உண்மையை மறந்து உலகமயமாதலின் நிகழ்ச்சிநிரலின் கீழ் அடிமைகளாக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் என்போர் நுகர்வியத்தின் நுகத்தடி அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். கிராமங்கள், நகரங்கள் முதல் புலம்பெயர் மேற்குலகம் வரை தமிழ் மக்கள் தாம் தொழிலாளர், உழைப்பாளர் என்ற உண்மைகள் மழுங்கடிக்கப்பட்டு மறைக்கப்பட்டு மறுக்கப்பட்டுள்ளனர். தன்னை மறந்து தன் நாமம் கெட்டுத் தறி கெட்டுள்ளனர். மக்களை மக்களாக ஆட்கொள்ள வேண்டிய தேவை தொழிலாளி வர்க்கத்தின் முன்னேறிய ஆக்கச் சக்திகளாகிய பாட்டாளி வர்க்க இயக்கங்களில் பணிபுரியும் தோழர்களைச் சார்ந்தது.

மக்கள் மத்தியிலான சிநேக முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாக விதேசிய பின்நவீனத்துவ சிந்தனைகளின் மூலம் விதைக்கப்படுகின்றன. ஆண், பெண் முரண்பாடு, கணவன், மனைவி முரண்பாடு, உறவினர் முரண்பாடு, அயவலர் முரண்பாடு, பிரதேச முரண்பாடு, இன முரண்பாடு, சாதி முரண்பாடு, கறுப்பு, வெள்ளை நிற முரண்பாடு, உயரம், கட்டை முரண்பாடு என மக்கள் மத்தியில் உள்ள ஆளுக்காள் உள்ள வேறுபாடுகள் அனைத்தையும் முரண்பாடுகளாக்கி அவற்றுக்கிடையே பாகுபாடு, பாரபட்சம், புறக்கணிப்பு, ஒடுக்கல் என மோதலுக்கு வழிவகுக்கப்படுகின்றன. குடும்ப வன்முறை குவலய வன்முறைக்கு வழி வகுக்கிறது. குடும்ப உறவுகள் சீரழிக்கின்றன. ஆண்டான் - அடிமைச் சமுதாய விழுமியங்கள் இன்றும் மக்களால் விழுங்கப்பட்டு விசுவாசிக்கப்படுகின்றன. மக்கள் தம்மிடையிலான உரையாடல்களில் கூட மற்றையோரின் உடல், உளச் சிக்கல்களைத் தமது மூலதனக் கொடுப்பனவாக்கி அடுத்தவரிடமிருந்து ஏனையோரின் பிரச்சினைகளைக் கொள்வனவு செய்து குதூகலிக்கின்றனர். விடுப்புகள் வியாபார மூலதனமாகின்றன. இவ்வாறாக மக்கள் மத்தியிலான உறவுகள் மோசமடைந்துள்ளன.

வரலாற்றுப் பொருள் முதல்வாத வளர்ச்சியில் மானுட சமூகம் அடிமைகளாக, பண்ணைக் கூலிகளாக வாழ்ந்து போராடி வளர்ந்துள்ளது. தற்போதைய முதலாளிய சமூகத்தில், நவகொலனிய உலகமயமாதல் சூழலில் புரட்சிகர வர்க்கமான உழைப்பாளிகளான தொழிலாளி வர்க்கம் என்ற தோற்றப்பாட்டை மறைத்து வெவ்வேறு பெயர்களில் மக்கள் கூறுபடுத்தப்பட்டுத் 'தொழிலாளர்' என்ற அங்கீகாரத்தையும் அடையாளத்தையும் வெறுத்தொதுக்கும் மனப்பாங்கை ஏகாதிபத்தியம் திட்டமிட்டு வளர்த்துள்ளது.

தொழிலாள வர்க்கத்தினர் கூட மண்ணில் உழைப்பதையும் கூலித் தொழில் புரிவதையும் மரியாதையற்ற வேலைகளாகக் கணிப்பிடுகின்றனர். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பதைக் கூட புறந்தள்ளுகின்றனர். மக்கள் தங்களைத் தாங்களே போகப் பொருளாக்கி சுய இன்பம் விழைந்து சீரழிகின்றனர். பட்டம், பதவி என்பனவே உயர்வின் இலக்கணங்களாகப் போற்றப்படுகின்றன.

தனிமனிதர்களின் விருப்பு, வெறுப்புகள் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்படுகின்றன. ஆளுமை பெற்ற மனிதராக வருவது ஏட்டுச் சுரைக்காய் ஆகிறது. வாழ்வே போராட்டம் என்பதைப் புறந்தள்ளி சமரசமே மக்களின் அடிமை மனோபாவமாக மாறி வருகிறது. தமது கௌரவம், மானம் என்பன பெரிதாய் போற்றப்பட்டு தாம் போராட்டத்தில் வீழ்ச்சி காணும் போது பெறுகின்ற அவமானம் கண்டு துவண்டு விடுகின்றனர். தம்மீது தாமே கழிவிரக்கப்பட்டு அகமுகிகளாகி உளநலம் குறைந்து ஒதுங்கி ஓரங்கட்டப்படுகின்றனர்.

மாக்ஸீயப் போராளிகளைப் பொறுத்தவரை தவறுகளும் புனிதமாகும். சுயவிமர்சனம் மூலம் அது ஒப்புக் கொள்ளப்படும் போது. ஆனாலும் யாரிடம் எதற்காக ஒப்புக் கொள்வது என்பன வர்க்கம் சார்ந்த விடயங்கள்.

பொய், களவு என்பன தொழிலாளருக்கும் ஏழைகளுக்கும் உரியவையே தண்டனைக்குரியவையாகவும் அவமானத்திற்குரியன வுமாக வெளித் தெரிகின்றன. பெருமுதலாளிய வணிகர்களுக்கு பொய், களவு, ஏமாற்று, நேர்மையீனம் என்பன தந்திரங்களாகவும் வாழ்வியல் நுட்பங்களாகவும் ரசிக்கப்பட்டுப் போற்றப்படுகின்றன. வர்க்க மேலோங்கிகள் மத்தியிலான காதலும், பெண்குறிக்கு அப்பாற்பட்ட கற்பும் போற்றப்படுகின்றன. ஓரங்கட்டப்பட்ட மக்கள் மத்தியில் அவையே அவர்களது வாழ்வை ஒடுக்கும் சாகா வரம் பெற்ற சாபங்களாகி விடுகின்றன.

பாட்டாளி வர்க்கப் போராளிகளான தோழர்கள், துன்பத்துக்குக் காரணம் ஆசையே என்ற புத்தர் பெருமானின் போதனையுடன் திருப்திப்படுவதில்லை. அதற்கப்பால் உயர் வர்க்கச் சிந்தனையும், செயற்பாடுமே துக்கத்துக்கான காரணம் என நாம் துணிந்து கொள்ளலாம். யதார்த்த உண்மை நிலைமைகளைப் பற்றிய புரிதலின் குறைபாடே இந்நிலை தோன்றக் காரணமாகும்.

உயர்வர்க்க மனப்பாங்கில் காகம் உயரப் பறந்தாலும் பருந்தாகாது என்பது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் தனிமனிதர்களைப் பொறுத்தளவில் சரியானது. வரலாற்றில் இளமையான புரட்சிகர வர்க்கமான தொழிலாளி வர்க்கம் தன்னையும் தன் சார்பான ஒடுக்கப்பட்ட மக்களையும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களையும், பெண்களையும் முழுமையாக ஆளுமை பெறச் செய்வதே முதற் கடமையாகும். மேலோங்கிகளின் கட்டளைகளுக்குப் பணிந்தியங்கும் பாமரக் கூட்டமல்ல பாட்டாளி வர்க்கம்.

அழுவதற்கும் சோர்வதற்கும் அடிபணிவதற்கும் அஞ்சுவதற்கும் சாவதற்கும் உரியவர்களல்ல மக்கள். மக்கள் போராடப் பிறந்தவர்கள். போராட்டம் என்பது உயிர்வாழ்வதற்கான உரிமை. எவரது சலுகையும் எதிர்பார்த்திருப்பவர்களல்ல மக்கள். எவரிடமிருந்தும் இரக்கும் மனங் கொண்டவர்களல்ல மக்கள். பிச்சை பெற்று பெரு வாழ்வு வாழ முனைபவர்களல்ல மக்கள்.

மக்கள் தமது மண்ணில் தமது திண்ணையில் தமது மரங்களின் கீழ் தமது மக்களுடன் தமது வாழ்வைத் தொடரத் தாமே தீர்மானிப்பவர்கள். அவர்களுக்கு யாரும் வாழ்வு தரத் தேவையில்லை. தம்பாட்டில் வாழ அனுமதித்தாலே போதும்.

வாழ அனுமதி மறுப்பின் போராடுவது தவிர்க்க இயலாதது. போராட்டம், போராட்டம், போராட்டம். போராட்டம் மட்டுமே வாழ்வின் மையப் புள்ளியென்பதே உழைப்பாளி வர்க்கத்தின் உன்னத நிலைப்பாடாகும்.

மறுமடலில் சிந்திப்போம்
தோழமையுடன் செண்பகன்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# கலைந்து போன கனவுகளும் தேடப்பட்ட அவலங்களும்

மோகன்

விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் அவலமான முடிவிற்குப் பின்பு பலவாறான நொண்டித்தனமான விளக்கங்களும் வியாக்கியானங்களும் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் உண்மைகளை அறிகிற நோக்கமோ கடந்த காலத் தவறுகளைத் திருத்தித் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகிற அக்கறையோ தெரியவில்லை. மாறாகத் தங்களது தவறுகளை மூடிக்கட்டிப் பிறர் மீது பழி சுமத்துவதையே திரும்பத் திரும்பத் தொடருகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தைப் பற்றிய விரிவான விமர்சனங்கள் தேவையானவை. ஆனால் அவை எந்த நிலைப்பாட்டிலிருந்து என்ன கண்ணோட்டத்திலிருந்தும் முன் வைக்கப்படுகின்றன என்பது கவனத்திற்குரியது. அடிப்படையான தவறுகள் சுட்டிக் காட்டப்பட்ட போது அவற்றைப் புறக்கணித்தும் நிராகரித்தும் பேசியவர்கள் இப்போது புதிய வேடங்கள் பூண்டு நாடகமாடுகிறார்கள். அவற்றைப் போலவே தங்களது தனிப்பட்ட அல்லது இயக்கங்கள்

**விடுதலைப் புலிகளின் போராட்டத்தைப் பற்றிய விரிவான விமர்சனங்கள் தேவையானவை. ஆனால் அவை எந்த நிலைப்பாட்டிலிருந்து என்ன கண்ணோட்டத்திலிருந்தும்**

சார்ந்த பகைமையை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகளைத் திட்டித் தீர்த்தவர்கள் இன்றைய சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டுள்ளார்கள். இத்தனைக்கும் நடுவே, மூன்று லட்சம் தமிழர் முள்ளுக் கம்பி வேலிகளாற் சூழப்பட்டுள்ளனர். குடும்பங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரிற் சிறைகட்குக் கொண்டு செல்லப்பட்ட ஆயிரக்கணக்கானோர் போகப், பெருந் தொகையான இளைஞர்கள் பற்றிய தகவல்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது.

இடம்பெயர்க்கப்பட்ட இம் மக்களின் அவலத்தைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் பற்றி இங்கே நல்ல அரசியற் சக்திகளும் உண்மையான மனிதாபிமானிகளும் சமூக அக்கறையுடையோரும் சிந்தித்துச் செயற்பட முயற்சிகளை எடுக்கும் அதே வேளை, அதே அவலத்தைக் காட்டி இலங்கைத் தமிழர்களையும் முடிந்தால் முழு நாட்டையும் அந்நிய ஆதிக்கவாதிகளிடம் விற்கிற முயற்சிகள் மும்முரமாகியுள்ளன.

தமிழ்த் தலைவர்களாகப் பலவேறு கட்சிகளதும் இயக்கங்களதும் பேரில் தங்களை முக்கியப்படுத்திக் கொண்டவர்கள் எவருமே தமிழ் மக்களை நம்பயவர்களல்ல. மக்கள் அரசியல் என்பதும் மக்கள் போராட்டம் என்பதும் அவர்களுக்கு விளங்காதவை. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இன்றைய அவலநிலையை எட்டியதற்கான காரணங்களுள் ஆயுதங்களை முதன்மைப் படுத்தியமையை விட முக்கியமானது மக்களைப் போராட்டத்தின் அதி முக்கிய பகுதியாகக் கருதத் தவறியதாகும். அதிலிருந்தே பலவேறு தவறுகள் உருவாயின. மக்களுடைய பங்குபற்றலும் கருத்துக்களும் உரிய இடத்தைப் பெற்றிருந்தால் இன்றைய கையறு நிலைக்கும் இத்தனை உயிரிழப்புக்களுக்கும் இடமிருந்திராது.

தமிழர் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக விருத்தி கண்ட நிலையிலிருந்தே அந்நிய அரசுகளின் செல்வாக்கிற்குத் தன்னை உட்படுத்திக் கொண்டது. இந்தியாவும் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இஸ்ரேலும் பல வகைகளிலும் போராட்டத்தின் நெறிப்படுத்தலுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்துள்ளன. இஸ்ரேல் ஒரே வேளையில் விடுதலைப் புலிகட்கும் இலங்கை அரசாங்கப் படைகட்கும் இராணுவப் பயிற்சி வழங்கியது பற்றிப் பல ஆண்டுகள் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்ட விதமான போக்கிற்குப் புலம்பெயர்ந்த தமிழரிடையே படித்து உயர்பதவி வகிக்கிறவர்களிடையிலும் செல்வந்தவர்களிடையிலும் உள்ள முக்கியஸ்தர்கள் சிலர் முக்கியமான பங்களித்துள்ளனர். வடக்கிற்கான போரின் இறுதி மாதங்களில் அமெரிக்காவினதும் மேலை நாடுகளதும் குறுக்கீட்டின் மூலம் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தலாம் என்றும் இறுதி நேரத்திலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை உறுப்பினர்கள் சிலரையேனுங் காப்பாற்றலாம் என்றும் நம்பிக்கை ஊட்டியவர்கள் இவர்களிடையே தான் இருந்தனர்.

இவர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அடிப்படையில் இன்னமும் மேற்குலகின் குறுக்கீட்டின் மூலம் தமிழீழத்தைப் பெறலாம் என்ற கனவை மீளுற்பத்தி செய்வதில் இவர்கள் மிகவும் தீவிரமாகச் செயற்படுகிறார்கள். வேல்ஸிலிருந்து வீரகேசரியில் தொடர்ந்து எழுதுகிறவரான அருஷ் என்பவர் யூன் மாதத்தில் எழுதிய கட்டுரை புலம்பெயர்ந்த தமிழரிடையே உள்ள விடுதலைப் புலி ஆதரவுப் பிரமுகர்கள் மத்தியில் மேற்குலகு பற்றிய எத்தகைய மூர்க்கத்தனமான எதிர்பார்ப்பு உள்ளது என்று காட்டுகிறது. பிற விடுதலைப் புலி ஆதரவாளர்கள் நடுவே மேற்குலகு பற்றியும் ஐ.நா.சபை பற்றியும் இந்திய தமிழக அரசியற் கட்சிகள் பற்றியுமான மயக்கங்கள் வேகமாகக் கலைந்து வருகிற வேளையில் உலகத் தமிழர்கள் அனைவரையும் அமெரிக்காவுக்குப் பின்னால் அணி திரளுமாறு மேற்குறிப்பிட்ட விதமான பிரமுகர்கள் அழைப்பு விடுக்கின்றனர்.

வசதிபடைத்த புலம்பெயர்ந்த தமிழரிடையே விடுதலைப் புலிகள் பற்றிய நிலைப்பாட்டில் எப்போதுமே வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. எனினும் அவர்களிற் பெரும்பாலானோர் மேலை நாட்டு அரசாங்கங்கள் பற்றி நம்பிக்கையுடையோராகவே இருந்தனர். விடுதலைப் புலிகளை அந்த நாட்டு அரசாங்கங்கள் தடை செய்ததை விரும்பாதோரும் தமிழ் மக்களை அழிவினின்று காப்பாற்ற மேலை அரசாங்கங்கள் முன்வரும் என்றே நம்பினார்கள். விடுதலைப் புலிகளை நிராகரித்தவர்களிடமும் அவ்வாறான நம்பிக்கையே இருந்து வந்தது.

விடுதலைப் புலிகள் தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலைப்பாடு இலங்கையிலே தமிழரிடையே இருந்ததை விட அதிகமாகப் புலம்பெயர்ந்த சூழலில் வலுவாக இருந்த நிலையில் விடுதலைப் புலிகளின் தரகர்களாகத் தம்மை அடையாளங்காட்டிக் கொண்டு சிலரால் மேலைநாட்டு அரசியல்வாதிகளுடன் உறவுகளைப் பேணியும் பேரம் பேசியும் தம்மை விருத்தி செய்து கொள்ள முடிந்தது.

**தமிழர் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக விருத்தி கண்ட நிலையிலிருந்தே அந்நிய அரசுகளின் செல்வாக்கிற்குத் தன்னை உட்படுத்திக் கொண்டது.**

இத்தகைய பிரமுகர்களிடையே இடதுசாரி எதிர்ப்பு வலுவாக இருந்ததுடன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடாவடித்தனங்களை நியாயப்படுத்துகிற போக்கும் மிகுதியாக இருந்து வந்தது. விடுதலைப் புலிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் அறவே தயக்கங் காட்டியதற்கு புலம்பெயர்ந்த மேட்டுக்குடி ஆதரவாளர்களது செல்வாக்கு ஒரு முக்கியமான காரணமெனலாம். ஒடுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளையே முற்று முழுதாக உள்ளடக்கிய போராளிப் படையைக் கொண்ட ஒரு அமைப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பில் தயக்கங் காட்டவும் நேர்மையான தமிழ் இடதுசாரிகளை நிராகரிக்கவும் காரணம் என்ன என்பது மேலும் விசாரிக்க வேண்டிய விடயமாகும். இவ் வேளை, அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஒரு விடுதலைப் புலி இயக்கப் பிரமுகர் சில ஆண்டுகள் முன்பு ஐரோப்பாவில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது திருகோணமலையை அமெரிக்கர்கட்குக் குத்தகைக்குக் கொடுக்கலாம் என்று வெளிவெளியாகச் சொல்லியிருந்தமையை இங்கு குறிப்பிடுவது தகும்.

எனினும், இவர்களது எந்த விதமான செல்வாக்கும் விடுதலைப் புலிகள் மீதான அமெரிக்க, ஐரோப்பியத் தடைகளை நீக்க உதவவில்லை என்பது எல்லாரும் அறிந்த விடயமே. இப்போது இலங்கை அரசாங்கம் மேற்குலகின் நெருக்குவாரங்களைக் கையாள்வதிற் காட்டிவரும் மூர்க்கத்தனமான போக்கு மேற்கில் ஓரளவு கடுப்பை ஏற்படுத்தியிருக்கிற நிலையில் இவர்கள் மேற்குலகின் உதவியுடன் இலங்கையிற் தமிழர் தனிநாடு பெறலாம் அல்லது சுயாட்சி பெறலாம் என்று கனவுக் கோட்டைகளைக் கட்டத் தொடங்கியுள்ளனர். இது இலங்கையிலுள்ள தமிழரிடம் எடுபடாது. எனினும் மனம் நொந்துள்ள நிலையில் எதுவுஞ் செய்ய வழியறியாது தவிக்கும் புலம்பெயர்ந்த தமிழரின் பெரும்பாலானோரிடையே நிதி திரட்டவும் அவர்களது ஆதரவுடன் தம்மை முக்கியப்படுத்திக் கொள்ளவும் இந்த மேட்டுக்குடி அரசியற் தரகர்கள் கடுமையாக முயல்வார்கள். எனவே புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் அவர்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இன்னொருபுறம் பலவேறு காரணங்கட்காக இந்திய மேலாதிக்கவாதிகளுடன் தம்மை நெருக்கமாக்கிக் கொண்டவர்களும் இந்தியாவை பகைத்ததாலேயே விடுதலைப் போராட்டம் பின்னடைவுகளைச் சந்தித்தது என்று நினைப்பவர்களும் புலம்பெயர்ந்தோரிடையே உள்ளனர். இவர்கள் மத்தியிலிருந்து இந்தியாவைத் தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக இல்லாவிடினும் ஒரு குறைந்தபட்சத் தீர்விற்கு ஆதரவாகவேனுந் திருப்பலாம் என்கிற நப்பாசை உள்ளது.

**வசதிபடைத்த புலம்பெயர்ந்த தமிழரிடையே விடுதலைப் புலிகள் பற்றிய நிலைப்பாட்டில் எப்போதுமே வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. எனினும் அவர்களிற் பெரும்பாலானோர் மேலை நாட்டு அரசாங்கங்கள் பற்றி நம்பிக்கையுடையோராகவே இருந்தனர்.**

இந்தியாவின் அண்மைக்கால நடத்தையும் தமிழக அரசியற் தலைமைகளின் நம்பகமின்மையும் அவர்களது முயற்சிக்கு உதவப் போவதில்லை. எனினும் தமிழ் மக்களின் தேசிய இன உரிமைக்கான போராட்டத்தில் இந்தியாவிற்கு ஒரு பங்கை உருவாக்குவதற்கான முயற்சிகளை நாம் எதிர்பார்க்கலாம். இவ்வாறான முயற்சிகள் சில ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியாவிலும் இங்கும் ஏற்கெனவே தொடங்கி விட்டன.

இந்தப் பின்னணியில் இலங்கைத் தமிழ் நாளேடுகளின் நடத்தை மிகவும் பொறுப்பற்றதாகவும் ஏமாற்றமளிப்பதாகவுமே உள்ளது. குறிப்பாக, முன்பக்கச் செய்தித் தலைப்புக்களும் செய்திகளின் தெரிவும் தலையங்கங்களும் பிற ஊடகங்களிலிருந்து பெறப்பட்டுப் பிரசுரமாகுங் கட்டுரைகளும் எவையெல்லாம் வெகுவிரைவிலேயே நிராசையாகக் கூடிய எதிர்பார்ப்புக்களோ அவற்றை மேலும் ஊக்குவிப்பனவாகவே உள்ளன.

கொலனிய எசமானர்களின் நீதி தவறாத நடத்தை பற்றிய நம்பிக்கைகளிலும் மேலை முதலாளியத்தின் சனநாயக நீதியின் மீதான நம்பிக்கையிலும் இந்தியாவின் அறஞ்சார்ந்த அயற்கொள்கை மீதான நம்பிக்கையிலும் ஒரு நூற்றாண்டுக் காலம் பயனின்றிக் கழிந்து விட்டது. பொய்த்துப் போன நம்பிக்கைகளை நிராகரிப்பதற்குரிய காலங் கடந்த பின்பும் அதே நம்பிக்கைகளை வெவ்வேறு வடிவங்களில் வளர்த்து வருகிற தலைமைகளும் பிரமுகர்களும் பிரபலங்களும் ஊடக எசமானர்களும் தெரியாமற் தவறு செய்யவில்லை. தெரிந்து கொண்டே தமிழ் மக்களை அவர்களது நீண்ட கால சுட்

**கொலனிய எசமானர்களின் நீதி தவறாத நடத்தை பற்றிய நம்பிக்கைகளிலும் மேலை முதலாளியத்தின் சனநாயக நீதியின் மீதான நம்பிக்கையிலும் இந்தியாவின் அறஞ்சார்ந்த அயற்கொள்கை மீதான நம்பிக்கையிலும் ஒரு நூற்றாண்டுக் காலம் பயனின்றிக் கழிந்து விட்டது.**

புச் சக்திகளிடமிருந்து பிரித்து ஒரு அந்நிய வல்லரசிற்கோ இன்னொரு அந்நிய வல்லரசிற்கோ நிரந்தர அடிமைகளாக்க முயலுகிறார்கள். எனவே தான் புலம்பெயர்ந்த தமிழர் உட்பட அனைத்துத் தமிழ் மக்களும் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டிய நேரம் இது.

பாதிக்கப்பட்ட மக்கள், பிரச்சினைக்குரிய மக்கள் இங்குள்ளனர். அவர்கள் மீது மேட்டுக் குடிகள் தங்களது சுயநலத்தின் அடிப்படையிலான தீர்வுகளைத் திணிக்காமற் தடுப்பதற்குப் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் உதவ வேண்டும். அவர்களின் பேரால் ஒரு சிறு கும்பல் மேலைநாடுகளில் தமிழ் மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமான போராட்டங்களை இதுவரை காட்டிக் கொடுத்தது போதும். இனியும் அது தொடரவிடப்படக் கூடாது.



கவிஞர் இ.முருகையனின் அஞ்சலிக்கூட்டம் கொழும்பில் இடம்பெற்ற போது சி.சிவசேகரம், த.கோபாலகிருஷ்ணன் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆகியோர் அஞ்சலி உரை ஆற்றுவதைக் காணலாம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# 13 வது திருத்தம்

# அமுல்படுத்தவும் இயலாது அப்பால் செல்லவும் முடியது

தோழர். இ. தம்பையா

13வது திருத்தச் சட்டம் என்பது இன்று உச்ச நிலை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த 22 வருடங்களாக வடக்கு கிழக்கிற்கு எவ்வித பயனும் இன்றி வெறும் பெயரளவினதாக இருந்து வந்த மேற்படி திருத்தம் பற்றி சற்று விரிவாக நோக்குவது இன்றைய தேவையாகும்.

## 13 வது திருத்தம் பிறந்தது.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கையை அடுத்து மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை கையளிக்கும் மாகாணசபை முறைமையை அமுல்படுத்தும் வகையில் கொண்டு வரப்பட்டது தான் 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பிற்கான 13வது திருத்தச் சட்டம். அக்கால கட்டத்தில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசா ங்கத்திற்குப் பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து 5/6 பெரும்பான்மை இருந்தது. அத்துடன் எல்லா ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களினதும் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்கள் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் கைகளில் இருந்தன. இதனால் பல விடயங்களில் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜே.ஆருடன் முரண்பட்டிருந்தாலும் அவற்றுக்கு ஆதரவளிக்க வேண்டியவர்களா யினர்.

13வது திருத்தச் சட்டம் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு முரணானதா என்று உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளிலும் வித்தியாசம் இருந்தது. அரசியலமைப்பிற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ முரண்பாடாக இல்லை என்பதால் அதனை சட்டமாக்குவதற்கு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படுவது போதுமானதால் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு அவசியமில்லை என்று பிரதம நீதியரசர் எஸ்.சர்வானந்தா, நீதியரசர்கள் பி.பொலின் தோமி, ஈ.ஏ.டி.அத்துகோரளை எச்.டி.தம்பையா ஆகியோர் தீர்ப்பளித்திருந்தனர். நீதியரசர் ஆர்.எஸ் வனசுந்தர 13வது திருத்தம் 1978 அரசியலமைப்பிற்கு முரணானதாகையால் அதனை பொதுமக்கள் அபிப்பிராய வாக் கெடுப்பிற்கு விடப்பட வேண்டுமென்றும் தீர்ப்பளித்திருந்தார். அவரது நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு நீதியரசர்கள் ஓ.எஸ்.எம்.செனவீர த்ன, எல்.எச்.டி.அல்விஸ், எச்.ஏ.ஜீ.டீ.சில்வா ஆகியோர் தீர்ப்பளித் திருந்தனர். நீதியரசர் கே.ஏ.பிரணசிங்' 13வது திருத்தச் சட்டத்தின் சில ஏற்பாடுகளுக்கு பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு தேவை என்று தீர்ப்பளித்திருந்தார்.

எனினும் பிரதம நீதியரசர், நீதியரசர்கள், கொலின் தோமி, ஈ.ஏ.டி.அத்துகோரளை, எச்.டி.தம்பையாவுடன் கே. ஏ.பி.ரணசிங்ஹவும் ஏறக் குறைய ஒரே நிலைப்பாட்டை எடுத்திருந்தனர் என்ற அடிப்படையிலேயே 13வது திருத்தச் சட்டத்திற்கு பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு தேவை இல்லையென்ற நிலைப்பாட்டிலேயே பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு இருவரைத் தவிர ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் வாக்குகளால் சட்டமாக்கப்பட்டது. பிரதமர் பிரேமதாஸ முரண்பாடுகள் இருப்பதாகக் கூறினாலும் எதிர்க்காமல் ஆதரித்துப் பேசி ஆதரவாக வாக்களித்தார். விவசாய உணவு அமைச்சராக இருந்த காமினி ஜயசூரிய பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்தார். சிறில் மத்யூ எதிராக வாக்களித்தார். அவ்வேளை பாராளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்த எவரும் இருக்கவில்லை. (நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவளிப்பில்லை என்ற 6வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க சத்தியம் செய்து மீண்டும் பதவிப் பிரமாணம் செய்யாதபடியால் பாராளுமன்ற உறுப்புரிமையை 17 உறுப்பினர்கள் இழந்திருந்தனர். செல்லையா இராஜதுரை ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சராக இணைந்திருந்தார்).

இவ்வாறான பின்னணியிலேயே 13வது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் சட்டமானது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முழுமையாக எதிர்த்தது. மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவும் எதிர்த்தார். பாராளுமன்றத்திற்கு வெளியில் ஜே.வி.பி எதிர்த்தது.

ஜே.வி.பி தனது இரண்டாவது (1971ற்குப் பிறகு) ஆயுத நடவடிக்கைகளை 1988, 1989, 1990இல் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கைக்கும், மாகாணசபைக்கும் எதிராகவே முன்னெடுத்தது. அவ்வுடன்படிக்கையையும், மாகாணசபை முறையையும் ஆதரித்தவர்களை கொலை செய்தது. ஐக்கிய சோஷலிஸ முன்னணி என்ற பெயரில் இயங்கிய இலங்கை மக்கள் கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, தேசவிமுக்தி ஜனதா கட்சி, நவ சம சமாஜக் கட்சி என்பவற்றின் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட தலைவர்கள் ஊழியர்களை கொலை செய்ததாக அறிக்கை செய்ய ப்பட்டுள்ளது.

அவ்வேளை புதிய ஜனநாயக கட்சி (அன்றைய பெயர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)) கீழ்கண்டவாறு சுட்டிக் காட்டியது. இலங்கையை இந்திய மேலாதிக்கத்திற்குள்ளடக்கிய இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கையையும் இந்திய இராணுவத்தின் வருகையையும் எதிர்த்தாலும், மாகாணசபை முறைமையை தமிழ் மக்களுக்குப் பூரண சுயாட்சியை வழங்காவிட்டாலும் அதனூடாக மேற்கொள்ள எத்தனிக்கப்பட்ட அதிகார கையளிப்பை ஆதரித்தது. அதற்கு எதிராக செயற்பட்ட பேரினவாத சக்திகளுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டது. இருப்பினும் மாகாண சபைகளினூடாக அதிகாரப் பங்கீடு செய்யப்படவில்லை. ஆனால் அதிகாரப் பரவலாக்கலுக்கு மேலாக அதிகார கையளிப்பு செய்யப்பட்டது. (இது சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வல்ல என்பதை கட்சி சுட்டிக்காட்டி நின்றது.

இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையை ஜே.ஆரும் ராஜீவ்காந்தியும் கையெழுத்திட்ட பின்னர் நடைபெற்ற இராணுவ மரியாதை அணிவகுப்பின் போது ராஜீவ்காந்தி இலங்கை கடற்படைவீரரால் தாக்கப்பட்டார். இது அவ் உடன் படிக்கைக்குக் காட்டப்பட்ட ஓர் எதிர்ப்பேயாகும். மாகாணசபை முறையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்ததுடன் தொடர்ந்து அதனது ஆயுத நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தது. அதனால் வடக்கு கிழக்கில் மாகாண சபையை நடைமுறைப்படுத்த இடமளிக்கவில்லை. அதற்கு எதிராக ஆயுத நடவடிக்கைகளை முன்னெடுத்தது மட்டுமன்றி அதன் ஆதரவுடன் 1988ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவான ஈரோஸ் அமைப்பின் 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபையை முதலமைச்சரின் சம்மதமின்றி கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் திருத்தச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர். அதன் விளைவாக வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்படுவதற்கு வாய்ப்பானது. அதாவது மாகாணசபை மூலச்சட்டத்தில் மாகாண சபையை ஜனாதிபதி கலைப்பதற்கான வாய்ப்பிருக்கவில்லை.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களின் சுயாட்சியை உறுதி செய்ய வேண்டுமென்று வலியுறுத்திய மாக்சிச லெனினிச மற்றும் இடதுசாரி சக்திகள் மாகாண சபையை அங்கீகரிக்காவிட்டாலும் அதனை நிராகரித்து செயற்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் இய்க்கம் தனித் தமிழ் நாடு என்ற அதன் நிலைப்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்தபடியால் மாகாண சபைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக வடக்கு கிழக்கில் மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கியது முதல் இன்று வரை அவ்வப்போது 13வது திருத்தச் சட்டத்தைப் பூரணமாக அமுல்படுத்தப்படும் என்றும் நீண்டகாலத்தில் அத் திருத்தச் சட்டம் அப்பால் சென்று ஒற்றை ஆட்சி முறைமைக்குள் அதிகாரத்தை மாகாணங்களுக்கு கையளிப்பதன் மூலம் அரசியல் தீர்வு காணப்படும் என்றும் அரசாங்க தரப்பில் கூறப்பட்டு வந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக முறியடிக்கப்பட்ட பிறகு தேசிய இனங்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பது பற்றி வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுகின்றன. ஜே.வி.பி, ஹெல உறுமய, பௌத்தபிக்கு அமைப்புகளும் ஏனைய பேரினவாத அமைப்புக்களுடன் தனிநபர்களும் 13வது திருத்தச் சட்டத்தைக் கூட அமுல்படுத்தக்கூடாது என்றும் அதனை அரசியலமைப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர். 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தினால் பாரிய மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக தேசிய பிக்குகள் முன்னணியும், ஜே.வி.பியும் கூறுகின்றன. 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தினால் அரசாங்கத்திலிருந்து விலகப் போவதாக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

## இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபை

13வது திருத்தச் சட்டத்தின்படி 9 மாகாணங்களில் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தற்காலிகமாக இணைக்கப்பட்டும் அவை நிரந்தரமாக இணைக்கப்பட கிழக்கு மாகாணத்தில் பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மாகாணங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணசபைகள் இணைந்ததாக 19 செப்டெம்பர் 1988 தேர்தலின்படி இணைந்த மாகாணசபையை ஈ.பி.ஆர்.எல்.எப் கைப்பற்றியது. அதன் முதலமைச்சராக வரதராஜப் பெருமாள் இருந்தார்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களின் நிரலில் தீர்மானிக்கப்பட்ட பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கும்படி, மாகாணசபைகளுக்கும், மத்திய அரசாங்கத்திற்கும் பொதுவாக ஒதுக்கப்பட்ட அதிகாரங்களையும், மாகாணசபைகளுக்கு வழங்கும்படி வரதராஜப் பெருமாள் கோரிக்கை விடுத்தார்.

அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸவுடன் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தை நடத்திய போது ஈ.பி.ஆர்.எல்.எப் தலைமையிலான மாகாணசபை ஆட்சிக்கு பலவிதமான இடைஞ்சல்கள் கொடுக்கப்பட்டன. இந்திய படைகளின் ஏற்பாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எப் உட்பட சில அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்ட தமிழ் தேசிய இராணுவத்திற்கு எதிராகப் போராடவென புலிகள் அமைப்பிற்கு ஜனாதிபதி பிரேமதாஸ ஆயுதங்களை வழங்கியிருந்தார். அதனைக் கொண்டு இந்திய இராணுவத்திற்கு எதிராகவும் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதன் காரணமாகவும் 1990இல் மாகாண சபைகளை கலைக்கும் திருத்தச் சட்டம் ஆக்கப்பட்டதாலும், கேட்கப்பட்ட அதிகாரங்கள் கிடைக்காதபடியாலும், இந்தியப் படைகள் இங்கிருந்து வெளியேறத் தொடங்கியதாலும், தன்னிச்சையான தனிநாட்டுப் பிரகடனத்தைச் செய்துவிட்டு வரதராஜப் பெருமாள் அவரின் 250 ஆதரவாளர்களும் இந்தியப் படையினரின் கப்பலில் ஏறி இந்தியாவுக்குச் சென்றனர். அதன் பின் வடக்கு கிழக்கு மாகாணசபையும் கலைக்கப்பட்டது. 1991இல் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார். 1993இல் பிரேமதாஸ குண்டு வெடிப்பால் கொல்லப்பட்டார். அதன் பின்னர் ஏனைய மாகாணசபைகளுக்கு 1993, 1998, 2004 ஆகிய ஆண்டுகளில் தேர்தல் நடைபெற்ற போதும் வடக்கு கிழக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடைபெறவில்லை. 1998இல் சந்திரிகா குண்டுவெடிப்பில் படுகாயமடைந்து உயிர் தப்பினார்.

16 அக்டோபர் 2006ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் வடக்கு கிழக்கு மாகாணசபை இணைப்பைப் பிரித்து தீர்ப்பளித்தது. இவ்விணைப்பை பிரிக்கும்படி ஜே.வி.பி வழக்கை தொடுத்திருந்தது இத் தீர்ப்பை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா எழுதியிருந்தார். அத் தீர்ப்புடன் நீதியரசர்கள் நிகால் ஜயசிங்க, என்.கே.உடாலகம, ஏ.ஆர்.என். பெர்ணான்டோ, ஆர்.ஏ.என்.ஜீ.அமரதுங்க ஆகியோர் உடன்பட்டிருந்தனர்.

சரத் என் சில்வா ஓய்வு பெற்ற பிறகு மாகாண் சபை முறை இலங்கை போன்ற சிறிய நாட்டிற்குப் பொருத்தமில்லை என்றும் இங்கு மாவட்ட அபிவிருத்திச் சபை போன்ற அதிகாரப் பரவலாக்கலே உசிதமானது என்றும் கூறியுள்ளார். அதன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதிக்கம் முறியடிக்கப்பட்ட பின்னர் கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடைபெற்றது. அரசாங்கத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் புலிகள் இயக்கத்திலிருந்து பிரித்தவர்களின் அமைப்பான த.ம.வி.பு இயக்கத்தினர் போட்டியிட்டனர். அது வெற்றிபெற்று சிவசேனதுரை சந்திரகாந்தன் முதலமைச்சரானார். அவரும் பொலிஸ், காணி அதிகாரங்களை கிழக்கு மாகாணசபைக்கு வழங்க வேண்டுமென்று கோரியுள்ளார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் பக்க நியாயமென்னவெனில் மாகாணசபை தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை உறுதி செய்யும் வகையில் மாகாணசபைக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வில்லை. அதனால் அதனை விட கூடுதல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதாகும். அதனாலேயே ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் ஸ்ரீநிவாஸன் யோசனைகள், பின்னர் மங்கள முனசிங்க யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

பின்னர் ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் 1995 ஆகஸ்ட் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. பின்னர் 2000 ஆண்டில் சந்திரிகா அரசியலமைப்பிற்கு திருத்தமாக மாகாணங்களுக்கு ஓரளவிற்கு கூடிய அதிகாரங்களைக் கொண்ட புதிய அரசியல் யாப்பு வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதனை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் தீயிட்டுக் கொளுத்தி அதனைத் தோற்கடித்தது. அதன் வாக்குறுதிக்கு மாறாக நடந்து கொண்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதனை எதிர்த்தது (ஜே.வி.பி. ஹெலஉறுமய எதிர்த்தன).

2002ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கை, பின்னர் நடைபெற்ற சமாதான முயற்சிகளின்படி சமஷ்டி முறையில் தீர்வு காண்பதென ஒஸ்லோ உடன்பாடு ஏற்பட்டது. பாராளுமன்றத்தை சந்திரிகா கலைத்ததுடன் அம் முயற்சிகள் பின்னடைவடைந்தன. சந்திரிகாவின் காலத்தில் 2004ம் ஆண்டு புலிகள் அமைப்புடன் சுனாமி மீளமைப்பு நடவடிக்கைகளுக்கான சுனாமி கட்டமைப்பு உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. அதனை எதிர்த்து ஜே.வி.பி ஹெல உறுமய ஆகியன உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தன. அவ்வ ழக்கு தீர்ப்பின்படி சுனாமி கட்டமைப்பு சட்ட விரோதமானதென தீர் க்கப்பட்டது. சந்திரிகாவின் காலத்தில் அரசியல் தீர்வு காண்படதற்கான சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டு அதன் நிபுணர் குழுவின் சிபாரிசுகள் வெளியிடப்பட்டன. அதில் மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் சிபாரிசு செய்யப்பட்டன.

## மகிந்த சிந்தனையின் கீழ்

அதன் ஜனாதிபதி ராஜபக்ச காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு முறிவு ஏற்பட்ட பின்னர் இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு மூன்று வருடங்களுக்குப் பின்னர் புலிகள் அமைப்பு இராணுவ ரீதியாகத் தோல்வியடைந்துள்ளது.

இந்நிலையில் அரசியல் தீர்வு எதுவும் தேவை இல்லை என்பதும் இந்தியாவால் திணிக்கப்பட்ட மாகாணசபையும் தேவை இல்லை என்பதும் பேரினவாதிகளினதும் அரசாங்கத்தினுள் உள்ள இனவாதிகளினதும் பாதுகாப்பு படையினரதும் நிலைப்பாடாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் நிலைப்பாட்டை அவர் தெளிவாக வெளிப்படுத்துவதில்லை.

தொடர்ச்சி 9ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# 13வது திருத்தம் திருத்தத்தை அமுல்படுத்த மஹிந்தவால் இயலாது

## அதற்கப்பால் பாராளுமன்றத்தாலும் செல்ல முடியாது

சந்திரிகாவின் காலத்தில் அமைக்கப்பட்ட அமைச்சர் திஸ்ஸவித்தாரண தலைமயிலான சர்வகட்சி குழுவின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஜே.வி.பி. ஹெலஉறுமய என்பன எதிர்த்தன. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் ஏற்பட்ட முறுகலினால் அதில் ஐக்கிய தேசியக் கட்சி பங்கெடுக்கவில்லை. த.தே.கூட்டமைப்பு அதில் கலந்து கொள்ளவில்லை.

தற்போது அரசாங்கத்தின் சமாதான செயலகம் கலைக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு மாத காலத்தில் திஸ்ஸவித்தாரணவின் பணிகளும் முடிவிற்குக் கொண்டு வரப்படும். என்றே நம்பப்படுகிறது. அவர் தலைமையிலான அரசியல் தீர்வு நடவடிக்கைகள் புறந்தள்ளப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. ஏனெனில் ஜனாதிபதி ராஜபக்ச நாட்டின் நல்லிணக்கத்திற்கும், அபிவிருத்திக்குமான சர்வகட்சி குழுக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். அதில் அரசியல் தீர்வு பற்றி ஆராயப்படவில்லை. ஆனால் அதனை வைத்து காலத்தைக் கடத்திச் செல்லலாம் என்றே எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அரசியல் தீர்வு பற்றிய ஐயப்பாடே எழுந்துள்ளது.

யுத்தத்திற்கு இந்தியா வழங்கிய ஆதரவின் போது, 13வது திருத்தச் சட்டத்தைப் பூரணமாக அமுல்படுத்துவதென்றும் அதற்கு மேலான அரசியல் தீர்வினைக் காண்பதென்றும் இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதாகவே தெரிகிறது. 13வது திருத்தச் சட்டம் அரசியலமைப்பின் பகுதியாக அதனை நடைமுறைப்படுத்த பாராளுமன்றமோ, அதற்கு வெளியிலோ நெறிமுறையான தடைகள் எதுவும் இருக்க முடியாது. ஆனால் 17வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது போன்று ஜனாதிபதி 13வது திருத்தச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்தாமல் விடலாம். அரசியலமைப்போ, அதன் பகுதியையோ நடைமுறைப்படுத்தாமல் இருப்பது அரசியலமைப்பு தவறாகும்.

17வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு எதிராக ஜனாதிபதிக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியாமல் இருப்பது போன்று 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இராது. ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதெனில் அது அவருக்கு எதிரான குறைகேள் பிரேரணை ஆகும். அதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அப்படி செய்வதெனிலும் யார் எப்படிச் செய்வது? 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இருக்கும் எதிர்ப்பே அதற்கு மேலான சுயாட்சிக்கும் இருக்கும். எனவே 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை எதிர்ப்பதற்கில்லையாயினும் அதில் காலத்தை வீணடிக்காமல் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய இனங்களுக்கு சுயாட்சியை உறுதி செய்யும் அரசியல் தீர்வு பற்றி சிந்திப்பதே அவசியம்.

ஒற்றையாட்சிக்குள் தீர்வென்ற நிலைப்பாட்டில் இருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுப்பாரா? அதற்கு அப்பால் அதகிாரங்களைப் பங்கிடும் அரசியல் தீர்விற்கு தயாராவாரா? ஏனெனில் பாராளுமன்றத்தில் அவருக்கு ஆதரவாக இருப்போர் அதனை எதிர்க்கின்றனர். ஆறாவது சக்தியான இராணுவம் எதிர்க்கிறது. பிக்குகள் எதிர்க்கின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக பொருளாதார ரீதியாக இந்தியாவின் ஹொங்ஹொங்காக மாற்றப்பட்டிருக்கும் இலங்கையில் இந்தியாவுக்கு தேவைக்கு அளவான அரச நிர்வாகக் கட்டமைப்பை இந்தியா வலியுறுத்தலாம். அது 13வது திருத்தம் மட்டுமா? அவ்வாறெனில் மஹிந்த ராஜபக்ச நெருக்குதல்களுக்கு ஆளாகலாம். 13வது திருத்தத்திற்கு மேலெனின் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஜே.ஆர் காலத்தில் போன்று இப்போது அரசாங்கத்திற்கு இல்லை. தற்போதைய தேர்தல் முறையில் எதிர்காலத்திலும்

### தீர்வுதான் என்ன?

அதற்கான வாய்ப்பில்லை. அது சாத்தியமில்லை.

ஜனாதிபதி, பாராளுமன்றம் போன்ற வரையறைகள் தேசிய இனங்களின் உரிமைகளை உறுதி செய்யக் கூடிய அரசியல் தீர்வை நோக்கிப் பயணிக்க இடமளிக்காது. எனவே 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது என்பதைப் பற்றி விவாதிப்பதிலேயே காலம் போகலாம்.

அரசியல் தீர்வை சமர்ப்பிப்பதற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் திஸ்ஸவித்தாரண 13வது திருத்தச் சட்டத்தில் அதிகாரங்கள் தொடர்பாக இருக்கும் மத்திய அரசாங்கத்திற்கும், மாகாணசபைகளுக்கும் பொதுவாக இருக்கும் நிரலை நீக்கிவிட்டு அரசியல்தீர்வை முன்வைக்கும் போது பிரச்சினை எழாது என்றும் கூறியுள்ளார். அதாவது 13வது திருத்தச் சட்டத்தில் மாகாணசபை அதிகாரங்களின் எல்லை பற்றிய நிரல் இருக்கிறது. அது மாகாணங்களுக்குரிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இதில் மத்திய அரசாங்கம் தலையிடாவிட்டாலும் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமாக்கப்பட்டால் தலையிடலாம்.

இவ்வதிகாரங்கள் கல்வி, சுகாதாரம், கைத்தொழில் போன்றனவற்றை உள்ளடக்கியதாகும்.

13வது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது இன்னொரு அதிகார நிரல் மத்திய அரசாங்கத்திற்குரியது. அவற்றில் மாகாணசபைக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அவை தேசிய பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயம் போன்றன குறிப்பிடத்தக்கன.

மூன்றாவது அதிகார நிரல் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் பொதுவானதாகும். அதில் பொலிஸ், காணி போன்றன பற்றியதாகும். இவ்விடயங்களில் மத்திய அரசாங்கமோ, மாகாண அரசாங்கமோ முடிவெடுக்கும் போது ஒன்றுடன் மற்றொன்று கலந்துரையாடி இணக்கம் கண்டு செயற்பட வேண்டும். இந்த நிரலை அகற்றிவிட்ட நிலையில் அரசியல் தீர்வு காண்பது பற்றியே தற்போது திஸ்ஸவித்தாரண பேசுகிறார். அவ்வாறெனில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் (மத்திய அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடன்) மாகாண சபைகளுக்குக் கிடைக்கப் போவதில்லை. கிடைப்பது போல் இருக்கும் ஏற்பாடுகளும் உத்தேச அரசியல் தீர்வில் பறிக்கப்படலாம்.

13வது திருத்தச் சட்டம் இந்தியாவின் அழுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்டாலும் தற்போதைய இலங்கையின் சூழ்நிலையில் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது உசிதமானதல்ல என்பதை இந்தியா புரிந்து கொள்ளும். அதனால் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குமாறு இந்தியா எவ்வித அழுத்தத்தையும் எமக்குக் கொடுக்காது என்று இடர்முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்ஹ தெரிவித்துள்ளார். இலங்கை போன்ற சிறிய நாட்டில் மாகாணங்களுக்கு பொலிஸ், காணி பற்றிய அதிகாரங்களை வழங்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார். எனவே மாகாணங்களுக்கு தற்போது கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் இல்லாது போகலாம்.

இதேவேளை தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் விமல்வீரவன்ச '13வது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கக் கூடாது 13வது திருத்தச் சட்டம் காலம் கடந்தது. அதனை நடைமுறைப்படுத்துவதில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வாக்குறுதி அளித்துள்ளார். அதனாலேயே நாம் அரசாங்கத்தில் இருக்கிறோம். 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது பற்றிப் பேசும் அமைச்சர்களின் வாய்களுக்கு ஜனாதிபதி பூட்டுப் போட வேண்டும். 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் நாம் அரசாங்கத்தில் இருக்க மாட்டோம்' என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலைமையில் தமிழ்த் தரப்புக்களின் நிலைப்பாடென்ன? தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன?என்ற கேள்வி எழுவது தவிர்க்கவியலாத ஒன்றேயாகும். வரலாறு ஓரே இடத்தில் நிற்காது என்பதுடன் சில ஆதிக்க அரசியல் சக்திகளும் தலைமைகளும் விரும்புவது போன்று தவறானவற்றை ஏற்றுக் கொள்ளவும் மாட்டாது.

எமது கட்சியைப் பொறுத்த வரை ஏற்றுகனவே அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள பதின் மூன்றாவது திருத்தம் அதன் முழுமை வடிவில் நடைமுறைப்படுத்தப்படுவது இன்றைய சூழலில் தேசிய இனக்குத் தீர்வு காணப்படுவதற்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய இனங்களுக்கு அதிக பட்ச சுயாட்சியும் சுயாட்சி உள்ளமைப்புகள் வாயிலான நடைமுறைகளுமே அரசியல் தீர்வாக அமைய முடியும்.

# பொது அமைப்புக்களிற் பங்குபற்றல்

ஆள் அமைப்பு ஆளுமை 5

சி.சிவசேகரம்

சமுதாயத்திற் செயற்படும் அமைப்புக்களிற் சிலவற்றில் நாம் ஒவ் வொருவரும் தவிர்க்க இயலாத விதமாகவே பங்குபற்றுகிறோம். இன்ன அமைப்பு என்பதில் ஒருவேளை நமக்குத் தெரிவு இருந்தாலும் குறிப்பிட்ட சில வகையான அமைப்புக்களில் பங்குபற்றுவதிலிருந்து நமக்கு அனேகமாக விலக்கு இல்லை. அந்த அமைப்புக்கள் நம்மை நாம் வாழும் சமூகத்தின் அமைப்பிற்கமையவும் அதைக் கேள்விக்குட்படுத்தாமலும் அதன் இருப்பிற்கும் மேம்பாட்டிற்குமாகச் செயற்பட நம்மைப் பழக்கும் நோக்கிலானவை.

நாம் சுயமாகத் தெரிந்தெடுக்கும் அமைப்புக்களிற் பலவும் சமுதாய அமைப்பைக் கேள்விக்குட்படுத்தாதவையே. எனினும் நம் ஒவ்வொருவரதும் நியாய உணர்வும் அற விழுமியங்களும் சமூக அக்கறைகளும் நம்மைச் சூழவுள்ள சமூகத்தில் நடப்பவை பற்றிய கேள்விகளை எழுப்பத் தூண்டுகின்றன. அவற்றுக்கான விடைகளை எவரும் தனக்குள்ளேயே தேடி அறிய இயலாது. அதன் விளைவாகப் பொதுவான அக்கறைகளுந் தேடல்களும் உடையோர் ஒன்றுகூடி விடயங்களை அறிய முற்படுகின்றனர். இந்த விதமான குழுக்கள் அமைப்புக்களாக வடிவம் பெறுகின்றன. அவை எல்லாமே சமூகத்தைச் சீர்திருத்துவது பற்றியனவோ மாற்றியமைப்பது பற்றியனவோ அல்ல. மனித அக்கறைகள் பலவாறானவை. ஏல்லாரும் ஒரே வகையான அக்கறைகட்கு முதன்மை வழங்குவதில்லை. எனினும் நமது இருப்புக்கும் நிலைப்பிற்கும் அத்தியாவசியமானவை என்று கருதுகிற விடயங்கட்கும் அப்பால் நமது அக்கறைகளும் தேடல்களும் செல்லுகிற போது, நாம் சமுதாயத்தின் இயக்கத்திலும் விருத்தியிலும் கூடிய பங்களிப்பை வழங்குகிறோம்.

இவ்வாறான அமைப்புக்கள் அறிவியல் சார்ந்தோ அரசியல் சார்ந்தோ சமூகப் பணி சார்ந்தோ வேறு எவ்வகையிலுமோ சமூகத்தின் பொது நலன் சார்ந்திருக்கும் போது, அவற்றிற் பங்கு பற்றுவோரின் ஆளுமையில் தான் சமூக உறுப்பினர் என்ற உணர்வு படியத் தொடங்குகிறது.

சமூக நலன் சார்ந்த பணிகட்கான அமைப்புக்களில் எவரது தனிப்பட்ட பங்களிப்பும் அவர் தனியாக வழங்கியிருக்கக் கூடியதை விடப் பன்மடங்கானதாகப் பெருக இயலும். அமைப்பின் நோக்கமும் தன்மையுமே ஒருவரது பங்களிப்பின் பெறுமதி எவ்வளவு பெருக இயலும் என்பதைத் தீர்மானிக்கின்றன.

ஒரு செயற்பாடு ஒரு கூட்டு முயற்சி எனவும் அதிற் தான் ஒரு முக்கியமான பங்காளி எனவும் தனது பங்களிப்பு அமைப்பின் உள்ளும் பங்களிப்பின் பெறுமதியின் காரணமாக அமைப்பிற்கு வெளியிலும் மதிப்பிற்குரியதாகிறது என்ற உணர்வு எந்த ஒரு உறுப்பினரையும் உற்சாகப்படுத்துவதுடன் பிறரை ஊக்குவிக்கவும் பிறருடன் ஒத்துழைக்கவுந் தூண்டுகின்றன. சனநாயக அடிப்படையிற் செயற்படுகிற அமைப்புக்களில் இவ்வாறான பண்புகளைக் காணலாம். சனநாயகம் என்பது தலைமை, தலைமைத்துவம், கட்டுப்பாடு, பொறுப்புக்கள் என்பன இல்லாத ஒரு அமைப்பை அடையாளப்படுத்துவதல்ல.

தலைமை என்பது ஆதிக்கமல்ல என்று இவ்விடத்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதற்கு நெறிப்படுத்தும் பொறுப்பு உள்ளது. ஆனால் அது கேள்விக்கப்பாற்பட்ட அதிகாரமல்ல. அரச நிருவாகம், ராணுவம் போன்றவற்றிலும் முதலாளிய உற்பத்திநிறுவனங்கள் பெரு வணிக நிறுவனங்கள் போன்றவற்றின் செயற்பாடுகளில் அதிகார அடுக்குக்கள் முக்கியமானவை. எனினும் சமுதாயச் சூழல்

> தலைமை என்பது ஆதிக்கமல்ல என்று இவ்விடத்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதற்கு நெறிப்படுத்தும் பொறுப்பு உள்ளது. ஆனால் அது கேள்விக்கப்பாற்பட்ட அதிகாரமல்ல.

கட்கேற்ப கீழ் மட்டங்கள் மீதான அதிகாரமும் ஆதிக்கமும் வேறுபடுகின்றன. நிலவுடைமைமைச் சிந்தனையின் செல்வாக்குத் தொடருகிற சூழல்களில் அதிகார அடுக்கும் அவை தொடர்பான கெடுபிடிகளும் வலுவாக இருக்கக் காணலாம். இத்தகைய அதிகாரக் கெடுபிடிகள் ஊழியர்களது ஆளுமையின் விருத்திக்குப் பாதகமானவை. சமூக நலன் சார்ந்த பொது அமைப்புக்கள் மேற்குறிப்பிட்ட விதமான அதிகாரத்துவத்தினின்று விடுபட்டு இயங்க இயலும். எனினும் ஒவ்வொரு அமைப்பினதும் சமூக நோக்கிற்கும் இலக்கிற்கும் ஏற்ப அவற்றுள் ஏற்றத்தாழ்வான உறவுகள் பேணப்படுகின்றன. மதம், மரபு போன்ற அக்கறைகள் சார்ந்த அமைப்புக்களில், முக்கியமாகப் பழமை பேணும் நோக்குடையவற்றில் நிலவுடைமைச் சமுதாயச் சிந்தனையின் தாக்கமும் அதனோடு ஒட்டிய ஆளுமை விருத்தியை இவ்வாறான ஏற்றத் தாழ்வுகள் பாதிக்கின்றன. சமூக விடுதலை, சமூக நீதி போன்ற இலக்குக்களை உடைய அமைப்புக்கள் கொள்கை அளவிலேனும் மனித சமத்துவத்தை வற்புறுத்துவதால் அவற்றிலே பங்குபற்றுவோரிடையே சமத்துவமான உறவுகள் பேணப்படும் வாய்ப்புக்கள் அதிகம். எனினும் இவ்வாறான விடயங்களில் ஒரு அமைப்புத் தன்ன[illegible]த் தானே திரும்பத் திரும்ப விசாரணைக்குட்படுத்த ஆயத்தமாக இல்லாத போது சமூகத்தில் நடை முறையிலுள்ள ஏற்றத்தாழ்வான சிந்தனைகளும் நடை முறைகளம் அதனிற் தொற்றுவது தவிர்க்க இயலாதது.

நெகிழ்வான முறையில் பொது நோக்குக்கட்காக உருவாகிற பொது அமைப்புக்கள் உள்ளன. இவை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வளருகிற போது அவற்றினுள் சனநாயகமானதும் மனித சமத்துவத்தையும் சுய மரியாதையையும் கவுரவிக்கிற விதமான நடத்தை தொடர்ச்சியாக வற்புறுத்தப்படாத போது அவை பலவாறான சீரழிவு கட்குட்படலாம். அமைப்பு ஒரு நிறுவனமாகி அதற்குப் பொருள் வசதிகளும் வளங்களும் சமுதாயத்திற் செல்வாக்கும் உயருகிற போது, பணம், புகழ், அதிகாரம் என்பனவற்றாற் கவரப்பட்டவர்கள் அவற்றின்பால் ஈர்க்கப்படுகின்றனர். அதன் விளைவாகப் பலவிதமான ஒழுங்கீனங்களும் அதிகாரப் போட்டியும் குழு மனப்பான்மையும் உருவாகின்றன. அவை உறுப்பினர்களிடையே குறிப்பிட்ட அமைப்பைப் பற்றி மட்டுமன்றிப் பொதுவாகவே இவ்வாறான அமைப்புக்கள் பற்றிய நம்பிக்கையீனத்தையும் உருவாக்குகின்றன.

தன்னார்வ அடிப்படையில் உருவாகின்ற மேற்குறித்தவாறான அமைப்புக்கள் மட்டுமன்றித் தொழில் சார்ந்த பொது நிறுவனங்களிலும் தொழிற்சங்கங்களிலும் அரசியற் கட்சிகளிலும் தனி மனித வாதமும் சுயநலமும் புகழ்நாட்டமும் அமைப்புக்களை மட்டுமன்றி அவற்றின் ஒவ்வொரு உறுப்பினரையும் பாதிக்கக் கூடியன. தொடக்க நிலைகளில் மிகுந்த நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் தொடக்கப்பட்ட நிறுவனங்கள் பல பலவீனப்படவும் சீரழியவும் தனிமனிதவாதம் ஒரு முக்கியமான காரணமாக இருந்து வந்துள்ளது. எனவே தான் பொது அமைப்புக்களைக் கொண்டு நடத்துவதற்கான நெறிப்படுத்தல்கள் தேவைப்படுகின்றன.

எந்நேரத்திலும் ஒரு அமைப்பும் அதிற் தலைமைப் பொறுப்புக்களை ஏற்றோர் மட்டுமன்றிச் செயற்படுகிற ஒவ்வொரு உறுப்பினரும் அமைப்பின் நோக்கம் பற்றி மிகந்த தெளிவுடன் இருப்பதும் அதன் நடத்தை விதிகளை விளங்கி அவற்றைச் செம்மையாகக் கடைப்பிடிப்பதும் முக்கியமானது. குறிப்பாக, சமூகச் சீர்திருத்த, சமூக முன்னேற்ற, சமூக மாற்ற இலக்குக்களை உடைய அமைப்புக்களிடமிருந்து இவற்றுக்கும் மேலாகக் கட்டுப்பாடானதும் பொறுப்புடையதுமான நடத்தையைச் சமூகம் எதிர்பார்க்கிறது.

ஒரு மனிதர் தன்னைச் சமூகத்தின் ஒரு உறுப்பினராகவும் ஒரு தனி மனிதராகவும் உயர்த்திக் கொள்வதில் கட்டுப்பாடானதும் சமூகப் பொறுப்பும் சக மனிதரைத் தனக்குச் சமமாகக் கருதும் மனப்பாங்கும் மிக முக்கியமானவை. இதனை இயலுமாக்க அமைப்பிற்கும் அதில் இணைந்துள்ள ஆட்களுக்குமிடையிலான ஆரோக்கியமான உறவு பெரும் பங்களிக்க இயலும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 20

## முதலாவது பாராளுமன்றம் முதலாளிகளின் கையில்

இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டும் என்கிற எண்ணமோ அரசியல் இலக்கோ இல்லாத சிங்களத், தமிழ்த் தேசியவாதிகள் சுதந்திரத்தின் பின்பான இலங்கைக்குரிய எத்தகைய நோக்கையும் திட்டத்தையும் விருத்தி செய்திருக்க இயலும்? கொலனிய நிருவாகம் இலங்கையை எவ்வாறு நிருவகித்ததோ அவ்வாறே தொடர்ந்தும் நிருவகிப்பதையே அவர்களிடமிருந்து எதிர்பார்த்திருக்க இயலும். அவர்கள் வேண்டியதெல்லாம் ஆட்சி அதிகாரத்திற் தமக்குக் கூடுதலான பங்கு மட்டுமே. நாட்டின் பொருளாதாரம் கொலனிய நிருவாகத்திற்கு முற்றிலும் உட்பட்டதும் தோட்டத்துறை உற்பத்தியையே பிரதான ஏற்றுமதியாகவும் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்ட துமாகத் தொடர்வது பற்றி அவர்கட்கு எவ்விதமான கவலையுமி ல்லை.

ஏனெனில் இலங்கையின் மிக மோசமாகச் சுரண்டப்பட்ட உழைப்பு தோட்டத் தொழிலாளருடையது. மிகக் குறைந்த கூலியை வழங்குவதன் மூலம் பெறப்படும் கொள்ளை லாபம் இயந்திர உற்பத்தித் தொழில் மூலம் திரட்டப்படக் கூடியதை விடப் பெரிதாகவே இருந்து வந்தது. எனவே அதை மாற்ற வேண்டிய தேவை இலங்கையின் புதிய அதிகார வர்க்கத்தினருக்குத் தேவைப்படவில்லை. உணவு இறக்குமதியைக் குறைப்பதற்காக மட்டுமல்லாது தென்னிலங்கையில் காணியற்ற விவசாயிகளின் கிளர்ச்சியைத் தவிர்ப்பதற்கும் விவசாய விருத்தி என்ற பேரில் விவசாயிகளை வடமேல் மாகாணத்தில் மட்டுமன்றி வடக்குக் கிழக்கிலும் குடியேற்றத திட்டங்களின் கீழ் குடியேற்றும் திட்டங்கள் முன்னரே தீட்டப்பட்டு விட்டன. இதன் நீண்டகாலப் பேரினவாத நோக்கங்கள் பற்றி ஒரு இரகசியமும் இல்லை.

அதேவேளை இலங்கையின் தோட்டத்துறை ஏற்றுமதி மூலம் திரட்டப்பட்ட பெருமளவான அந்நியச் செலாவணியை டி.எஸ். சேனநாயக்கவின் அரசாங்கம் பெருமளவிலான உணவுப் பொருள் இறக்குமதி மூலம் வேகமாக விரயஞ் செய்தது. இதன் நோக்கம் 1947ல் எதிர் வரவிருந்த தேர்தலை எப்படியாவது வெல்லுவதாகும். இவ்வாறு விரயமான அந்நியச் செலாவணி நவீன உற்பத்தி உபகரணங்களை வரவழைத்துத் தொழிற் துறையை விருத்தி செய்யப் பயன்பட்டிருந்தால் இலங்கையின் பொருளாதாரம் பெரும் பயனடைந்திருக்கும். ஆனால் அதன் விளைவாக ஒரு வலிய தொழிலாளி வர்க்கத்தின் உருவாக்கத்தை ஏற்க டி.எஸ்.சேனநாயக்க விரும்பியிருக்க மாட்டார்.

பெரும்பாலான பொதுமக்கள் ஒரு தேசியத் தலைவராக ஏற்கப்படாதவரும் அதிகம் மக்கள் செல்வாக்கு இல்லாதவருமான சேனநாயக்க தேர்தலை வெல்வதற்காகப் புதிய தந்திரங்களைக் கையாள முற்பட்டார்.

வி. கந்தசாமி எனும் அரசாங்க எழுதுவினைஞரைப் பலி கொண்ட பொது .வேலை நிறுத்தம் 1947 மே யூன் மாதங்களில் நடைபெற்றது. அதற்கு முந்திய எந்தத் தொழிலாளர் எழுச்சியையும் விட அது வலியதாக அமைந்ததால் கொடுமையாக முறியடிக்கப்பட்டது. அதற்கு மக்கள் மத்தியிலிருந்த பேராதரவு டி.எஸ். சேனநாயக்க முதலான பிற்போக்குவாதத் தலைவர்கட்கும் முதலாளி வர்க்கத்திற்கும் கொலனிய ஆட்சியாளர்கட்கும் ஒரு எச்சரிக்கையாக அமைந்தது. சுதந்திர இலங்கையில் எழுச்சி மிக்க ஒரு தொழிலாளி வர்க்கம் உருவாகுவதை அவர்கள் எல்லாருமே அறவே வெறுத்தனர். எனவே 1947ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இடதுசாரிகளைப் பலவீனப்படுத்துவது அவர்கட்கு முக்கியமானதொரு பணியாகவே அமைந்தது.

இடதுசாரிகட்கு எதிரான பிரசாரத்தில் முக்கியமான ஒரு கருவியாக மதம் பயன்பட்டது. 1947 ஓகஸ்ற் 23 முதல் செப்டெம்பர் 20 வரை நடந்த தேர்தலுக்கான பிரசாரத்தில் "மாக்சிசத் தீயிலிருந்து மதத்தைக் காப்பாற்றுங்கள்" என்ற ஓலம் எழுப்பப்பட்டது. அதைவிடத் தேர்தல்கள் ஒரே நாளில் அன்றி ஒரு மாதகாலமாக நடத்தப்பட்டதால் முதலில் நடந்த தேர்தலின் முடிவுகள் பின்பு நடந்தவற்றின் மீது பாதிப்பை ஏற்படுத்தின.

பொதுத் தேர்தலை மனதிற் கொண்டு உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியில் முதலாளியக் கட்சிகளான தேசிய காங்கிரஸ், சிங்கள மகா சபை, முஸ்லிம் லீக் என்பனவற்றை இணைத்த டி.எஸ்.சேனநாயக்கவால் தமிழ்க் காங்கிரஸை இணைக்க இயலவில்லை. எனினும் சட்டசபைச் காலத்திலிருந்து தேசிய காங்கிரஸில் இருந்த அருணாசலம் மகாதேவா போன்றவர்கள் யூ.என்.பியின் (ஐக்கிய தேசியக் கட்சி) தமிழ்ப் பிரமுகர்களாக இருந்தனர்.

மலையகத் தமிழரின் நடுவே வலிய முதலாளிமார் இருக்கவில்லை என்பதோடு சிங்களத் தேசியவாதிகள் இந்திய வம்சாவழியினரைப் பொதுவாகவே பகைமையுடன் இல்லாத போதும் அக்கறை அல்லாத விதமாகவே நடத்தியதால் இலங்கை இந்திய காங்கிரஸ் அதனுடன் இணையும் வாய்ப்பு இருக்கவில்லை. யூ.என்.பியில் இணைந்த முஸ்லிம் லீக் பெருமளவும் தென்னிலங்கையின் நகர்சார்ந்த முஸ்லிம் வணிகர்களதும் செல்வந்தர்களதும் நலன்களை அடையாளப்படுத்துகிற ஒரு அமைப்பாகவே இருந்து வந்தது.

முதலாளிய நலன்களை அடையாளப்படுத்திய யூ.என்.பிக்குள் பண்டாரநாயக்காவின் அரசியற் போக்கிற்கும் டி.எஸ்.சேனநாயக்கவின் போக்கிற்கும் இடையே வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையில் அவர்கள் ஒரே நிலவுடைமை முதலாளிய வர்க்க நலன்களின் பிரதிநிதிகளாக இருந்ததாலேயே அவர்களால் ஒரே கட்சியில் இணைய முடிந்தது. இந்த வேறுபாடுகள் ஒரு ஆழமான அரசியற் பிளவாக அமைய நாட்டின் அடுத்த சில ஆண்டுகளின் நிகழ்வுகள் காரணமாயின.

எனினும் தென்னிலங்கையின் முதலாளிய – நிலவுடைமை நலன் சார்ந்தோரை அவர்களது வர்க்க நலன்களை முன்னிறுத்தி ஒரு கட்சிக் குடையின் கீழ்க் கொண்டு வந்தது போல உழைக்கும் பொது மக்களின் நலன்களை முன்னிறுத்தக் கூடிய ஒரு பொது முன்னணியை அமைக்க இயலவில்லை. 1939ம் ஆண்டு ஏற்படுத்திய பிளவின் விளைவுகளிலிருந்து இடதுசாரி இயக்கம் மீளவில்லை. சமசமாஜக் கட்சியாகவும் பொல்ஷெவிக் லெனினிஸ்ற் கட்சியாகவும் பிரிந்திருந்த ட்ரொட்ஸ்கிவாதிகளும் கம்யூனிஸ்ற் கட்சியும் மோதற் தவிர்ப்பிற்கு மேலாக தம்மிடையே ஒத்துழைத்ததாகக் கூற இயலாது. எனினும் மக்கள் மத்தியில் இடதுசாரி அனுதாபமுடையோர் இடதுசாரிக் கட்சிக்கே வாக்களித்தனர் எனலாம்.

> **1947ம் ஆண்டின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் இடதுசாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரசாரத்தில் மதம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. "மாக்சிசத்தீயில் இருந்து மதத்தைக் காப்பாற்றுங்கள்" என்றே யூ .என்.பி பிரசாரம் செய்தது.**

பல தனி உறுப்பினர்க் தொகுதிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட யூ.என்.பி.வேட்பாளர்கள் போட்டியிட்டதும் கவனிக்கத் தக்கது. அப்போதைய யூ.என்.பி. தெளிவான தேசியக் கொள்கையோ கட்சிக் கட்டுப்பாடோ இன்றி இடதுசாரி இயக்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் அஞ்சிய முதலாளிய நிலவுடைமை வர்க்கங்கள் அமைத்த ஒரு அவசரக் கூட்டணி என்பது அதற்கான முக்கிய காரணமாகும். எனினும் ஆளும் வர்க்க நலன்கள் அந்த வர்க்கத்தை இறுக்கமாக ஒன்றிணைத்த அளவுக்கு அவற்றக்கு எதிரான சக்திகள் ஒன்றுபடவில்லை என்பது கவனிக்க உகந்தது.

தொண்ணூற்றைந்து ஆசனங்களில் யூ.என்.பி நாற்பத்திரண்டையே பிடித்தது. மற்றவர்கள் ஒன்றுபட்டிருந்தால் யூ.என்.பி. அல்லாத ஒரு அரசாங்கத்தை உருவாக்கி ஆறு நியமன உறுப்பினர் ஆசனங்களையும் யூ.என்.பிக்கு இல்லாது மறுத்திருக்க இயலும். அதற்கான வாய்ப்பு இருந்ததுடன் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது வெற்றியளிக்கவில்லை. எனினும் தெரிவான இருபது சுயேச்சை உறுப்பினர்களையும் பொல்ஷெவிக் லெனினிஸ்ட் கட்சித் தலைவரான கொல்வின் ஆர் டி சில்வா கடுமையாக நிந்தித்துப் பேசியதன் மூலம் அவர்களிற் பலரைத் தன் பக்கம் இழுப்பது யூ.என்.பி தலைவர் சேனநாயக்கவுக்கு எளிதாயிற்று. அதன் விளைவாக சேனநாயக்க தலைமையிலான யூ.என்.பி ஆட்சி உருவானது.

இவ்விடத்து இடதுசாரிகள் பிளவு படாது ஒன்றிணைந்திருந்தால் அவர்களே ஆட்சி அமைத்திருக்க முடியும் என்கிறவிதமான வாதங்களைப் பற்றிச் சிறிது கூற வேண்டும்.

இடதுசாரி இயக்கத்தின் செயற்பாடுகள் மேல்மாகாணம், தென்மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியவற்றில் மிக வலுவாக இருந்தன. வடக்கில் இடதுசாரிகள் தொழிற்சங்கத் துறையிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் முன்னெடுத்து வந்த அரசியற் பணிகளால் ஒரு வலுவான தளம் இருந்த போதும் அது தேர்தல் அரசியலில் ஆசனங்களை வென்று தருகிற விதமான வலிமையுடையதல்ல. கிழக்கில் தமிழ்க் காங்கிரஸ் திருகோணமலைத் தொகுதியில் மட்டுமே போட்டியிட்டது. அம்பாறையை உள்ளடக்கிய மட்டக்களப்பு மாவட்டத்தில் அது போட்டியிடவேயில்லை. அம்மாகாணத்தில் தொழில் விருத்தியின்மை காரணமாகவும் விவசாய உற்பத்தியையே முதன்மையாகக் கொண்ட சமுதாய உற்பத்தி உறவுகளின் முரண்பாடுகள் கூர்மையடையாததாலும் இடதுசாரி இயக்கம் நகர் சார்ந்த ஒன்றாகவே இருந்தது. அதன் வலிமை எவ்வகையிலும் யாழ்ப்பாணக் குடா நாட்டுடன் ஒப்பிடத்தக்கதல்ல. பிற மாகாணங்களில் விவசாயிகள் நடுவே இடதுசாரி இயக்கம் போதியளவு வளராத நிலையில் மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணத் தோட்டப் பகுதிகளை விட மற்றைய பகுதிகளில் இடதுசாரிகளது செயற்பாடு வலுவானது என்று கூற இயலாது.

பெரும்பாலும் தோட்டத் தொழிலாளரான மலையகத் தமிழரின் பிரதிநிதிகளாக இலங்கை இந்திய காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏழுபேர் தெரிவாயினர். மலையகத் தமிழரது ஆதரவுடனேயே மலையகத்தில் இடதுசாரிகள் சில ஆசனங்களைக் கைப்பற்றினர்.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்து இடதுசாரிகளை பாராளுமன்றம் தொழிற்சங்கத் துறை ஆகிய இரண்டு முறைகளிற் பலவீனப்படுத்தவும் சிங்களப் பேரினவாதப் பெரும்பான்மை அரசியலை வலுப்படுத்தவும் டி.எஸ்.சேனநாயக்க துரிதமாகச் செயற்பட்டார்.

1947 தேர்தல் நமக்குத் தந்த பாடங்களைப் பிற்போக்குவாதிகள் ஓரளவு சரியாகவே கற்றுக் கொண்டனர். ஆனால் இடதுசாரிகளோ தமக்குரிய பல பாடங்களை மிகத் தவறாகவே கற்றனர் என்று கூறும் விதமாகவே அடுத்து வந்த ஆண்டுகளின் அரசியல் நிகழ்வுகள் அமைந்தன எனலாம்.

## மட்டக்களப்பிற் சாதியம் பற்றிய ஒரு நினைவூட்டல்

**மட்டக்களப்பு மருத்துவச் சமூகம் (பேசப்படாத வரலாறு). செபஸ்தியான் கவுரியல். மட்டக்களப்பு அபிவிருத்திச் சங்கம், 205 திருகோணமலை வீதி, மட்டக்களப்பு, 2009ஏப்ரல்.ரூ. 200.00**

இந்த நூல் தமிழ்த் தேசியவாதிகள் இன்னமும் பூசி மெழுக முயலுகிற ஒரு உண்மையின் முக்கியமான ஒரு பக்கத்தை வெளிப்படுத்துகிறது. சாதிப்பாகுபாடு குறைவாக உள்ள மட்டக்களப்பு மண்ணிலே கூட எவ்வாறு சாதியமும் சாதி ஆதிக்கமும் சாதியாற் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரை எழ விடாமல் மறித்து வந்துள்ளது என்பதையும் இன்றளவும் சாதியச் சிந்தனை தமிழரிடையே தொடருவதையும் நமக்கு எடுத்துரைக்கிறது.

கல்வியும் கடும் உழைப்பும் நல்லெண்ணங் கொண்டவர்களது உதவியும் மருத்துவர் என அறியப்படும் சிகையலங்காரத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தினரின் எழுச்சிக்கு உதவியுள்ளன என்பது நூலிற் பல இடங்களிலும் தெளிவாக்கப்பட்டுள்ளது. சாதிகளை ஏற்காத கிறிஸ்துவ மதத்தாலும் சாதியத்தை எதிர்த்துப் போராட இயலாததோடு அதனோடு ஒத்தியங்க வேண்டி இருந்தது என்ற உண்மையும் மருத்துவரின் இன்றைய சமூக மேம்பாடு தொடர்ச்சியாகப் போராடியே வெல்லப்பட்டது என்ற உண்மையும் இந்த நூல் கூறும் முக்கியமான உண்மைகள்.

மருத்துவ சாதியின் தோற்றமும் அதன் தோற்றுவாயும் பற்றிய நூலாசிரியனின் கருத்துக்கள் அனைத்துமே சரியானவையாகத் தெரியவில்லை. அகச் சார்பான சிந்தனைகள் பல அவற்றில் உள்ளன. எனினும் இப்படிப்பட்ட வம்ச வரலாறுகள் எல்லாச் சாதியினரிடையிலும் உள்ளன. அதற்கான அடிப்படையிலான காரணம் நமது சமூக அமைப்பில் உடல் உழைப்பு போற்றுதற்குரியதாக இல்லாமை. நிலவுடைமைச் சமூகத்தின் உடல் உழைப்பும் உயர்வு தாழ்வானதாக மேலுங் கூறுபோடப் பட்டமையும் சுத்தம் - அசுத்தம் என்கிற அடிப்படையில் தீண்டாமை மனிதரைப் பிரித்து வைத்தமையும் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்த சமூகத்தினரைத் தமது தொழிலையும் பிறப்பையும் இழியனவாகக் கொள்ளுமாறு வற்புறுத்தின. அதன் எதிர்வினையாகவே ஒவ்வொரு சாதியும் தன்னை உயர்த்திக் கொள்ளுகிற விதமாகத் தனது வரலாற்றைக் கூற முற்படுகிறது. இதற்கு உயர் சாதியினர் எனப்பட்டோரும் விலக்கல்ல.

எல்லாச் சாதிகளும் சாதிக் கலப்புக்கும் இனக் கலப்புக்கும் உட்பட்டனவே. இல்லாவிட்டாற் கரிய நிறத்தவர்களான பிராமணர்கள் நம்மிடையே இருக்க இயலாது. ஒரே சாதிக்குள் உள்ள உருவ வேறுபாடுகள் சாதி, இனக் கலப்புக்களின் விளைவானவையே. இன்றுள்ள எல்லாத் தொழில்களும் தொன்றுதொட்டு இருந்து வந்தவையல்ல. இடைக்காலத்திற் தோன்றிய சாதிகள் உள்ளன. தமது சமூகப் பணிகளில் மாறிய சாதிகள் உள்ளன. பிற சாதிகளுட் சங்கமித்தவை உள்ளன. பொருள்வள வேறுபாட்டால் உயர்ந்ததும தாழ்ந்ததுமாகப் பிரிந்த சாதிகள் உள்ளன. இது இன்றுந் தொடர்கிறது.




எல்லா மக்களுக்கும் சாதி, சமய, இன, மொழி, பிரதேச வேறுபாடின்றிச் சமமான வாய்ப்புக்கள் உள்ள சமூகம் ஒன்றின் கீழேயே சாதி வேறுபாடுகள் மறையும். சாதியை ஒழிப்பதானால் சாதிகள் இல்லை என்று சொன்னாற் போதாது. சாதியாற் பிற்படுத்தப்பட்டோரை உயர்த்துவதற்குத் திட்டமிட்ட முறையிற் காரியங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும். மறைவாக நடக்கும் சாதிப் பாகுபாடான செயல்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். அவை எதிர்க்கப்பட வேண்டும்.

இந்த நூல் போன்று இன்னும் பல பயனுள்ள நூல்களின் வரவுக்கான தேவை உள்ளது. நூலாசிரியரின் முயற்சி மெச்சத் தக்கது. இந்நூல் பலரதுங் கைகளுக்குச் சென்று பரவலான வாசிப்பைப் பெற வேண்டும்.

- திருமுகன் -

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




# "இப்படி வாழ்வதை விட இறப்பது மேலானது"
# முட்கம்பி வேலிகளுக்குப் பின்னாலிருந்து வந்த குரல்கள்

-தயா-

புதிய-ஜனநாயக கட்சியின் குழுவினர் கொழும்பில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் குழுவினரைச் சந்தித்து தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் இடம்பெயர்க்கப்பட்டு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் மீள் குடியேற்றம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இது தொடர்பாக புதிய-ஜனநாயக கட்சி முன்வைத்துள்ள 10 அம்ச கோரிக்கைகள் தொடர்பாக இடதுசாரி, ஜனநாயக



கட்சிகளிடையே பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகிறது.

இதில் ஒரு சந்திப்பாகவே புதிய-ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல், தேசிய அமைப்பாளர் தோழர் இ.தம்பையா, அரசியல் குழு உறுப்பினர் தோழர் சோ.தேவராஜா ஆகியோர் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் தோழர் வாசுதேவ நாணயக்கார அரசியல்குழு உறுப்பினர் தோழர் திலகசிறி ஆகியோரைக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர். அகதிகளாக இருக்கும் மூன்று லட்சம் மக்களுக்கு வேண்டிய உடனடி வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும், அவர்களை விரைவில் மீளக் குடியேற்றவதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஜனநாயக இடதுசாரி முன்னணி மேற்கொண்ட அழுத்தங்கள், விடுத்த கோரிக்கைகள் பற்றி தோழர் வாசு எடுத்துரைத்தார்.

புதிய-ஜனநாயக கட்சி முன்வைத்துள்ள 10 அம்ச கோரிக்கைகளில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண் டிய நடவடிக்கைககள் பற்றி ஜனநாயக இடதுசாரி முன்னணி உடனடியாக கூடுதல் கவனம் செலுத்துவதாக தெரிவித்தார். இவ்விடயங்கள் தொடர்பாக பொது இணக்கப்பாட்டை எய்துவதற்கும் அரசியல் கட்சிகளுடனும் வெகுஜன அமைப்புக்களுடனும் கலந்துரையாட வேண்டியவ வாய்ப்பு புதிய-ஜனநாயக கட்சிக்கே இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரண்டு கட்சிகளும் தனித்தனியாகவும் கூட்டாகவும் இடம்பெயர்ந்துள்ளவர்களின் நலன்புரி விடயங்களிற்காகவும் மீளக் குடியமர்த்தப்படுவதற்காகவும், தொடர்ந்து வேலைகளை முன்னெடுப்பதெனவும், தொடர்ச்சியாக கலந்துரையாடி நிலைமைகளை மதிப்பிடுவதெனவும் அச்சந்திப்பின் முடிவில் இணக்கம் காணப்பட்டது.

## முகாம்கள் பற்றி சில தகவல்கள்

அகதிகள் முகாம்களில் இருக்கும் சிறுவர்களில் ஐந்து ஆயிரம் பேர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக இதுவரை இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரம் பேரின் நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும் சிகிச்சை அளிக்கப்பட்டாலும் பயனளிக்கப் போவதில்லை என்றும் அறிய முடிகிறது. 4 ஆயிரம் பேருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டால் அவர்களை காப்பாற்ற முடியும் என்றும் கூறப்படுகிறது.

சிறுவர்கள், வயதானவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் போன்றோர் முகாம்களில் போதிய உணவு, நீர், மருத்துவ, மலசலகூட வசதிகளின்றி கஷ்டப்படுகின்றனர்.

முகாம்களில் தொற்றுநோய்கள் பரவியுள்ளதாகவும் அறிய முடிகிறது. அம்மைநோய், மூளைக்காய்ச்சல் போன்றனவும் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோரைப் பிரிந்து, அல்லது இழந்திருப்பவர்கள் குடும்பங்கள் பிரிந்திருப்பது பற்றியும், முகாம்களிலுள்ளவர்கள் இன்னும் புலனாய்வுக்குட்படுத்தப்படுவதாகவும் அவை பற்றிய விபரங்களும், சந்தேகிக்கப்படுபவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றியும் விடுதலைப் புலி இயக்க உறுப்பினர்களெனச் சரணடைந்ததாகச் சொல்லப்படுகின்றவர்கள் பற்றிய விபரங்களும் அவர்கள் மீது மேற்கொள்ளப்டும் நடவடிக்கைகள் பற்றியும் வெளிப்படையான தன்மைகள் இல்லாதிருப்பது கவனத்திற் குரியதாகிறது. அங்கு பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்குள்ளாவதாக வெளி வரும் தகவல்கள் பற்றிய விசாரணைகள் அவசியம்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் பற்றிய சர்வதேச சட்டங்களின் படியும் உள்நாட்டு சட்டங்களின்படியும் இடம்பெயர்ந்தவர்களுக்கான வசதிகள் வழங்கப்பட வேண்டியதுடன், அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் கூடிய விரைவில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியது அவசிய மாகும். அவர்கள் மீளக் குடியமர்த்தப்படும் வரை அவர்கள் சுதந்திரமாக நடமாடவும், உறவினர்கள் நண்பர்கள் அவர்களைச் சந்திக்கவும் இடமளிக்கப்பட் வேண்டும்.

அவர்கள் தற்போது செடி கொடிகள் மரங்கள் எதுவும் இல்லாத வெட்டை வெளியில் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். அதிகவெப்பம், அதிகவேகமான விஷக் காற்று போன்றவற்றால் பாதிக்கப்படுவதுடன் போதிய மருத்துவ, நீர், உணவு வசதியின்றி கஷ்டப்படுகின்றனர். அவர்களின் உறவினர்கள் நண்பர்கள் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் முட்கம்பி வேலிக்கு வெளியிலிருந்தே பார்க்க முடிகிறது. அவர்களுக்கு விளக்கமறியல் கைதிகள், தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு இருக்கும் உரிமைகளும் சலுகைகளும் கூட இல்லை. உறவினர்களை நண்பர்களைச் சந்திக்கும் கைதிகளின் உரிமைகள் கூட மக்களுக்கு இல்லை.

## அரசாங்கத்தின் பொறுப்பு

எனவே அவர்களின் வசதியீனங்கள் கஷ்டங்கள் பற்றி முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சர்வதேச நிறுவனங்களின் தவறான நடவடிக்கைகளே அதற்கு காரணமெனக் கூறியுள்ளார். இவ்வேளையில் அகதிகள் முகாம்களில் சர்வதேச நிறுவனங்கள் அவற்றின் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. குறிப்பாக வடக்கிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் காரியாலயங்கள் மூடப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இவ்வாறான சூழ்நிலையில் சர்வதேச நிறுவனங்களை நம்பி இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட முடியாது என்பது தெளிவாகிறது.

இடம்பெயர்ந்தவர்களின் விடயத்தில் காலம் போகச் சரிவரும் என்று சாக்குபோக்கு சொல்லாமல் அரசாங்கம் திட்டமிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முல்லைத்தீவு நகரை அதி பாதுகாப்பு வலயமாக்கியமை, வடமாகாணத்தின் தலைநகராக மாங்குளத்தைப் பிரகடனப்படுத்துவது போன்ற அரசு யந்திரத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதில் கொடுக்கப்படவில்லை. இதனால் அம் மக்கள் முடிவில்லாத பாரிய கஷ்டங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றனர்.

இவர்களின் அவலங்கள் வெறும் பத்திரிகை அறிக்கைகளுடனும் தேர்தல் வாக்குறுதிகளுடனும் மட்டுப்படுத்தப்படாது, அவற்றை போக்குவதற்கு திட்டமிட்ட சரியான நடவடிக்கைகள் அவசியம். அவர்களை தண்டிப்பதான நடவடிக்கைகளையோ அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றங்களை செய்வதையோ ஏற்றுக் கொள்ள முடியாது.

வடக்கில் முகாம்களில் இருக்கும் தமிழ் மக்களின் அவலங்கள் பற்றி கவலை கொள்வோர் தமிழ் மக்கள் வரலாற்றில் என்றுமில்லாதவாறு தண்டிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் மரணத்தை விட மிகவும் மோசமான துன்பத்தில் இருப்பதாகவும் கூறுகின்றனர்.

இந்நிலைமையை போக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சாரும். யுத்த வெற்றிக் களிப்பில் 'யுத்தம் என்றால் இப்படித்தான் இருக்கும்' என்றும் கூறும் பொறுப்பற்ற பிரகடனங்களை தவிர்க்க வேண்டும்.



# புதிய-ஜனநாயக கட்சியின் 31வது ஆண்டு (1978 – 2009)

கடந்த யூலை 03ம் திகதி புதிய-ஜனநாயக கட்சி தனது 31வது வருடத்தினுள் காலடி எடுத்து வைத்துள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளில் இடம்பெற்று வந்துள்ள பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம்- இன விடுதலைப் போராட்டம் என்பனவற்றின் மத்தியில் கட்சி தனது மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை நிலைப்பாட்டில் உறுதியாகவும் தனித்துவத்துடனும் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் பக்கத்தில் நின்று போராடி வந்துள்ளது. யாழ்ப்பாணம் மலையகம் வவுனியா கொழும்பு பிரதேசங்களை மையப்படு த்தியும் ஏனைய பிரதேசங்களை உள்ளடக்கியும் கட்சி தனது வேலைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளது. மலையகத்தில் அரசியல் வேலைகளையும் வர்க்க இன ஒடுக்கு முறைகளை எதிர்த்த வெகுஜன போராட்டங்களையும் முன்னெடுத்தது. கொழும்பில் சிங்கள மக்கள் மத்தியிலான இடதுசாரிகள் ஜனநாயக சக்திகளோடு இணைந்து பல்வேறு இயக்கங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்து வற்றுள்ளது.

இம் முப்பது ஆண்டுகளில் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறைகளுக்கு முகங் கொடுத்து வந்த அதேவேளை தமிழ்த் தேசியவாத இயக்கங்களின் ஆயுத மிரட்டல்கள் கொலை முயற்சிகள் போன்றவற்றுக்கும் முகங் கொடுத்து வந்துள்ளது. அரசாங்கத்தின் தாக்குதல்கள் சிறை சித்திரவதைகளை எதிர்கொண்ட கட்சி தமிழ்த் தேசியவாத ஆயுதம் தாங்கிய இயக்கங்களின் கொலை வெறிக்கு ஒரு கட்சித் தோழரை இழக்க வேண்டி ஏற்பட்டது. அத்துடன் அவ்வப்போது கொலை முயற்சிகளில் இருந்தும் கட்சித் தோழர்கள் தவறிக் கொள்ளவும் நேர்ந்தது. இவ்வாறு பன்முக நெருக்கடிகள் சவால்கள், துன்புறுத்தல்கள் மத்தியில் கட்சியும் தோழர்களும் புரட்சிகர இலட்சிய உணர்வுடன் செயற்பட்டு வந்துள்ளனர். இன்றும் சிறையில் மூன்று கட்சியின் முன்னணி தோழர்கள் பொய்க் குற்றச்சாட்டின் மீது அடைக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இரண்டு வருட தடுப்புச் சிறைக்குப் பின்பு ஐந்து மாதங்களிற்கு முன்பு மூன்று தோழர்கள் விடுதலையாகினர். மேலும் சில தோழர்கள் அடையாளம் தெரிந்தும் தெரியாததுமானவர்களின் துப்பாக்கி முனையில் இருந்து மயிரிழையில் தவறிக் கொண்டனர். அடிக்கடி தலைமைத் தோழர்கள் தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்டனர். இத்தனைக்கும் மத்தியிலும் கட்சியும் தலைமையும் தோழர்களும் எவரிடமும் சமரசத்திற்கோ கொள்கை நடைமுறை விட்டுக் கொடுப்பிற்கோ சென்றதில்லை.

அதேவேளை கோட்பாட்டு நிலையிலும் கருத்தியல் கொள்கை வகுப்பிலும் இலங்கையின் சமூக அமைப்புச் சூழலை யதார்த்த ரீதியிலும் தூர நோக்கிலும் பகுத்து நோக்கி தனது வர்க்கநிலைப்பாட்டை முன்வைத்து வந்துள்ளது. அடிப்படை முரண்பாடு வர்க்க முரண்பாடு என்பதையும் அதற்கான வர்க்க சக்திகளை அடையாளப்படுத்தியும் வந்துள்ளது. அதேவேளை இன முரண்பாட்டினதும் இன ஒடுக்கு முறையினதும் வரலாற்று வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டு அது பிரதான முரண்பாடாகியுள்ளமையை கட்சி சுட்டிக் காட்டி வந்துள்ளது.

மேலும் தேசிய இனப் பிரச்சினையானது இன மத பிரதேச அடிப்படையில் ஒடுக்கப்படும் தமிழ் முஸ்லிம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்களினதும் ஏனைய சிறுபான்மை சமூகங்களினதும் பிரச்சினையாக நீடித்து வருவதைக் கட்சி அடையாளப்படுத்தி தெளிவாக்கியது. அதற்கான தீர்வு இராணுவத் தீர்வு அல்ல என்றும் அத்தகைய தீர்வால் தேசிய இனங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்றும் நியாயமான அரசியல் தீர்வே அதி முக்கியம் என்பதையும் வலியுறுத்தி வந்தது. சுயநிர்ணய உரிமை பற்றிய விடயத்தில் கட்சி தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தனது கொள்கையை முன் வைத்தது. தேசிய இனங்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சியும் சமகால யதார்த்த நிலைமைகளின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையானது பிரயோகம் செய்யப்படுவதைக் கட்சி சுட்டிக் காட்டி வந்துள்ளது. வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் அதிக பட்ச சுயாட்சியே நியாயமான தீர்வாக அமைய முடியும். முஸ்லிம் மக்களுக்கானதும் மலையகத் தமிழ் மக்களுக்கானதுமான தீர்வும் பொருத்தமான சுயாட்சி ரீதியில் வழங்கப்படுவதை கட்சி வற்புறுத்தி வந்துள்ளது. நாட்டை பிரிப்பது அல்லது அதனைச் சாத்தியமாக்குவது ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளுக்கு உதவக் கூடியதாகும் என்பதையும் கட்சி தொடர்ந்து கூறி வந்துள்ளது.

பிரிவினை வழியிலான தமிழீழக் கோரிக்கை தவறானதும் சாத்தியமற்றதும் என்பதை கட்சி ஆரம்பம் தொட்டே சுட்டிக் காட்டி வந்தது. கண் மூடித்தனமானதும் வெகுஜனப் பாதையில் இருந்து அந்நியப்பட்டதுமான இன விடுதலைப் போராட்டத்தின் தவறான வீரதீர ஆயுத நடவடிக்கைகள் மோசனமான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் என்பதையும் கட்சி எச்சரித்து வந்துள்ளது. ஒரு தரப்பு இந்திய பிராந்திய மேலாதிக்கத்தையும் மறுதரப்பு அமெரிக்க-மேற்குலக உலக மேலாதிக்க சக்திகளையும் நம்பி ஏமாந்த நிலைக்கு ஆளாயினர். இதன் பாரிய விளைவாக தமிழ் மக்கள் வரலாறு காணாத உயிர் உடைமை அழிவுகளை எதிர் கொண்டதுடன் மூன்று லட் சம் மக்கள் பேரினவாத ஆட்சியின் கைதிகளாகி அகதி முகாம்களில் அடைபட்டு அவல வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். இதற்குப் பதில் கூற வேண்டியவர்கள் புலிகள் இயக்கம் மட்டுமன்றி அனைத்து தமிழ்த் தேசியவாதத் தலைமைகளுமாகும்.

இத்தலைமைகள் தமது தவறுகளை திருத்திச் சரியான அரசியற் தடத்திற்கு வரப் போவதில்லை. அதற்கு அவர்களது உயர்வர்க்க மேட்டுக்குடி நிலைப்பாடும் இந்திய அமெரிக்க மேற்குலக விசு வாசமும் இடம் தரப் போவதில்லை. அதனால் புதிய ஏமாற்றுத் தனங்களுடன் தமிழ் மக்கள் மத்தியில் வரவே செய்வார்கள். பாராளுமன்றத்திலும் ஏனைய சபைகளிலும் தேர்தலில் நிற்பதிலும் அதனை ஜனநாயகம் என்று கூறிப் பதவிச் சுகம் காண நிற்பதும் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய தமிழத் தேசியவாதத் தலைமைகளின் பிற்போக்குத் தனங்களுக்கும் ஏமாற்றுக்களுக்கும் அப்பால் தமிழ் மக்கள் தூர நோக்கிலான அரசியல் சிந்தனைக்கும் தெளிவிற்கும் வரவேண்டிய காலகட்டம் வந்துள்ளது. அதற்கான பரந்துபட்ட விவாதம் முன்னெடுக்கப்படல் வேண்டும். சாதாரண மக்கள் வெறுமனே மௌனமாகவோ யாவற்றுக்கும் தலையாட்டி வெறும் இன மொழி உணர்ச்சிகளுக்கோ அடிமையாகக் கூடாது. ஏன் எதற்காக எப்படி என்ற கேள்விகளை துணிவுடன் முன்வைத்து சரியான விடைகளைப் பெற்று புதிய அரசியல் பயணம் தொடங்கப்படல் வேண்டும். அது பரந்துபட்ட தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய தேசிய இனங்களினதும் அடிப்படை நலன்களையும் வாழ்வுரிமைகளையும் வற்புறுத்துவதாக அமைய வேண்டும்.

அத்தகைய சூழலில் புதிய-ஜனநாயக கட்சி தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய தேசிய இனங்களினதும் வெகுஜனமாக்கப்பட்ட சரியான கொள்கைகளோடும் போராட்டங்களோடும் கைகோர்த்து செல்வதில் எவ்வித தயக்கத்தையும் காட்ட மாட்டாது. மக்கள் போராட்டங்களுடன் மாக்சிச லெனினிசவாதிகளாகி நாம் என்றும் இணைந்து முன் செல்வோம். அதுவே நமது கடந்த கால த்தின் வரலாறாகும். எதிர்காலத்திலும் அவ்வாறே செயல்படுவோம். தமிழ் மக்கள் குறிப்பாக உழைக்கும் மக்கள் இன்றைய நிலையில் ஆழ்ந்து சிந்தித்து எதிர்காலத்திற்கான பாதையைத் தீர்மானிக்க வேண்டும் எனப் புதிய ஜனநாயக கட்சி வேண்டிக் கொள்கிறது.

புதிய - ஜனநாயக கட்சி மத்திய குழு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

ஒரு பார்வை

- வெகுஜனன் -

கடந்த மே மாதம் 18ஆம் திகதி முல்லைத்தீவின் இறுதிப் போர்க்களத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்றகடித்து விட்டதையும் அத்துடன் யுத்தம் முடிவுக்கு வந்ததையும் இலங்கை இராணுவம் அறிவித்துக் கொண்டது. அதற்கு முதல் நாள் தமது துப்பாக்கிகளை மௌனிக்கச் செய்து விட்டதாக அமெரிக்காவின் ஒபாமா நிர்வாகத்திற்கும் மேற்குலகிற்கும் புலிகள் இயக்கம் அறிவித்து தமது தோல்வியை ஒப்புக் கொண்டது. அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் ஏனைய உயர் மட்டத் தலைவர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருப்பதையும் இராணுவம் உறுதிப்படுத்திக் கொண்டது. மே மாதம் 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் நாட்டு மக்களுக்கு சிறப்பு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முப்பது வருட கால யுத்தம் முடிவுற்றுள்ளதையும் "பயங்கரவாதம்" அழிக்கப்பட்டிருப்பதையும் உத்தியோகபூர்வமாகப் பிரகடனம் செய்து கொண்டார். இது கடந்த மூன்று தசாப்த கால யுத்தம் – போராட்டம் என்பதில் ஒரு பாரிய திருப்புமுனைக்கு வழிவகுத்தது.

தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் ஒரே வயதாகும். 1976இல் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை வென்றெடுக்க ஆயுதம் தூக்கிய புலிகள் இயக்கமும் அதன் போராட்டமும் 33 வருடங்களுக்குப் பின்பு முல்லைத்தீவில் முடிவுக்கு வந்துள்ளது. இதுவரை ஈழப் போர் என அவர்களால் அழைக்கப்பட்டு வந்த மூன்று கட்டப் போர்களில் படைவலுவின் மூலமும் உயிர்ப் பலிகள் ஊடாகவும் தம்மைப் பாதுகாத்து நிலைநிறுத்தி வந்த புலிகள் இயக்கம் நாலாம் கட்ட ஈழப் போர் என்ற முல்லைத்தீவுச் சமரில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்று பெரும் எழுச்சி முழக்கங்களுடன் வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தமிழீழத்திற்கான தீர்மானம் வரலாறு காணாத மக்கள் அழிவுகளுடன் முல்லைத்தீவில் சோகமான முடிவுக்கு வந்துள்ளது. முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பதாக முடியும் என்ற வரலாற்றின் பாடத்தையும் இத் தோல்வியின் போது காண முடிந்தது. மேலும் 1975ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தொகுதியின் பொன்னாலைக் கடலோரம் அமைந்துள்ள கிருஷ்ணன் கோவில் முன்றலில் வைத்து அன்றைய யாழ் மாநகர சபையின் முதல்வர் அல்பிரட் துரையப்பா படுகொலையாக முதலாவது வேட்டு தீர்க்கப்பட்டது. வரலாற்று விநோதம் என்னவெனில் 34 வருடங்களுக்குப் பின் அந்த முதல் வேட்டைத் தீர்த்தவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் முல்லைத்தீவின் நந்திக் கடலோரம் உள்ள முள்ளிவாய்க்காலில் இராணுவ எதிர்வேட்டின் மூலம் கொல்லப்பட்டிருப்பது தான். படுகொலையில் ஆரம்பித்து படுகொலைகளின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற தாரக மந்திரம் தாங்கிய அவர்களின் தமிழ் ஈழத்திற்கான போர் மக்களையும் அழித்து தங்களையும் அழித்து தமிழ்த் தேசிய இனத்தை அந்தகார இருள் சூழ்ந்த அரசியல் வனாந்தரத்தில் விட்டுள்ள அவலத்தையே இன்று காண முடிகின்றது.



இத்தகைய அவலங்களும் அந்தகார அரசியல் சூழல்களும் உருவாகியுள்ள இன்றைய நிலையில் தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்காலம் பற்றிய தூர நோக்கு மிக்க அரசியல் பாதையும் அதற்கான பயணத் திசையும் தேர்ந்தெடுக்கப்படுவது அவசியமாகின்றது. அதற்கான முன்தேவையாக அமைவது கடந்த காலம் பற்றிய மறுமதிப்பீடும் சுயவிமர்சனமுமாகும். கடந்த காலம் பற்றிய சமகால மதிப்பீடும் விமர்சனமும் தான் எதிர்காலத்திற்கு உரிய தெளிவான பாதையைக் காட்டவல்லன. அவ்வாறு நோக்கும் போது கடந்த முப்பது வருட கால இனஒடுக்குமுறை யுத்தமும் அதற்கெதிரான தமிழ்த்தேசியவாத நிலை நின்று முன்னெடுக்கப்பட்ட இன விடுதலைப் போராட்டமும் பற்றிய அரசியல் விமர்சனத்தை மாக்சிச லெனினிசக் கண்ணோட்டத்தில் அணுகி ஆராய வேண்டியுள்ளது. இத்தகைய கண்ணோட்ட அணுகுமுறை இப்போது தான் முன் வைக்கப்படும் ஒன்றல்ல. கடந்த முப்பது வருடங்களுக்கு மேலான காலப் பகுதியில் மாக்சிச லெனினிசவாதிகளாகிய நாம் எமது கட்சியின் மூலம் இப்போராட்டம் பற்றியும் அதற்கான எண்ணக்கரு – கருத்தியல் - கொள்கை – நடைமுறை – போராட்ட தந்தி ரோபாயம் போன்றவற்றில் எமது நிலைப்பாட்டையும் விமர்சனங் களையும் அவ்வப்போது முன்வைத்து வந்திருக்கிறோம். யுத்தம் - போராட்டம் என்பதில் நாம் எப்போதும் அடக்கி ஆளும் வர்க்கத்தின் பக்கத்தில் அன்றி ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் பக்கத்திலேயே உறுதியாக நின்று வந்திருக்கின்றோம். அதேவேளை தவறான பாதையில் செயல்பட்டு வந்த அல்லது தமது நிலைப்பாட்டை மாற்றி ஆளும் வர்க்க சக்திகளுடன் இணைந்து நின்ற எந்தவொரு இயக்கம், கட்சி, குழுவுடனும் சேர்ந்து நின்றதுமில்லை, பின்னால் இழுபட்டுச் சென்றதுமில்லை. எமது மாக்சிச லெனினிச மா ஓ சேதுங் சிந்தனை நிலைப்பாட்டின் தனித்துவத்துடன் மக்கள் மத்தியில் செயலாற்றி வந்திருக்கின்றோம். அதன் காரணமாக கடந்த முப்பது வருட காலத்தில் பேரினவாத ஆளும் வர்க்க அரசாங்கப் பக்கத் திலிருந்தும் தமிழ்த் தீவிரவாத இயக்கங்களிடமிருந்தும் பல்வேறு பட்ட நெருக்கடிகள் அச்சுறுத்தல்கள் இழப்புகள் சிறை சித்திர வதைகள் போன்றனவற்றை எமது கட்சி அனுபவித்தும் வந்துள்ளது. எனவே தமிழ் மக்கள் மத்தியில் நாம் எவற்றைச் சாத்தியமற்றதும் தவறானவைகள் என்றும் மக்களுக்கு விரோதமானவைகள் என்றும் கூறி வந்தோமோ அவை இன்று மக்கள் பேரழிவுகளுக்கு மத்தியில் நடைமுறை நிரூபணமாகி உள்ளன. இது மகிழ்ச்சிக்குரிய ஒன்றல்ல. மக்களுக்கும் அவர்கள் மத்தியில் உள்ள நேர்மையான அரசியல் செய்வோருக்கும் வேதனை தருவதாகும். அதற்காக அழுது புலம்பியோ அல்லது வெறுமனே குற்றம் சுமத்தியோ மட்டும் இருந்து விட முடியாது. ஒன்றுக்குப் பதிலாக மற்றொரு தமிழ்த் தேசியவாத ஆதிக்க அரசியலை நிலைநிறுத்தவும் முடியாது. நியாயப்படுத்தி முன்செல்லவும் இயலாது.

ஆதலால் கடந்த முப்பது வருட யுத்த வளர்ச்சிப் போக்கில் மூன்று வர்க்க அரசியல் ஆதிக்க சக்திகள் பிரதான பங்காற்றி வந்துள்ளன என்பது தெளிவானதாகும். ஒன்று, பௌத்த சிங்கள பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகள். இரண்டாவது, பழைமைவாத தமிழ்க் குறுந்தேசியவாத ஆதிக்க அரசியல் சக்திகள். மூன்றாவது, இந்திய – அமெரிக்க – மேற்குலக மேலாதிக்க சக்திகள். இம் மூன்றில் முதலாவதையும் மூன்றாவதையும் பற்றிய பன்முகப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டு அவ்வப்போது மாக்சிச லெனினிசக் கண்ணோட்டக் கருத்துகளாகவும் விமர்சனங்களாகவும் முன்வைத்து வந்துள்ளோம். இரண்டாவது விடயமான பழைமை வாதத் தமிழ்க் குறுந்தேசியவாத நிலைப்பாடு பற்றிக் கூறிவந்த அதே வேளை தமிழீழக் கோரிக்கை மீதான ஆயுத நடவடிக்கைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்படுவது இன்றைய சூழலில் அவசியமாகிறது.


இன்று இருபது அல்லது முப்பது வயதினில் உள்ள எந்தவொரு தமிழ் இளைஞனுக்கோ அன்றி யுவதிக்கோ தமிழீழக் கோரிக்கை உருவாகிய சூழல் பற்றியும் அல்லது அதன் நோக்கம் பற்றியும் மட்டுமன்றி தமிழர் மத்தியில் அதனை முன் வைத்த வர்க்க சக்திகள் பற்றியும் அறிந்திருக்க நியாயமில்லை. "தந்தைசெல்வா அண்ணன் அமிர்தலிங்கம், தம்பி பிரபாகரன் என்ற தமிழ்த் தேசியவாத மகுடங்கள் பற்றி மட்டுமே அறிந்திருக்கக் கூடியவர்களுக்குக் கூட அவர்கள் எந்த வர்க்கத்தின் சார்பாக எத் தகைய ஆதிக்க சக்திகளின் பின்புலத்துடன் அரசியல் முன்னெடுத்து வந்தார்கள் என்பதும் தெரியாது.

எனவே இன்று முல்லைத்தீவில் தோற்கடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்ட தமிழீழக் கோரிக்கையும் அதன் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிய அரசியல் பாடத்தைப் படிக்க வேண்டியுள்ளது. அதனையொட்டி வெளிவருவதே **"வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை"** கட்டுரைத் தொடராகும்.


## 1965 – 1970பதுகளின் அரசியல் சூழல்

1976ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமைந்துள்ள சுழிபுரத்தில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்த மாநாட்டிலேயே தனித் தமிழீழக் கோரிக்கை பிரகடனம் செய்யப்பட்டது. அதனை வென்றெடுக்கவென்று தமிழர் ஐக்கிய முன்னணியும் தோற்றுவிக்கப்பட்டது. இத் தமிழீழக் கோரிக்கையை தமிழ் மக்கள் மத்தியில் முன்வைத்து புதியதொரு அரசியல் சூழலை உருவாக்க வேண்டிய தேவை அன்று தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரிவினருக்கும் ஏற்பட்டிருந்தது.

1965 – 70 கால கட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஏழு கட்சிகளின் கூட்டு அரசாங்கத்தை அமைத்து நடாத்தி வந்தது. டட்லி சேனநாயக்கா தலைமையிலான அவ் அரசாங்கத்தில் பச்சை இனவாதியான கே.எம்.பி.ராஜரத்தினா, ஆர்.ஜி.சேனநாயக, சி.பி.டி.சில்வா, பிலிப் குணவர்த்தனா போன்றோருடன் தமிழரசுக் கட்சி அவ் அரசாங்கத்தில் பங்கு பற்றி முன்னாள் செனட்டரான மு.திருச்செல்வம் அமைச்சர் பதவியும் பெற்றிருந்தார். அவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் நெருங்கிய சகாவும் தமிழரசுக் கட்சியின் கொள்கை வகுப்பாளர்களில் ஒருவருமாக இருந்தவர். ஜி.ஜி. பென்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்சும் அவ் வரசாங்கத்தில் அமைச்சா் பதவி பெறாது அங்கம் பெற்று இருந்தது அதன் பாராளுமன்ற உறுப்பினா் மு. சிவசிதம்பரம் உப சபாநாயகராக பதவி பெற்று இருந்தாா். இவ்விரு கட்சிகளும் அன்றை பிரதமா் டட்லி சேனநாயக்காவையும் ஏனைய அமைச்சா்களையும் யாழ்ப்பாணம் அழைத்து வந்து கூட்டங்கள் நடாத்தி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய டட்லி – தமிழரசு அரசாங்கத்தினால் உழைக்கும் மக்களுக்குரிய எதையும் வழங்க முடியாத நிலை போன்றே தமிழ் மக்களின் உரிமைகளையும் வழங்க முடியவில்லை. குறிப்பாக டட்லி – செல்வா ஒப்பந்தம் என்பதன் ஊடாக சில உரிமைகளைப் பெற தமிழரசுக் கட்சி முனைந்த போது வழமை போன்று யூ.என்.பி. அரசாங்கத்திற்குள் இருந்தும் எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து தீவிர இனவாத எதிர்ப்பு டட்லி – செல்வா ஒப்பந்தத்திற்குக் காட்டப்பட்டது. அதற்கு பாராளுமன்ற இடதுசாரிகளான சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்திக் கொண்டன. ஆனால் தம்மைப் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியாகத் தகவமைத்து நின்ற தோழர் நா.சண்முகதாசன் தலைமையிலான கட்சியும் அதன் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்திருந்த தொழிற்சங்கங்களும் மேற்படி இனவாத நிலைப்பாட்டை மிகக் கடுமையாக எதிர்த்தன. அதனால் 1966 ஜனவரி 08ஆம் திகதி இடம்பெற்ற டட்லி – செல்வா ஒப்பந்தத்திற்கு எதிரான ஊர்வலத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தொழிற்சங்கங்களும் கலந்து கொள்ளவில்லை. அவ்வேளையில் கட்சி வாலிபர் இயக்கத்தில் இணைந்திருந்த றோகண விஜயவீரவும் சில வாலிபர்களும் மேற்படி ஊர்வலத்தில் கலந்து கொண்டமைக்காக அவர்கள் கட்சி வாலிபர் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டனர். அன்றே விஜயவீரவினது இனவாத அரசியல் தன்னை வெளிப்படுத்த ஆரம்பித்திருந்தது.



மேலும் 1965 – 1970 கால கட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சி கடுமையான கண்டனத்திற்கும் அதிருப்திக்கும் ஆளாகிக் கொண்டது. இதே கால கட்டத்தில் வடபுலத்தில் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சாதிய தீண்டாமைக்கு எதிரான வெகுஜன எழுச்சியும் போராட்டங்களும் வேகத்துடன் இடம்பெற்றன. 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி உருவாக்கிய பாதையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட அப்போராட்டங்களில் வன்முறைகள் புரட்சிகரமானவைகளாகவும் மக்கள் விரோதம் இன்றியும் மக்களால் முன்னெடுக்கப்பட்டன. இதனால் அப்போராட்டங்கள் தமிழ் மக்கள் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்களை ஐக்கியப்படுத்தியும் உயர் சாதியினர் எனப்பட்டோரின் மத்தியிலான ஜனநாயக நல்லெண்ண சக்திகளின் ஆதரவைப் பெற்றும் முன் சென்றது. அதேவேளை தமிழரசு – தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் இம் மக்கள் முன்னெடுத்த அவ் வெகுஜனப் போராட்டங்களுக்கு எதிராகவும் மௌனமாகவும் இருந்தனர். இது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பைத் தோற்றுவித்துக் கொண்டது. அதே வேளை வடபுலத்தில் புரட்சிகர கம்யூனிஸ்ற் கட்சியின் தொழிற்சங்க ங்கள் முன்னெடுத்த தொழிற்சங்கப் போராட்ங்களில் தொழிலாளர்கள் அணிதிரண்டனர். இவற்றிலும் தமிழரசுக் கட்சியானது தனது முத லாளித்துவ வர்க்க நிலைப்பாட்டுடன் முதலாளிகள் சார்பாக நின்று தொழிலாளர் விரோதமாகவே நடந்து கொண்டது.



அதேவேளை வளர்ந்து வந்த பௌத்த சிங் களப் பேரினவாதத்திற்கும் அது காலூன்றி நின்ற நிலவுடைமை வழி வந்த முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆதரவு சக்திகளுக்கும் எதிராகத் தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்கு உரிய கொள்கையை தமிழரசு – காங்கிரஸ் கட்சிகளால் சரியான தளங்களில் நின்று முன் வைக்க முடியவில்லை. அத்துடன் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்கள் அன்றாட உழைப்பாளர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் பெண்கள் எதிர் நோக்கிய பிரச் சினைகள் பற்றியோ அவற்றுக்கான கோரிக்கைகள் பற்றியோ எவ்வித அக்கறைகளும் காட்டப்பட வில்லை. யாவும் தமிழ் இனம் தமிழ் மொழி தமிழர் பழம் பெருமை என்பனவற்றுள் வைத்தே நோக்கப்பட்டது. இவை பழைமைவாதக் கருத்தியல் வழியான குறுந்தேசியவாதத்தையே தமது அடிப்படை நிலைப்பா டாகக் கொண்டிருந்தது. அத்தகைய கொள்கையானது வெறும் பாராளுமன்ற வெற்றிகளுக்குரியதாக இருந்ததே தவிர பரந்து பட்ட

தொடர்ச்சி 13 பக்கம்

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

ஒரு பார்வை

தமிழ் மக்களின் வாழ்வுரிமைகளை வென்றெடுப்பதாக ஒரு போதும் இருந்ததில்லை. அதற்குக் காரணம் அவர்களது மேட்டுக்குடி உயர் வர்க்க உள்ளடக்கமும் இனத்துவப் போர்வையுமாகும்.

## 1970இன் பொதுத் தேர்தலும் அதன் பின்பும்

இத்தகைய அரசியல் சூழலிலேயே 1970ஆம் ஆண்டின் ஜூலைப் பொதுத் தேர்தல் இடம்பெற்றது. இத் தேர்தலில் வடபுலத்தின் மூன்று முக்கிய தமிழரசு தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது தொகுதிகளில் படுதோல்வி கண்டனர். ஒருவர் "தளபதி" என வர்ணிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் அ.அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத்தொகுதியில் தோல்வி கண்டார். இரண்டாமவர் "இரும்பு மனிதர்" எனக் கூறப்பட்டு வந்த தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் ஈ.எம்.பி.நாகநாதன் நல்லூர் தொகுதியில் தோல்வியடைந்தார். மூன்றாவமவர் "உடுப்பிட்டிச் சிங்கம்" என்று கூறப்பட்ட தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரான மு.சிவசிதம்பரம் உடுப்பிட்டித் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார். மேலும் "தனிப்பெரும் தலைவர்" எனக் கூறப்பட்டு வந்த தமிழ் காங்கிரஸின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் இறுதியாக நின்று தோல்வி கண்டார். இவ்வாறு 1970ஆம் ஆண்டின் ஜூலைப் பொதுத் தேர்தலானது தமிழரசு – தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியையும் தாங்க முடியாத அரசியல் அவமானத்தையும் கொடுத்திருந்தது. இதிலிருந்து மீள்வதென்பது அவர்களுக்குப் பெரும் சவாலாகியது.

தென்னிலங்கையில் இத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் இணைந்து பெரு வெற்றி பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கம் அமைத்துக் கொண்டது. அதேவேளை தமிழரசு – தமிழ்க் காங்கிரசின் தென்னிலங்கை சகாவான ஐக்கிய தேசியக் கட்சியும் தோல்வி கண்டது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனக்கிருந்த மூன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மையை வைத்து தாம் நினைத்தவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்தும் திட்டங்களைக் கொண்டிருந்தது. புதிய அரசியலமைப்பை வரைவதற்கான முயற்சிகளை முன்னெடுத்த அதேவேளை தமிழ் மக்களின் உரிமைகளையோ மலையகத்



தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையோ கவனத்தில் கொள்ளாது புறந்தள்ளி வந்தது. தமிழரசுக் கட்சியும் அதன் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் முன்வைத்த தமிழ் மக்கள் சார்பான ஆறு அம்சக் கோரிக்கைகளை ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிராகரித்துக் கொண்டது. அக் கோரிக்கைகளை முன் வைத்த தமிழரசுக் கட்சியைப் பழிவாங்குவ தாக நடந்து கொண்ட அவ் அரசாங்கம் அக் கோரிக்கைகளில் உள்ளடங்கியிருந்த தமிழ் மக்களின் உரிமைகளையும் அடிலாஷைகளையும் காணத் தவறிக் கொண்டது. இந் நிலையில் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் பெற்றிருந்த பாராளுமன்ற இடதுசாரிகள் எனப்பட்டவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக எதனையும் செய்யாது தமது முன்னைய நிலைப்பாடுகளுக்கு நேர்விரோதமாக நடந்து கொண்டு வரலாற்றுப் பழியையும் தேடிக் கொண்டனர். இத்தகைய ஐக்கிய முன்னணி அரசின் பேரினவாதப் போக்கு எதிர் நிலையில் பாராளு மன்ற அரசியலில் பலவீன மடைந்திருந்த தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளுக்கு ஊட்டமளிப்பதாகவே அமைந்திருந்தது.

தமிழ்த் தேசியவாதத்தின் பாராளுமன்றத் தலைமைகள் எப்பொழுதும் தெற்கின் நிலவுடைமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடுடைய தரகு முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சியுடன் உள்ளுரவும் வெளிப்படையாகவும் பிணைப்புடைய தாக இருந்து வந்தன. இது இனத்துவத்திற்கு அப்பாலான வர்க்க ஐக்கியமாக நீடித்து வந்தது. இத்தகைய சிங்கள–தமிழ் மேட்டுக் குடி உயர்வர்க்க அந்நியோன்யம் கொலனித்துவ காலத்திலிருந்து நிலைபெற்று வந்த பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி மற்றொரு நிலவுடைமை வளவுக்கார குடும்பத்தவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஐம்பதுகளின் ஆரம்பத்தில் அமை த்தார். ஐந்து சக்திகளை (தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரிய ர்கள், பௌத்த பிக்குமார், ஆயுர்வேத வைத்தியர்கள்) உள்ளடங்கிய தேசியவாதக் கொள்கைகளை பண்டாரநாயக்கா முன் வைத்து அரசியலில் எழுச்சி பெற ஆரம்பித்தார். அதற்கு முன்பாகவே இலங்கையில் வளர்ச்சி பெற்று வந்த இடதுசாரி இயக்கத்தையும் பண்டாரநாயக்க முன்வைத்த எல்லைக்குட்பட்ட தேசியக் கொள் கைகளும் கொலனிய ஏகாதிபத்திய சார்பற்ற நோக்கும் இடதுசாரிகளுடனான நெருக்கத்திற்கு வழிவகுத்தது. இருப்பினும் அவர் உயிருடன் இருக்கும் வரை இடதுசாரிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் முழுமையான நெருக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அவரால் வெற்றி கொள்ள முடியாத பாராளுமன்ற இடதுசாரிகளை அவரது மனைவியான சிறிமாவோ பண்டாரநாயக்காவால் வெற்றி கொள்ள முடிந்தது மட்டுமன்றி இவ் இடதுசாரிகளின் தனித்துவங்களையும் படிப்படியாக இல்லாமல் செய்ய முடிந்தது. ஆனால் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி - இடதுசாரிகளின் கூட்டிணைவைக் கடுமையாக எதிர்த்து வந் தமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

1970ஆம் ஆண்டின் தோல்வியிலும் அரசியல் பலவீனத்திலும் இருந்து தம்மை மீட்டெடுத்து தொடர்ந்தும் பாராளுமன்ற அரசியலில் புதிய வேகத்துடன் முன்செல்ல வேண்டிய தேவையும் நிர்ப்பந்தமும் தமிழ்த் தேசியவாதத் தலைமைக்கு அவசியப்பட்டது. அதற்குரிய சந்தர்ப்பங்களை அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்கொள்ள ஆரம்பித்த இனவாத நடவடிக்கைகள் வழங்கி வந்தன. 1971ஆம் ஆண்டு ஜே.வி.பி. முன்னெடுத்த இளைஞர் ஆயுதக் கிளர்ச்சி நடவடிக்கை தெற்கில் இடம்பெற்றது. தவறான தலைமைத்துவத்தால் தவறான வழிமுறைகள் மூலம் முன்னெடுக்கப்பட்ட அக் கிளர்ச்சி ஐக்கிய முன்னணி அரசால் முறியடிக்கப்பட்டது. இந்தியாவின் மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவுடன் அடக்கப்பட்ட அக் கிளர்ச்சியில் சுமார் இருபதாயிரம் சிங்கள இளைஞர் யுவதிகள் வரை கொல்லப்பட்டனர். தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் சிறைகளில் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டனர். வடக்கு கிழக்கில் இக் கிளர்ச்சிக்கு ஆதரவு இல்லாத போதும் தமிழ் இளைஞர்களால் இக் கிளர்ச்சி உற்று நோக்கப்பட்டது. அத்துடன் ஏற்கனவே சாதிய தீண்டாமைக்கு எதிரான புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களால் தமிழ் இளைஞர்கள் மத்தியில் சிந்தனை ஓட்டங்கள் தீவிரமடைந்தன. அப்போராட்டங்கள் போன்று ஏன் இனவிடுதலைக்குத் தமிழ் இளைஞர்கள் போராட முடியாது என்ற வினாக்கள் எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டன. தமிழ் இன விடுதலையைப் பரந்துபட்ட புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதையில் முன்னெடுப்பதா அன்றி குறுகிய இனத்துவ நிலைப்பாட்டில் நின்று முன்னெடுப்பதா என்பதே அவ் விவாதத்தின் சாராம்சமாக இருந்தது.

தமிழ் இளைஞர்களைத் தமிழ்த் தேசியவாதத்தின் பழைமைவாதக் கருத்தியலின் ஊடான குறுந் தேசியவாத எல்லைக்குள் வைத்திருப்பதையே தமிழரசுக் கட்சித் தலைவர்களும் ஏனையவர்களும் விரும்பினார்கள். தமிழ் இளைஞர்கள் தேசியவாதத்தின் முற்போக்கான கூறுகளையோ அல்லது இடதுசாரிச் சிந்தனைப் போக்குகளையோ பற்றிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வதில் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தன. ஏற்கனவே ஏகாதிபத்திய விசுவாசமும் கம்யூனிச விரோதமும் கொண்டிருந்த தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் இரண்டும் புதிய நிலைமைகளால் தமிழ் இளைஞர் யுவதிகள் ஈர்க்கப்பட்டு விடுவார்களோ என்றும் தமிழ் மக்களின் உழைக்கும் மக்கள் இடது பக்கம் சென்று விடுவார்களோ எனவும் அம்சம் கொண்டிருந்தனர். எனவே இப் புரட்சிகர இடதுசாரி அபாயத்திலிருந்து தமிழ் மக்களினதும் இளந்தலைமுயைினரதும் கவனத்தைத் திசை திருப்ப வேண்டிய கட்டாயத்தில் தமிழரசுத் தலைமை கவனத்துடன் இருந்தது. இதில் அந்நிய சக்திகளின் வழி காட்டல் இருக்கவே செய்தது.

இக் காலகட்டத்தில் தான் 1970-71ஆம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தான் தனி நாடாகும் போராட்டம் இடம்பெற்று உச்ச நிலைக்கு வந்தது. அங்கு கம்யூனிஸ்டுகளும் முற்போக்கான தேசியவாதிகளும் ஆட்சி அதிகாரத்தை நிறுவவும் பங்களாதேசம் உருவாகவும் கூடிய சூழல் காணப்பட்டது. அதனை விரும்பாத இந்திய ஆளும் வர்க்கம் முஜிபூர் ரஹ்மான் தலைமையிலான பிற்போக்கான தேசியவாத இயக்கத்தை விடுதலைப் போராட்டத்தின் முன்னணி சக்தியாகக் காட்டி கிழக்குப் பாகிஸ்தானுக்குள் இந்தியப் படைகளை அனுப்பிக் கொண்டது. அங்கு பாகிஸ்தானின் இராணுவம் இந்திய இராணுவத்தால் சிறை பிடிக்கப்பட்டதுடன் தேசியவாதிகள் தேச பக்தர்கள் கம்யூனிஸ்டுக்கள் மட்டுமன்றி மக்களும் கொன்றழிக்கப்பட்டனர். இந்திய மேலாதிக்க விசுவாசிகள் முஜிபூர் ரகுமானின் தலைமையில் ஆட்சி அமைத்து பங்களாதேஷ் என்ற நாடு உருவாக்கம் பெற்றது. இதனை உருவாக்கிக் கொடுத்தவர் அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியாவார். 1971இல் இடம்பெற்ற பங்களாதேசப் பிரிவினையும் தனி நாடாகிக் கொண்டமையும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தமிழ்க் குறுந்தேசியவாத அரசியல் நடாத்தி வந்த தமிழரசுக் கட்சிக்கு உற்சாகம் தரும் நம்பிக்கையாக அமைந்தது. 'அன்னை' இந்திராவையும் 'தாய் நாடு' இந்தியாவையும் தமிழரசுக் கட்சித் தலைமை தமிழீழக் கனவுடன் வணங்கி நின்றது.

70ஆம் ஆண்டு வரை தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு இலங்கையில் பிரிவினை மூலம் தமிழர்களுக்கான தனிநாடு அமைக்கும் எவ்வித எண்ணமும் கொள்கை ரீதியாக எழவில்லை. அவர்கள் சமஷ்டி அமைப்பு முறை பற்றியே உரத்துப் பேசி வந்தனர். அதனைத் தென்னிலங்கையில் சிங்கள இனவாதிகள் பிரிவினை என்றே சித்தரித்துக் காட்டினார். 1957இல் பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டுப் பிரதேச சபைகள் மூலமான தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்ட போது ஜே.ஆர். தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி அதனை நாட்டைப் பிரித்து தமிழர்களுக்கு வழங்கும் திட்டம் என்று கூறியே கண்டி யாத்திரை நடாத்தியது. அன்றிலிருந்து இன்று வரை தமிழ் மக்களுக்கான எந்தவொரு குறைந்தபட்சத் தீர்வு முன்மொழிவையும் பிரிவினையாகச் சிங்கள மக்களுக்கு காட்டும் போக்கு நீடித்தே வந்துள்ளது.

தமிழரசுக் கட்சி சமஷ்டியை முன் வைத்து வந்த அதேவேளை மத்திய கிழக்கில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டமை பற்றியும் அதற்கான எண்ணக்கரு பற்றிய அவதானிப்பும் அக்கறையும் அதன் சில தலைவர்களிடம் இருந்து வந்தது. இஸ்ரேல் பற்றிய முன்னுதாரணத்தை மெச்சி சிலர் அங்கு பயணம் மேற்கொண்டும் திரும்பி வந்த பின் சிலாகித்தும் பேசி வந்தனர். அவர்களில் ஒருவரான தமிழரசுக் கட்சியின் மூளை என வர்ணிக்கப்பட்ட ஊர்காவற்துறை பாரளுமன்ற உறுப்பினராக இருந்த வி.நவரட்ணம் முக்கியமானவராவார். அவர் அறுபதுகளின் பிற்கூறிலே தமிழரசுக் கட்சிக்குள் உருவாகிய ஓரங்கட்டும் முரண்பாட்டால் கட்சியை விட்டு வெளியேறி தமிழர் சுயாட்சிக் கழகத்தை உருவாக்கினார். அவரது முன் மொழிவாகவே தமிழீழம் என்ற எண்ணக்கரு வெளிப்படுத்தப்பட்டது. ஏற்கனவே அடங்காத் தமிழன் என்று வர்ணிக்கப்பட்ட ஸி.சுந்தரலிங்கம் போன்ற சிலரும் தனித் தமிழ் இராச்சியம பற்றிக் கூறியிருந்தனர். அவற்றையெல்லாம் குறிப்பாக வி.நவரத்தினம் முன்வைத்த தமிழீழத்தையும் நிராகரித்து வந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் அவரது சகாக்களும் 1970ஆம் ஆண்டிற்குப் பின் தனித் தமிழீழக் கோரிக்கைக்கு வந்து சேர்ந்தனர். அதற்கு ஏற்கனவே உருவாகிய வடக்கு கிழக்கு அரசியல் முன் நிகழ்வுகள் காரணமாகின. அத்துடன் 1970ஆம் ஆண்டின் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இனவாத முடிவுகளும் நடவடிக்கைகளும் 70ம் ஆண்டு தேர்தல் தோல்விகளும் தமிழரசுக் கட்சியின் தமிழீழக் கோரிக்கை க்கான பிரசாரத்திற்கு வலுச் சேர்த்துக் கொண்டன.



1970இல் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தது. சமசமாஜக் கட்சியின் என்.எம்.பெரேரா நிதி அமைச்சராகவும் கொல்வின் ஆர்.டி. சில்வா அரசியலமைப்பு விவகார அமைச்சராகவும் பதவி வகித்தனர். கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பீற்றர் கெனமன் வீடமைப்பு அமை ச்சராகினார். சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் பதியுதீன் முகமத் கல்வி அமைச்சராகப் பதவி வகித்தார். மேலும் குறிப்பிடக் கூடிய விடயம் உண்டு. ஏற்கனவே யாழ்ப்பாணத் தொகுதியில் ஜீ.ஜீபொன் னம்பலத்தைத் தோற்கடித்துப் பாராளுமனற உறுப்பினராகிய அல்பிரட் துரையப்பா 1970 தேர்தலில் தோல்வி கண்டார். அவர் ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்தும் இருந்தார். அவரது தோல்விக்குப் பின் மீண்டும் அவர் யாழ் மாநகர சபையின் முதல்வ ராகியும் கொண்டார். அதனால் அவரது யாழ்ப்பாணத் தொகுதி மீதான செல்வாக்கு வளர்ந்து வந்ததால் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிலர் விரல் சுட்டிய பாராளுமன்றத் "துரோகிகள்" பட்டியலில் முதல் ஆளாக்கப்பட்டும் இருந்தார்.

அத்துடன் இத் துரோகப் பட்டியல் நீளத் தொடங்கியது. அ.அமிர்தலிங்கத்தை தோற்கடித்த முன்னாள் அதிபர் எஸ்.தியாகராசாவும் ஈ.எம்.வி.நாகநாதனைத் தோற்கடித்த சி.அருளம்பலமும் துரோகப் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். தமிழரசுக் கட்சியினரின் இத் துரோகிகள் பட்டியலில் அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் தபால் அமைச்சர் பதவி பெற்ற செ.குமாரசூரியரும் அடங்குவர். தமிழ்த் தேசியவாத அரசியல் அரங்கில் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகளின் காலத்திலிருந்தே 'துரோகிகளை' அடையாளப்படுத்தி தத்தமது பாராளுமன்ற வெற்றிக்குப் பிரச்சாரம் செய்யும் போக்கு ஆரம்பித்தது. 1970 வரை எதிர்ப் பிரசாரமாக மட்டுமே இருந்து வந்த இப் போக்கு துரோகிகளை அழித்தொழிக்கும் நடைமுறையாக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் குறிப்பிட்ட தலைவர்களால் "ஆமை பிடிப்பார் மல்லாத்துவார் நாமதைச் சொன்னால் பாவம்" என்ற முதுமொழி போன்று "துரோகிகள்" என்போர் அடையாளப்படுத்தப்பட்டனர். இத்தகைய துரோகிகளுக்கு இயற்கை மரணம் வரமாட்டாது என்று பகிரங்கமாகவே அமிர்தலிங்கம் போன்றோர் கூறவும் பின் நிற்கவில்லை. இத் தகைய தொடக்கம் எங்கே கொண்டு சென்று விடும் என்ற அபாயத்தை அ.அமி ர்தலிங்கம், எஸ்.யோகேஸ்வரன் போன்றோர் தூரநோக்குடன் உணர்ந்திருக்கவில்லை.



ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழரசுக் கட்சியுடன் எவ்வித கொடுக்கல் வாங்கலும் செய்யத் தயாராக இருக்கவில்லை. தமக்கு ஆதரவளித்த வட்டுக் கோட்டை உறுப்பினர் தியாகராசா, நல்லூர் உறுப்பினர் சி.அருளம்பலம், தபால் அமைச்சர் செ.குமார சூரியர், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி எனக் கூறி நியமன உறுப்பினராக்கப்பட்ட எம்.சி.சுப்பிரமணியம் ஆகியோர் மூலமான சலுகைகள் அபிவிருத்திகள் போன்றவற்றை அரசாங்கம் வடக்கில் செயல்படுத்தி வந்தது. அவற்றை அங்வப்போது எதிர்த்து பகிஷ்கரிப்பு கறுப்புக் கொடிகாட்டல் போன்றவற்றை தமிழர்சுக்கட்சியினர் முன்னெடுத்து வந்தனர்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆறு அம்சக் கோரிக்கைகள் கொண்ட மனுவை அனுப்பி வைத்த போதும் அரசாங்கம் அதனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இந்த நிலையிலேயே ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொண்டது. பௌத்த மதத்திற்கு விஷேட இடம் வழங்கியதாலும் ஏற்கனவே சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினர் பாதுகாப்பிற்கென பெயரளவில் இடம்பெற்றிருந்த 29வது சரத்தை நீக்கியமையாலும் தமிழ் மக்களது கோரிக்கைகளுக்குரிய ஏற்பாடுகள் எதுவும் இடம் பெறாமையாலும் அப் புதிய அரசியலமைப்பு தமிழர்களுக்கு எதிரானதொன்று என்ற நிலைக்குள்ளாகியது. மேலும் தமிழரசுக் கட்சி அதனை எதிர்த்து நிராகரித்தமையும் அவ் அரசியலமைப்புப் பற்றிய அதிருப்தி வளரக் காணரமாகிக் கொண்டது. அதேவேளை இவ்வரசியலமைப்பானது இலங்கையை சுதந்திரம் சுயாதிபத்தியம் கொண்ட நாடாக்கும் வகையில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் இருந்து வந்த அரசியலமைப்பு ரீதியான தொடர்புகளைத் துண்டிக்க வழி ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். 1972ஆம் ஆண்டின் பின்னான நிகழ்வுகளையும் தமிழீழக் கோரிக்கைக்கான பிரகடனத்தையும் அதன் தாக்கத்தையும் அடுத்து வரும் தொடரில் காண்போம்.

வளரும்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## உலக அரங்கின் நாட்குறிப்பு



# தேவதூதனின் வருகையை எதிர்பார்த்து: ஏமாந்தோரும் காத்திருப்போரும்

கற்பனைகளும் கனவுகளும் அழகானவை. மனதுக்கு நிறைவை தருவனவும் கூட. ஆனால் யதார்த்தம் அவ்வளவு இனிமையாக இல்லை. கண்களை மூடியபடி உலகம் இருட்டு என்ற பூனையின் கதைகளை இந்த உலகம் எத்தனை தடவை பார்த்து இருக்கிறது. ஒவ்வொரு தடவையும் பூனை தான் பிறர் சொல்வதை கேட்பதாய் இல்லை. பூனை கேட்காது விட்டாலும் அவலம் மனிதர்களுக்கு தானே நேர்கிறது. என்ன செய்ய. நம்பி கேட்டவர் சிலர் என்னும் நம்பச் சொல்லி கெடுப்பவர் பலர்.

மனிதப் பேரவலத்தின் முடிவில் சுடுகாட்டின் மேல் நின்று "நாடு கடந்த அரசாங்கம்" என்ற குரல் ஒலிக்கின்றது. மக்களை மனிதர்களாகவே மதிக்காத ஒரு கூட்டம் மீண்டும் ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாய் எதையாவது சாதிக்கப்போவதாய் கொக்கரிக்கின்றது. "ஒபாமா, ஒபாமா" என்ற அபயக்குரல் ஒலிக்கிறது. ஒபாமாவை நம்பி ஏமாந்து ஒரு மனிதப் பேரவலமே நடந்து முடிந்த நிலையிலும் இன்றும் ஒபாமா பற்றிய நம்பிக்கைகள் குறைந்த பாடில்லை. பாகிஸ்தானின் சுவட்பள்ளத்தாக்கில் அமெரிக்க ஆதரவுடன் நடத்தப்பட்ட இராணுவத் தாக்குதலில் 10 லட்சம் மக்கள் வாழ்விடங்களை இழந்து அகதிகளாக்கப்பட்டு இருக்கின்றனர். ஈரானில் தேர்தல் முடிவுகள் தங்களுக்கு சார்பாக அமையவில்லை என்பதற்காக தேர்தல் முடிவுகள் சரியாக அமையவில்லை என்று அறிக்கை விடுத்தார் ஒபாமா. வடகொரியா தங்கள் தேவைகளுக்கு அணுப் பயன்பாட்டை செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்றும் உலக அமைதிக்கு வடகொரியா மிகப் பெரிய ஆபத்து என்றும் உலக மக்களுக்கு அறிவுரை சொல்கிறார் ஒபாமா. இவையெல்லாம் ஜனநாயகத்தின் பால் ஒபாமா கொண்டுள்ள அக்கறையைக் காட்டுவதாகக் கொள்ளலாமா. இதன் வழி எமக்கும் விடிவு கிடைக்கும் என்று இவர்கள் சொல்கிறார்கள்.

உலகில் உள்ள மக்களுக்காக ஏங்கும் ஒபாமா தான் ஈராக்கில் அப்பாவி மக்களை கொலை செய்கிறார். ஆப்கானிஸ்தானில் குண்டு மழை பொழிகிறார். வெனசுவேலவிலும் பொலிவியாவிலும் ஆட்சி மாற்றங்களுக்கு முனைகிறார். ஹொண்டுராஸ் ஜனாதிபதி பதவி கவிழ்க்கப்படுகிறார். உலக மக்களின் நலனுக்காகத்தான் இதையெல்லாம் ஒபாமா செய்கிறார் என்று நம்பலாமா? நாம் இதையெல்லாம் ஏன் நம்ப வேண்டும் என்று ஒபாமாவையும் அமெரிக்காவையும் நம்பச் சொல்கிறவர்கள் சொல்லியிருக்கிறார்களா? அல்லது இனி என்றாலும் சொல்வார்களா?

ஆனால் ஏன் ஒபாமாவையும் அமெரிக்காவையும் நம்பக்கூடாது என்று பலர் எச்சரித்திருக்கிறார்கள். இனியும் எச்சரிப்பார்கள். ஏனெனில் வரலாறு தானே திரும்புவதில்லை. மக்கள் தான் வரலாற்றை திருப்புகிறார்கள். யார் யாரையோ நம்பிப் போராடப் போனார்கள். போனவர்கள் மக்களை எந்த அவலத்தில் தவிக்கவிட்டார்கள் என்பதை விட எந்த மக்களுக்காக செய்தார்கள்? இவர்கள் சொல்லுகிறபடி மக்களுக்காக குரல் கொடுக்கும் ஒபாமா தினம் தினம் சாகும் உறவுகளை இழக்கும் மக்களுக்கு என்ன பதில் வைத்து இருக்கிறார். மனிதபிமான நடவடிக்கையின் பகுதி என்றா? இவ்வாறு பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தின் விளைவாக பாதிக்கப்படுகிற மக்களுக்கு என்ன பதில். இன்று ஒபாமாவை நம்பும்படி சொன்னவர்கள் தான் அன்று அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தை ஆதரித்தவர்கள். "நீங்கள் எங்களோடு இருக்கிறீர்கள் அல்லது எதிரிகளோடு இருக்கிறீர்கள்" என்று புஷ் முழங்கிய போது நாங்கள் உங்களோடு தான் இருக்கிறோம் என்றவர்கள்.

இப்போது அந்நிய தலையீடு பற்றியும் அமெரிக்கா பெற்றுத் தருவதாக உறுதி அளித்ததாக இவர்கள் சொல்கிற தனி நாடு பற்றியும் கதை நடக்கிறது. அடக்குமுறையாளர்களும் ஆளும் வர்க்கங்களும் சர்வதேச சமூகம் பற்றி அதிகமாகவே பேசுவதைக் கேட்கின்றோம். தங்களின் அடக்குமுறைகளையும் அராஜகங்களையும் கேள்விக்கு உட்படுத்தாத வரை சர்வதேச சமூகம் பற்றி மகிழ்ச்சி அடைபவர்களாகவே ஆளும் வர்க்கத்தினரும் அடக்குமுறையாளர்களும் இருப்பர். இவர்களது கதையும் இதுதான்.

ஹெயிற்றியிலும் கொங்கோ, எத்தியோப்பியா, ரூவாண்டா, சூடான் போன்ற நாடுகளிலும் அந்நிய தலையீடு மனிதப் பேரவலத்தையே பரிசளித்தது. நாம் இன்று வேண்டுவது என்ன. இவர்களோ அல்லது அமெரிக்காவோ நடந்து முடிந்த மக்கள் பேரவலத்துக்கும் காரணம் தாங்கள் தான் என்பதை ஒப்புக்கொள்ள தயாரா. மக்களை பேரவலங்களில் இருந்து மீட்டதும் மக்களது உரிமைகளை உறுதிப்படுத்தியதும் மக்கள் போராட்டங்களே அன்றி ஏகாதிபத்தியமோ, அமெரிக்காவோ அல்ல. போதும் நிறுத்துங்கள்.

மனிதனது பலவீனங்களை இவர்கள் எப்போதும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். இன உணர்வு இன்றைய சமுதாயத்தின் தனிமனிதனுக்கு ஒரு ஆதாரமாகவே தோன்றினாலும் அது உண்மையில் அவனுடைய பலவீனம். அந்த இன உணர்வை மனிதர்களை வேற்றுமைப்படுத்தவும் ஒடுக்கப்பட்டவர்களை ஒன்றுபடாமல் தடுக்கவும் பயன்படுத்துவதில் பிற்போக்குச் சக்திகள் மிகவும் கவனம் செலுத்தி வந்துள்ளன. அறியாமையும் தெளிவீனங்களும் இன உணர்வுகளை உக்கிரப்படுத்த உதவும் சாதனங்கள். இனவாதப் பொய்களையும் அரை உண்மைகளையும் நம்பிப் பழகிவிட்ட மனங்களுக்கு உண்மை உடனடியாகப் புலனாகாது. காலம் எடுக்கும். நாங்கள் இனியாவது சிந்திக்கக் கற்றுக் கொள்வோம்.

# வெட்கம் கெட்ட அமெரிக்க - மேற்குலகம்

ஈரானில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் வாக்குகளை மீள எண்ணுமாறு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் கோரியிருந்தன. இவர்களுடன் சேர்ந்து ஐ.நா.பொதுச் செயலரும் ஈரானில் இடம்பெற்ற தேர்தல் பற்றித் தனது சந்தேகத்தை வெளியிட்டிருந்தார். ஐ.நா.வோ மேற்கத்திய நாடுகளோ 2000ம் ஆண்டில் இடம்பெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறையற்றதென்றோ அல்லது வாக்குகளை மீள எண்ண வேண்டுமென்றோ கோரவில்லை. புளோறிடாவில் தோல்வியுற்ற ஜோர்ஜ் புஷ் உயர்நீதிமன்றத்தினால் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். அல்கோர் ஏமாற்றப்பட்டார் என்றே அமெரிக்க மக்கள் நம்புகின்றனர். ஆனால் வெட்கங் கெட்ட நிலையில் அமெரிக்காவும் மேற்குலகமும் ஈரானில் இடம்பெற்ற தேர்தல் மோசடி மிக்கது எனக் கூறியிருக்கிறது. இது போலவே பொருளாதார மட்டத்திலும் மேற்குலகம் நடந்து கொள்கிறது. உலக நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி கைத்தொழில் நாடுகள் வறிய நாடுகளுக்கான உதவிகளை மட்டுப்படுத்துவதாகக் கூறுகிறது.

ஐ.நாவின் மிலேனியம் திட்டம் இந்த வாதத்தில் உண்மையில்லையென்கிறது. இந்தத் திட்டம் ஆரம்பத்தில் இருந்து 50 வருடங்களில் - உதவியளிக்கும் நாடுகள் இரண்டு இலட்சம் கோடி (2 ரிலியன்) டொலர்களை மட்டுமே வளர்ச்சயடையும் நாடுகளுக்குக் கொடுத்துள்ளன.

ஆனால் சென்ற ஆண்டில் மட்டும் உலகின் பெரியங்வகிகள், நிதி நிறுவனங்கள் என்பனவற்றின் மீட்பு நிதியாகப் பதினெட்டு (18) இலட்சம் கோடி டொலர்கள் என கொடுக் கப்பட்டன. அதாவது முதலாளித்துவத்தை காப்பாற்றுவதற்காக மக்களின் வரிப் பணத்தின் உதவியுடன் ஊழல் மோசடிக்காரருக்கு நிதி வழங்கப்பட்டது.

தினமும் பட்டினியால் ஐம்பதாயிரம் பேர் (50,000) மடிகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்துவதற்காக எத்தனை உச்சி மாநாடுகள், பேரப் பேச்சுகள் இடம் பெற்றன. நிதியைத் திரட்ட இயலாதென்ப தெல்லாம் வெறும் வேடமே என மிலேனியம் இயக்க இயக்குநர் சாலில் ஷெட்டி தெரிவிக்கிறார்.

சென்ற மாதம் உலக நிதி நெருக்கடி தொடர்பாக இடம்பெற்ற மூன்று நாள் உச்சி மாநாட்டில் உரையாற்றிய செயலாளர் நாயகம் இதே கருத்தைத் தெரிவித்திருந்தார். 2005இல் ஸ்கொட்லாந்தில் கைத்தொழில் உலகத் தலைவர்கள் ஆபிரிக்க கண்டத்திற்கான வருடாந்த உதவித் தொகை கொடுப்பதற்குக் குறிப்பிட்ட தொகையினை அறிவித்திருந்த போதும் அத் தொகையில் இரண்டு கோடி டொலர்கள் வழங்கப்படவில்லை.

உலக நிதி நிறுவனங்களை நிமிர்த்துவதற்காக 18 இலட்சம் கோடி டொலர்களை ஒழுங்குபடுத்த முடியுமென்றால் ஆபிரிக்காவிற்கு உதவ முன்வந்த தொகையை விட மேலதிகமாக 1800 கோடி டொலர்களைத் திரட்ட முடியும். வளர்ச்சியடையும் நாடுகளுக்கு அவசரமாகத் தேவைப்படும் நிதியில் 70,000 (எழுபதாயிரம்) கோடி டொலர்கள் பற்றாக் குறையாகவுள்ளதாக உலக வங்கி தெரிவிக்கிறது.

நிதி வழங்குவதில் ஏற்படும் தாமதம், பற்றாக்குறையென்பதால் 2015ம் ஆண்டளவில் குழந்தைகளின் மரணம் 15 இலட்சத்திலிருந்து 28 இலட்சம் வரை இருக்குமென உலக வங்கி எதிர்வு கூறுகிறது.

இந்நிலையில் உலக முதலாளித்துவம் தன்னை நிர்வாணப்படுத்தி வருகிறது. உலக நாடுகளின் மக்கள் இம் முதலாளித்துவத்திற்கு எதிராக எழுச்சிபெறும் காலம் கனிந்தே வருகிறது.

-சிறீ-

# ஐ. நா. பாதுகாப்பு சபையின் நியாயம்

ஐக்கிய நாடுகள் சபை எனப்படும் ஐ. நா.வின் அரசியல் கபடத்தனத்திற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. பெரிய வல்லரசுகளைக் கையாளும் போது ஒரு நடைமுறையையும் ஏனைய நாடுகளைக் கையாளும் போது வேறு நடைமுறையையும் பின்பற்றி வந்திருக்கிறது.

அமெரிக்க இராணுவத் தாக்குதல்களால் அப்பாவிப் பொது மக்கள் ஈராக்கில் ஆப்கானில் கொல்லப்படும் போது, அமெரிக்க அல்லது நோட்டோ மீது யுத்தக் குற்றச்சாட்டோ அல்லது ஜெனிவா உடன்படிக்கை மீறல் பற்றியோ எதுவும் பேசப்படுவதில்லை.

சூடானிலோ, கொங்கோ குடியரசிலோ அப்பாவி மக்கள் உள்நாட்டுப் பிரச்சினையில் கொல்லப்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே (Hague) கேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றுக்குச் செல்லப் போவதாக மிரட்டல் விடப்படுகிறது.

இஸ்ரேல் ஒரு பெரிய வல்லரசில்லாத போதும் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டிராத போதும் அந்த நாட்டிற்கு விதிவிலக்குண்டு. அமெரிக்காவின் செல்லப் பிள்ளையென்பதால் காசாவில் ஆயிரக் கணக்கான பெண்களையும், குழந்தைகளையும் கொன்ற இஸ்ரேலை எவரும் தட்டிக் கேட்க முடியவில்லை.

அண்மையில் பதினைந்து நாடுகள் கொண்ட ஐ.நா. பாதுகாப்புச் சபை வடகொரியாவின் அணு ஆயுதப் பரிசோதனை சம்பந்தமாக "மிகுந்த கரிசனையை" வெளியிட்டு அந்த நாட்டுக்கு எதிராகப் புதிய தடைகளையும் விதித்தது.

இந்தத் தீர்மானத்திற்கு தமது ஆசிகளைத் தெரிவித்த நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஏற்கனவே அணு ஆயுத வல்லரசுகளாக இருந்து வருபவையாகும். அந்த ஐந்து நாடுகளும் தத்தம் கொல்லைப் புறத்திலோ அல்லது வேறு நாட்டவரின் எல்லைப் புறத்திலோ அணு ஆயுதப் பரிசோதனைகள் செய்வதற்கு எதுவித தயக்கமும் கொண்டிருப்பதில்லை. வடகொரியா மீதான தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்னதாக வடகொரியாவின் வெளிவிவகார அமைச்சு ஒரு அறிக்கையை வெளியிட்டது. அது பின்வருமாறு அமைந்திருந்தது.

1."எமது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இந்தத் தடவை நாம் நடாத்திய அணுப் பரிசோதனையானது இப்புவியில் மேற் கொண்ட 2,054ஆவது சோதனையாகும். பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகள் உலகில் மேற் கொள்ளப்பட்ட அணு ஆயுதச் சோதனைகளில் 99.99 வீதமான சோதனைகளை மேற் கொண்டன." இக் கூற்று கவனத்திற்குரியதாகும்.

வடகொரியா தெரிவித்த இத்தகவல் சரியானது. போலிற்றி(f)பக்ற் (Politi Fact) இணையத் தளம் வெளியிட்ட தகவலின்படி 1945ஆம் ஆண்டிலிருந்து குறித்த திகதி வரை 2,051 அணுச் சோதனைகள் உலகில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஐந்து நாடுகளும் இதுவரை எத்தனை சோதனைகளை மேற் கொண்டுள்ளன தெரியுமா?

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | - | 1030 |
| ரஷ்யா / சோ. யூ | - | 715 |
| பிரிட்டன் | - | 45 |
| பிரான்சு | - | 210 |
| சீனா | - | 45 |
| மொத்தம் | | 2,045 |

இதைவிட வேறு நாடுகளும் சில அணுப் பரிசோதனைகளை மேற் கொண்டுள்ளன. இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், வடகொரியா இவற்றின் சரியான எண்ணிக்கை தெரியாது. எவ்வாறாயினும் இந்த நாடுகள் 13 பரிசோதனைகளை மேற் கொண்டுள்ளதாக அணு ஆயுத காப்பகம் வெளியிட்டுள்ள தகவல் கூறுகிறது. அதே காப்பகத்தின் தகவலின்படி இதுவரை 2,054 அணுப் பரிசோதனைகள் உலகல் இடம்பெற்றுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளின் அணுப் பரிசோதனைகளைப் பற்றி மௌனம் சாதிக்கும் ஐ.நா ஈரானின் அணுப் பரிசோதனை சாத்தியம் பற்றியும், வடகொரியாவின் பரிசோதனை பற்றியுமே உலக ஓலம் வைத்து வருகிறது. தனக்கு ஒரு நியாயம் பிறருக்கு வேறொரு நீதி பேசும் வல்லரசுகள் ஐ.நா.வைத் தமது நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வருகின்றன என்பதே காணக் கிடக்கும் உண்மையாகும்.

ஐ.நா.என்பது அமெரிக்கா தலைமையிலான நாடுகளுக்குரிய அமைப்பாகவே செயற்படுகிறது. அந்த நிறுவனத்திடமிருந்து ஏனைய நாடுகள் நியாயத்தையும் நடு நிலைமையையும் எதிர்பார்க்க முடியாது. இத்தகைய ஐ.நா. தமிழ் மக்களைக் காப்பாற்றும் எனத் தமிழ்த் தேசியவாதிகள், அண்மைக்காலம் வரை நம்பியிருந்தனர் - தமிழ் மக்களை நம்பிக்கையுடன் இருக்குமாறு கூறினர். ஐ.நா.வும் சர்வதேச சமூகம் எனப்பட்ட அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் உதவிக்கு வருமெனவும் மனப்பால் குடித்தும் வந்தனர். உள்நாட்டில் நட்பு சக்திகளை விரோதிகளாக்கிய தமிழ்த் தேசியவாதிகள் யார், நண்பர்கள் யார் விரோதிகள் என்பதைத் தற்போதாவது சரியாகக் கணிப்பார்களா?

மேற்குலகம், ஐ.நா.வை நம்பும்படி இனிமேலும் தமிழ் மக்களைக் கேட்பார்களா? தமிழ் மக்கள் நம்பி ஏமாறத் தயாரா?

-மனோ -

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## தேசிய கலை இலக்கியப் பேரவையின் அஞ்சலி

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும் ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவருமான இ. முருகையன் அவர்களது பிரிவுச் செய்தி தேசிய கலை இலக்கியப் பேரவையைப் பெருந் துயரில் ஆழ்த்தியுள்ளது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் தொடக்கத்திலிருந்தே அதற்குத் துணையாயிருந்து இளம் படைப்பாளிகளை நெறிப்படுத்தி ஊக் குவித்ததில் அவரது பங்களிப்பு மிகப் பெரிது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் சஞ்சிகையான தாயகத்தின் ஆசிரியர் குழுவிற் பெரும் பொறுப்பேற்றுச் செயற்பட்டு வந்ததுடன் அதன் நூல் வெளியீடுகளிலும் அவர் ஆக்கபூர்வமான ஒரு வழிகாட்டியாயிருந்தார்.

மூத்த கவிஞர் முருகையன் கவிஞராக மட்டுமன்றித் தமிழறிஞராகவும் திறனாய்வாளராகவும் சீரிய முற்போக்குச் சிந்தனையாளராகவும் அறியப்பட்டவராவார். அரசகரும மொழித் திணைக்களத்தில் அவர் பணியாற்றிய காலத்தில் தமிழ்க் கலைச் சொல்லாக்கத்திற்கு அவர் ஆற்றிய சேவை முன்னோடியானதும் முற்போக்கானதுமாகும். அவர் யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்தின் உதவிப் பதிவாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

அவரது கவிதைகள் போன்று மொழி, சமூகம், அரசியல் ஆகிய துறைகளில் அவரது கட்டுரைகளும் மிகுந்த தெளிவும் ஆழமும் சமூகப் பயனுமுடைய வையுமாவன. அவர், தன்னைச் சூழத் தவறுகள் நட ந்த போதெல்லாம் அவற்றைக் கண்டிக்கத் தயங்காது காய்தல் உவத் தலின்றி ஆக்கமான விமர்சனங்களை முன்வைத்து வந்தவருமாவர். அவரது பிரிவு தமிழ் இலக்கிய உலகிற்கும் சமூக விடுதலைச் சிந்தனையாளர்கட்கும் தமிழ் அறிவுத் துறைக்கும் ஒரு பேரிழப் பாகும். அவரது பிரிவால் வருந்தும் அவரது மனைவியார் தவமணிதேவி அவர்கட்கும் பிள்ளைகட்கும் குடும்பத்தினருக்கும் தேசிய கலை இலக்கியப் பேரவை தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருக்கான இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது. அவருடைய நண்பர்களுடனும் உறவினர் களுடனும் இணைந்து. தனது தேசியகலை இலக்கியப்பேரவை ஆழ்ந்த துயரைப் பகிர்ந்து கொள்கிறது.

கல்வயல் பெற்றெடுத்த கவித்தீயே! முருகையனே
சொல்உழுது சீர்கட்டி செகம்சிவக்க சீவித்தாயே
நல்லொழுங்கை கிளைவிட நாரதமேறி சாரதியாய்
வில்லங்கம் ஒழித்தென்றும் வித்தகனாய் வாழ்ந்தாயே

எதுகை மோனையென அழுதழுது ஏம்பலித்து
முதுமை வந்தெய்தி மூட்டைபல சுமத்தலை
புதுமையுறவே சாடி புதுக்கவி புனைந்தாயே
பதுமையாகவே நீ பலதையும் சாதித்தாயே

மூத்தகவி முருகையன் மூச்சினை நிறுத்திட
ஆர்த்தகுரல் அலையோடி ஆழிகடந்தும் ஒலித்திட
சீர்த்தரும் எழுத்தாளர் சீரிளங்கவி சீரியெழுதிட
கீர்த்தியுறு புகழுடலை கடனென்று நீத்தாரோ

கள்ளமிலா உறவாடிக் கருத்தினைக் கலந்தேற்று
உள்ளமதில் உண்மையாய் உழைப்பவர்க்காய் கவிபாடி
வெள்ளெழுத்தாய் வாழ்தலை வேள்வியாய் கொண்டிரே
வெள்ளமென மக்களலை வேதனையில் விம்முதே!

கொழும்பு
28-06-2009

தேசிய கலை இலக்கியப் பேரவை
DHESIYA KALAI ILAKKIYAP PERAVAI
ජාතික කලා සාහිත්‍ය පෙරවෙය


## கலை இலக்கிய தடாகம் இழந்து நிற்கும் கவிஞனுக்கு கண்ணீர் துளிகளால் அஞ்சலி

இலங்கை முற்போக்கு இலக்கியத் தளத்தில் பல் பரிமாணம் கொண்டவராக மக்கள் கலை இலக்கியச் சிந்தனையை செழுமைப்படுத்திய மூத்த கவிஞர், தமிழறிஞர் ஆய்வாளர் விமர்சகர் சமூக சிந்தனையாளர் இ.முருகையன் அவர்களின் இறப்பு செய்தி கேட்டு நெடுந்துயர் கொண்டோம்.

பேராசிரியர் கைலாசபதி அவர்களின் சம காலத்தில் தனது கலை இலக்கியப் பயணத்தைத் தொடங்கிய கவிஞர் தனது கல்வி ஆற்றலையும் இலக்கிய ஆளுமையையும் தன் சுய ஈடேற்றத்திற்காகவன்றி மானுட விடுதலைக்கான கலை இலக்கியக் கோட்பாட்டைச் செழுமைப்படுத்துவதற்காகச் செலுத்தி வந்தமை பெருமையுடன் நோக்கத்தக்கது. பல்பரிமாணம் கொண்ட இலக்கியப் படைப்பாளியாக விளங்கிய கவிஞர் கவிதை நாடகங்கள் ஊடாக ஈழத்து இலக்கியத் தளத்தில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தார். ஈழத்து இலக்கிய தளம் சந்தித்துக் கொண்ட பல்வேறு முரண்பாடுகள் பிளவுகளின் போது பலர் தடம் மாறித் தடுமாறிப் போனதும் கவிஞர் முருகையன் தெளிந்த சிந்தனையோடு நேர்மையான பார்வையோடும் மானுட விடுதலைக்கான மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டைத் தனது பயணப் பாதையாக வகுத்துக் கொண்டார். கலை இலக்கியப் பேரவையின் முதன்மை செயற்பாட்டாளராகவும் அதன் தலைவராகவும் இருந்து அதன் சமூக மாற்றத்திற்கான கலை இலக்கிய செயற்பாட்டை செழுமைப்படுத்தியவர். அந்த வகையில் அன்னாரின் இழப்பு தேசிய கலை இலக்கிய பேரவைக்கும் இலங்கையின் மக்கள் கலை இலக்கியத் தளத்திற்கும் பேரிழப்பாகும். இந்த நேரத்திலே மானுட சமூகம் எதிர்நோக்கி நிற்கும் அவலங்களை எதிரொலிக்க வல்ல, அவர் தம் விடுதலையை பாடவல்ல ஒரு இலக்கிய ஆளுமையை இழந்துள்ளோம் இவ் இழப்பில் இருந்திருக்கும் குடும் பத்தாரோடும் கலை இலக்கிய சிந்தனையாளர்களோடும் தேசிய கலை இலக்கியப் பேரவையோடும் புதிய மலையகம் தனது துயரினைப் பகிர்ந்து கொள்கின்றது.

புதிய மலையகம்

## மூத்த கவிஞர் தமிழ் அறிஞர் சமூக சிந்தனையாளர் இ. முருகையன் மறைவுக்கு புதிய பூமியின் அஞ்சலி



# முருகையனின் கவிதையின் உயர்வும் உன்னதமும்

மூத்த கவிஞர் முருகையன் பல்வேறுபட்ட ஆற்றல்களை ஆளுமையுடன் வெளிப்படுத்திய ஒருவர். ஆனால் அனைத்தினும் முக்கியமாக அவர் ஒரு கவிஞர். அவரோடொத்த ஆற்ற மிக்க கவிஞர்கள் இருந்துள்ளனர். எனினும் முருகையனுக்கான சிறப்பான இடமொன்று உள்ளது. அது அவரது அறிவாற்றல் பற்றியதல்ல; அவரது மொழிப் புலமை பற்றியதல்ல; அவரது பரந்த வாசிப்புப் பற்றியதல்ல; அவரது பன்முகப்பட்ட திறமை பற்றியதுமல்ல. அது அவர் மக்களைச் சார்ந்து நின்று மக்களுக்காகவே கவிதை படைத்த ஒரு கவிஞர் என்பதனால் அவர் தனக்காக வென்றெடுத்த இடம்.

முருகையனுடைய வாழ்க்கைப் பின்புலம் அவரைத் தமிழ்த் தேசியச் சிந்தனையுடையவராக உருவாக்கியது. சிங்களம் மட்டுமே சட்டம் வந்த போது அவர் ஒரு இளைஞர். அதன் பாதிப்பு அவரது கவிதைகளில் மொழிப்பற்றாகவும் இனப்பற்றாகவும் வெளிப்பட்டது. எனினும் அவரது சமூகப் பற்றும் சமூக நீதியும் அநீதியும் பற்றிய தெளிந்த பார்வையும் தமிழ்த் தேசியவாதத் தலைமை போகிற திசை தவறானதென்று விரைவிலேயே உணர வைத்தது. அவரது இளமைக்கால நண்பர் கைலாசபதியுடனான உரையாடல்களும் வாதப் பிரதிவாதங்களும் முருகையனுடைய அரசியல் முதிர்ச்சியிலும் உலக நோக்கின் முழுமைப்படுதலிலும் பெரும் பங்களித்தன.

1950களின் பிற்பகுதியிற் தமிழ்த் தேசியவாத அரசியலினின்று விடுபட்ட கவிஞர் முருகையனது சிந்தனை பின்பு எப்போதுமே மனித குல விடுதலை பற்றிய மேனோக்கிய சிந்தனையாகத் தன்னைத் தொடர்ந்தும் உயர்த்திக் கொண்டு சென்றது. உழைக்கும் மக்களுடைய உரிமைக்காகவும் சமூக நீதிக்காகவும் மனிதகுல விடுதலைக்காகவும் நடந்த எந்தப் போராட்டத்தையும் அவர் ஆதரிக்கத் தயங்கியதில்லை. எந்த ஒரு விடயத்திலும் தான் எடுக்கும் முடிவுகளைத் தீர யோசித்தே எடுத்த போதும் அம் முடிவின் விளைவுகள் தவறானவை எனத் தானாக உணர்ந்த போதும் தனக்கு உணர்த்தப்பட்ட போதும் தனது தவற்றை ஏற்பதில் அவருக்குத் தயக்கம் இருந்ததில்லை.

மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவது பற்றி அவர் மிகவுங் கவனமாயிருந்தார். ஆனால் அவரது மொழிச் செம்மை பழமை பேணலாக இருக்கவில்லை. தனித் தமிழ் போன்ற யதார்த்த விரோதமான போக்குக்களை அவர் ஏற்றவருமல்ல. தமிழ் மொழியின் ஆற்றலை அவர் அறிவார். அதன் வலிமைகளின் அடிப்படையிற் தமிழை ஒரு நவீன மொழியாக வளர்த்தெடுப்பது பற்றிய தீர்க்கமான பார்வை அவரிடமிருந்தது.

மரபுக் கவிதையின் வலிமையான கூறுகளை அவர் அறிவார். அவரது வாசிப்பும் எழுத்துப் பயிற்சியும் விடா முயற்சியும் அவரை மரபுச் செய்யுள் வடிவங்களை இலாவகமாகக் கையாளக் கூடிய ஒருவராகப் பயன்படுத்தின. சரியான சொற்களை அவர் தேடிச் செல்லாமலே அவை அவரை வந்தடையுமளவுக்கு அவரது கவித்துவமும் மொழிப்புலமையும் ஒன்றிணைந்திருந்தன.

அவரது கவிதைகள் மரபு சார்ந்த செய்யுள் வடிவங்களை ஒட்டி அமைந்தாலும் அவை எளிமை, தெளிவு என்பனவற்றை வலியுறுத்தின. அவற்றின் உள்ளடக்கம் நவீனத்துவமானதாயும் சமூகஞ் சார்ந்ததாயும் முன்னோக்கிய பார்வையுடையதாயும் இருந்தது. இதுவே அவரது கவிதைகளின் உயர்வும் உன்னதமுமாகின.

பாடு பொருளையும் செய்யுள் வகைகளையும் பொறுத்தவரை, ஈழத் தமிழ் கவிதை இலக்கியப் பரப்பில் விரிவும் ஆழமும் கொண்ட கவிதைகளைப் படைத்தோருள் அவர் முதன்மையானவர் என்பேன். அவரது பாநாடகங்களும் குறுங்காவியங்களும் ஈழத் தமிழ்க் கவிதைக்குப் பெருமை சேர்ப்பன. அனைத்தினும் மேலாக அவரது செய்நேர்த்தி அனைவரும் பின்பற்ற உகந்தது.

அவரது கவிதையை வழிநடத்திய முற்போக்கான சமூகப் பார்வையும் மாக்சியச் சிந்தனை நெறியும் அவரது திறனாய்வு, இலக்கியக் கட்டுரைகள் போன்ற அனைத்தையும் ஊடுருவி நின்றன. மொழி பற்றிய கருத்துக்களிலாயினும், மக்களின் தேவை, சமூக மேம்பாடு என்ற நோக்கங்களையே வலியுறுத்தின.

மிகவும் அடக்கமும் கனிவுங் கொண்ட கவிஞர் முருகையனுக்குள்ளே ஒரு குமுறும் எரிமலையும் இருந்தது. சமூக அநீதிகளையும் வஞ்சகத்தையும் மக்கள் விரோதச் செயற்பாடுகளையுங் காணும் போது அது பொங்கியெழுந்து தனது இருப்பை வெளிப்படுத்தியுள்ளது. முருகையனின் இந்தச் சினம் நிந்தனைச் சொற்களாக அல்லாது நிதானமான வலிய சொற்களாகவே வெளிப்பட்டமை கவனிக்கத்தக்கது.

தனிமனித உறவுகளிற் கனிவுங் கருணையும் மிக்க ஒரு மனிதராகத் தனிப்பட்ட முறையிற் தனக்கு இழைக்கப்பட்ட தவறுகளைப் பொறுத்துக் கொண்ட முருகையன் சமூக அநீதிகளைப் பொறுத்தவரை அவற்றைச் சிறிதேனும் பொறுத்துக் கொள்ளாதவராகவே இருந்தாரென்பதை நினைக்கும் போது மாக்சியம் வன்முறை பற்றியும் முரண்பாடுகள் பற்றியும் கொண்டுள்ள நிலைப்பாடே மனதிற்கு வருகிறது. முருகையனுடைய சினம் மனித நேயத்தின் வெளிப்பாடு என்பதில் நமக்கு ஐயம் இல்லை.

முருகையனை முக்கியமாக ஒரு கவிஞர் என்றேன். அவர் தன்னை முதன்மைப்படுத்திய கவிஞரல்ல. புதுக்கவிதையின் வருகை தமிழிற் கவிதையின் புதிய எழுச்சியாக மாற நீண்ட காலமெடுத்தது. அதேவேளை கவிதை பற்றிய பார்வை குழம்பியும் கவித்துவ உணர்வு நலிவு காணும் ஒரு போக்கும் இருந்தது. இக்காலப் பொழுதில் முருகையன் புதிய கவிஞர்களின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆற்றிய பங்கு பெரியது. அவரது நேரடி வழிகாட்டலில் உருவான நல்ல கவிஞர்கள் பலர் உள்ளனர். புகழ் நாட்டமற்ற தன்னலமற்ற வழிகாட்டியாக ஈழத் தமிழ்க் கவிதை உலகிற்கு முருகையனது பங்களிப்புப் பிற நல்ல கவிஞர்களும் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

- சிவா -

## சமூக சிந்தனையாளன் இ.முருகையன் மறைவிற்கு புதிய ஜனநாயக கட்சியின் அஞ்சலி

மூத்த கவிஞராகவும் இலக்கிய ஆற்றல்கள் நிறைந்தவராகவும் தமிழ் அறிஞராகவும் வாழ்ந்து வந்த இ.முருகையன் 27-06-2009 அன்று இயற்கையெய்தியமை நம் எல்லோருக்கும் பெரும் துயரமாகும். அவரது இழப்பு சமூக சிந்தனையாளர்களுக்கும் மக்கள் இலக்கியவாதிகளுக்கும் சமூக மாற்றம் வேண்டி நிற்கும் புதிய தலைமுறைப் படைப்பாளிகளுக்கும் பேரிழப்பாகும். கவிஞர் முருகையன் தனது ஆற்றல்கள் முழுவதையும் சமூகம், மக்கள், உழைப்போர், ஒடுக்கப்படுவோர் பக்கம் நின்றே வெளிப்படுத்தி வந்தார். அவரது எழுத்துக்களும் செயற்பாடுகளும் என்றுமே மேல் நோக்கி நின்றதில்லை. வெறும் புகழ், தன்னலம் பட்டம், பதவிகள் வேண்டி இருந்ததும் இல்லை. அமைதியும் எளிமையும் கொண்ட முருகையனிடம் சிந்தனை உறுதியும் செயற்பாட்டு வலிமையும் நிறைந்திருந்தது. அதற்கு அவர் வரித்துக் கொண்ட மாக்சிச பொதுவுடைமைக் கோட்பாடு தெளிவான சமூக விஞ்ஞானத் தளமாக அமைந்து கொண்டது. கவிஞர் முருகையன் தமிழ் இலக்கியப் பரப்பில் தனது ஆளுமையைப் பதித்து மக்கள் ஆதரவையும் ஏராளம் நண்பர்களையும் பெற்றிருந்தார். அதேவேளை சமூக அரசியல் தளத்தில் பொதுவுடைமைவாதிகளைத் தோழர்களாகவும் கொண்டி ருந்தார். அவர் புதிய- ஜனநாயகக் கட்சியின் மாக்சிச லெனினிச நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு கட்சியுடன் மிக நெருக்கமான நண்பராகவும் இருந்து வந்தார். அதன் அடிப்படையில் அவ்வப்போது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோச னைகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி வந்ததுடன் புதிய பூமி பத்திரிகையில் எழுதியும் வந்தார். சமூக மாற்றம் வேண்டி நிற்கும் சமூக அரசியல் தளத்தில் அவர் வழங்கிய பங்களிப்பின் கனதியை இவ்வேளை புதிய-ஜனநாயக கட்சி மத்திய குழு நினைவு கூர்ந்து அவருக்கு தனது ஆழ்ந்த

கொழும்பு
28-06-2009

புதிய-ஜனநாயக கட்சி
மத்திய குழு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

யூலை - ஆகஸ்ட் 2009

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



வவுனியா முட்கம்பி முகாம்களின் ஒன்றான மனிக் முகாமின் வெட்ட வெளியில் காட்போட் மட்டை மீது படுத்துத் தூங்கும் ஒரு அகதிக் குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் குழந்தையும்.





இந்திய மேற்கு வங்கத்தின் பாஸ்சிம் மிட்னிப்பூர் மாவட்டத்தின் லால்ஹார்கா பிரதேசத்தில் பொலீஸ் படையின் அராஜகங்களுக்கு எதிராக பழங்குடியினர் மக்கள் குழுக்கள் மூலம் அணிதிரண்டு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த இருபது வருடங்களாக யுத்தம் நடந்து வரும் காஷ்மீரில் கொலைகள் ஆட்கடத்தல் பாலியல் கொடுமை என்பன அதிகாரப் பக்கத்தால் இழைக்கப்பட்டு வருகிறது. அண்மையில் இரண்டு இளம் பெண்கள் கடத்தி செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய பின் கொலை செய்யப்பட்டனர். அதற்கு எதிராக மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதையே படங்களில் காணமுடிகிறது. மேலே கொல்லப்பட்ட பெண்களின் பிரேத நல்லக்க ஊர்வலம் மக்களின் ஆக்கிரோசத்தின் மத்தியில் இடம் பெறுகிறது.








அமெரிக்க கறுப்பு ஜனாதிபதி பராக் ஒபாமா நடாத்தும் ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்புப் போரில் பார்ஹா மாகாணத்தில் இடம் பெற்ற விமானத் தாக்குதலில் இரு நூறு பொது மக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் ஆறு வயதுக் குழந்தையின் படத்தையும் இத் தாக்குதலுக்கு எதிரான மக்களது ஆர்ப்பாட்டத்தையும் படங்களில் காணலாம்.





வெளியீடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.